# தப்புக் கணக்கு!



## சிவசங்கரி

தமிழ் எழுத்தாளர் உலகில் திருமதி. சிவசங்கரி மிகப் பெரிய சாதனைப் பெண்மணி. இவர் எழுத்துத் திறமை தமிழோடு நிற்பதாக நினைத்து விடாதீர்கள். இந்திய மொழிகளில் உள்ள உயரிய படைப்புகளை ஆராய்ச்சி செய்துள்ளார். முதன் முதலாக இவரது சிறுகதைத் தொகுப்பு இவரது சொந்தக் குரலிலே பேசி ஆடியோ காசெட்டாக வந்தது. அகில இந்திய அரசியல் தலைவர் களின் அறிமுகம் கொண்டவர். நானும் இருபத்தி ஐந்து ஆண்டு களாகப் பார்க்கிறேன். இவர் வீட்டைப் பராமரிப்பதில் அவ்வளவு அழகு...

நமது சகோதர இதழான 'பாக்கெட் நாவ'லில் முதன் முதலாக இரட்டை நாக்குகள் என்ற நாவல் எழுதினார்.

என் நன்றிக்குரியவர்களில் இவங்களும் ஒருத்தருங்க...

- ஆசிரியர்.



எப்போப்பட்ட வார்த்தையை, எத்தனை சுலபமாய் சொல்லி விட்டான் பாஸு!

அவன் சொல்வதை ஆமோதிப்பதுபோல சுந்தர் தலையை ஆட்டினானே! ஏன்... பேச்சைத் தொடங்கினவனே மாது தானே!

இவர்களெல்லாம் ஆண் பிள்ளைகள் தானா?

மனைவியுடன் குடும்பம் நடத்தும் நல்ல கணவன்கள் தானா?

என்ன கேள்வி கேட்டுவிட்டான்.

அயோக்கிய ராஸ்கல்!

ஆத்திரமும், அவமானமும் சீறிக்கொண்டு எழுந்து ஆத்மாவை அலைகழித்தன...

இரவு மணி பதினொன்று. தனிமையாய், வெறுமையாய் நீண்டு கிடந்தது. மெரீனா கடற்கரை மணல் பரப்பு முடிந்து கடல் ஆரம்பிக்கும் மேட்டில் ஆத்மா அமர்ந்திருந்தான். ஷூக்களை கடலில் வீசி எறிந்து விட்டதால் சாக்ஸ் அணிந்த பாதங்களை பொங்கி வந்த அலையின் நுரை அவ்வப்போது தடவிக் கொடுத்துங்கூட அவனின் உள்ளக் குமுறலை குறைக்கவில்லை.

எப்படிப் பேசினான்? எத்தனை சுலபமாய்ப் பேசினான்?

'படவா ராஸ்கல், என்னைப் பார்த்தா இந்தக் கேள்வியைக் கேட்கிறாய்?' என்று, ஆண் பிள்ளையாய் - லட்சணமாய் இரண்டு அறை விட்டிருக்க வேண்டாமா?

நினைக்க நினைக்க வலியில் இன்னும் மனசு பலவீனப் பட்டுப் போனது-

தான் வாயில்லா ஜீவன் மாதிரி அவர்களிடம் அகப்பட்டுக் கொண்டதும், வெந்த புண்ணில் வேலைச் செருகுவது போல அவர்கள் கேட்ட கேள்வியும், திரும்பத் திரும்ப நெஞ்சுக்குள் நர்த்தனம் ஆடின.

இவனோடு காரிலிருந்து இறங்கிய உமா, சுசிலா, சித்ரா கூட அந்தக் கேள்வியைக் கேட்டு அதிர்ந்துதானே போனார்கள்!

சாலையில் சென்ற பலரில் சிலர், பாஸுவின் கேள்வி காதில் விழுந்ததால் நின்று நிதானித்து, இவனை ஒரு நிமிஷம் பார்த்தார்கள் அல்லவா?

பாஸு! நீ பாஸ்டர்ட்!

மாது, சுந்தர் - நீங்களும் தான்!

கொதித்த நெஞ்சின் குமுறலாக ஆத்மாவின் கண்கள் கலங்கி, இரண்டு சொட்டு கண்ணீர் வெளிப்பட்டு கன்னத்தில் ஓடியபோது, அவன் அதைத் துடைக்கவில்லை.

தான் ஓர் ஆண் ஆயிற்றே; இதுநாள் வரை வாழ்க்கையில் அனுபவித்த எந்தத் துக்கத்துக்கும் கலங்காத ஆணாயிற்றே; சமுதாயத்தில் கௌரவமாய் வாழும் ஆணாயிற்றே; நாலு பேர்கள் மதிக்கும்படியான பணமும், புத்தியும், உருவமும் ஆணாயிற்றே; இப்படி பச்சைப் பிள்ளை மாதிரி அழலாமா என்று கொண்ட ஆணாயிற்றே! இப்படி பச்சைப் பிள்ளை மாதிரி அழலாமா என்று

எண்ணம் லவலேசமும் தோன்றாததால், சற்று முன் பெற்றுக் கொண்ட அவமானத்தைத் தாங்க முடியாதவனாய் பெரிசாய் அழ முற்பட்டான் [illegible]

சரியாக ஏழுமணி நோங்களுக்கு முன்னால், அதாவது மாலை [illegible] அளவில் - தன் அலுவலகத்தில் கடைசி நிமிஷ வேலைகளை கவனி[illegible] கொண்டிருந்த ஆத்மா, இனிமையாய்த் தொடங்கும் அந்த மாலை [illegible] பயங்கரமாய் முடியப் போகிறது என்று சத்தியமாய் எண்ணவில்லை -

அண்ணாசாலையில் நான்கு மாடிகளைத் தன்னுள் அடக்கிக் கொ[illegible] உட்கார்ந்திருந்த பணக்கார கட்டடம் ஒன்றில் அவனின் அலுவலகம் இரு[illegible] டிராக்டர்கள் உற்பத்தி செய்யும் அந்த கம்பெனியின் ஜெனரல் மேனேஜர் ஆ[illegible] - இருபதாயிரம் சம்பளம், கார், பர்னிஷ்ட் அபார்ட்மெண்ட், ஆள், அ[illegible] எண்டர்டெயின்மெண்ட் அலவன்ஸ், இத்யாதி, இத்யாதி -

ஏ.ஸி. செய்யப்பட்டிருந்த அறையில் அமர்ந்து ஸ்டெனோவுக்கு டி[illegible] டிக்டேட் செய்த நாழிகையில் மேஜையில் இருந்த நான்கு போன்களில் ஒ[illegible] பாடியது -

"ஹலோ ஆத்மா ஹியர் -"

"ஆத்மா! நான்தான் உமா - சாயங்காலம் ஆறு மணிக்கு இங்கே பார்[illegible] ஞாபகம் இருக்கிறது அல்லவா?"

சுந்தர் - உமாவின் இரண்டாவது பையனுக்கு அன்று பிறந்த நாள்.

இரண்டு நாட்கள் முன்னதாகவே அழைப்பிதழ் வந்து விட்டது; சுந்[illegible] நேற்று நேரில் பார்த்தபோது சொல்லி இருக்கிறான். இப்போது உமாவின் போ[illegible]

"உனக்கு ஆயிரம் வேலை இருக்கும்போது, இந்தத் தொந்தரவு வேறு எத[illegible] உமா? நீ போன் பண்ணி ஞாபகப்படுத்தினால்தான் நான் வருவேனா? ஆ[illegible] மணிக்கு வந்துவிடுகிறேன் - ஓ. கே?"

"இது என்ன சிரமம் ஆத்மா? உங்களை நானே கூப்பிட்டால் எனக்கு [illegible] திருப்தி... அவ்வளவுதான் -"

"ஆல் ரைட், ஸி யூ" -

ஆத்மா போனை வைத்துவிட்டு, பாதியில் நின்ற லெட்டரின் வாசகத்[illegible] தொடர்ந்தான்.

உமா போன்மூலம் ஆத்மாவை விருந்துக்கு அழைத்ததில் அதிசயம் ஒன்[illegible] இல்லை. ஆத்மாவை அறிந்த அத்தனை பேர்களுக்கும் அவன் ஒரு ஸ்பெஷ[illegible] மனிதன் தான். ஆத்மாவிடம், ஒரு மனிதன் தன்னிடம் இருக்க வேண்டும் என்[illegible] விரும்புவதெல்லாம் அமைந்திருந்தன. ஆண்களுக்கு, அவனைப் பிடிக்கும் [illegible] பெண்களுக்கு ரொம்ப ரொம்பப் பிடிக்கும்.

இன்னாரிடம் இன்னது பேச வேண்டும் என்ற கலையில் நிபுணன் அவ[illegible] விஷய ஞானம் அதிகம் உள்ளவனாதலால் ஆளுக்குத் தகுந்தபடி சுவாரசியம[illegible] பேசுவான். லாயரிடம் சட்டத்தையும், டாக்டரிடம் வைத்தியத்துறையி[illegible] ஆராய்ச்சி பற்றியும், குடும்பப் பெண்களிடம் குழந்தைகள் - குடும்பப் பராமரி[illegible] [illegible] மணிக்கணக்கில் பேச ஆத்மாவால் இயலும். கல்லூரிப் பெண்களி[illegible] [illegible] பற்றிப் பேசுவான். மாணவர்களிடம் அரசியலை விவாதிப்பா[illegible]



[illegible] காலேஜின் மாடர்ன் பெயிண்டிங்கை அவனுக்கு விளக்கவும் தெரியும். [illegible] த்தையா பாகவதரின் 'புவனேஸ்வரியாம்' என்ற மோகனா கல்யாணியை [illegible] னிமையுடன் ஸ்வர சுத்தமாய் பாடவும் முடியும். இவனை முதன் முதலில் [illegible] க்கும் ஆண்கள் சற்றே பொறாமையால், இவனால் கவர்ச்சியாய் மற்றவர்களை - [illegible] க்கியமாய்ப் பெண்களை - கவர முடிகிறதே என்று எண்ணுவதுண்டு. ஆனால் [illegible] வனோடு பழகப் பழக, உள்ளத்தில் ஆத்மாவுக்கு கல்மிஷம் கிடையாது [illegible] டிப்படையில் நல்லவன் என்று புரிந்து போனதும், அவர்கள் தங்கள் [illegible] பொறாமையை விட்டொழிக்க முயல்வதுண்டு.

ஆத்மாவுக்கு சொந்த ஊர் நீலகிரியில் உள்ள அரவங்காடு. அப்பா பெரிய எ[illegible] [illegible] ஸ்டேட் சொந்தக்காரராய் வாழ்ந்தவர் - இரண்டே பிள்ளைகள். மூத்தவன் பிரபு [illegible] ஆத்மா இளையவன். பிரபு கோயமுத்தூரில் பி.எஸ்.ஸி. அக்ரிகல்சர் படித்துவிட்டு [illegible] ப்பாவின் எஸ்டேட்டை கவனிக்க வந்துவிட்டான் -

ஆத்மாவுக்கு சின்ன வயசிலிருந்தே அரவங்காட்டை பிடிக்காது. 'ஹோர்' என்ற [illegible] லைப்பிரதேசமும், அதன் பசுமையும், தனிமையும், இனிமையும் அவனுக்கு [illegible] போர் அடித்ததால், பட்டப் படிப்பை முடித்த தருணத்தில் அப்பா அகாலமாய் [illegible] றந்த போதுங்கூட, அண்ணாவுக்குத் தம்பியாக எஸ்டேட் வேலைகளில் [illegible] றங்காமல், சென்னை சட்டக் கல்லூரியில் 'லா' படிக்கிறேன் என்று சேர்ந்தான். [illegible] லை புத்தி. இரண்டு வருஷத்தில் பி.எல். வாங்கிய கையோடு அஹமதாபாத்தில் [illegible] னஸ்டிட்யூட்டில் சேர்ந்து எம். பி. ஏ. பட்டத்தையும் சிறப்பாகப் பெற்றான்.

'என்னிடம் வேலைக்கு வா - என்னிடம் வேலைக்கு வா' என்று ஏக போட்டி - இவன் கல்லூரிக்கே வந்து, இவனைத் தங்கள் கம்பெனியில் பத்தாயிரம் [illegible] பாய் சம்பளத்தில் வேலை பார்க்க ஆர்டர் எழுதிக் கொடுத்துவிட்டுப் போன [illegible] ரு டெக்ஸ்டைல் மில்லில் முதலில் வேலை பார்த்தான் - பிடிக்கவில்லை. அதை [illegible] த்திவிட்டு கல்கத்தாவில் பாங்க் ஒன்றில் சேர்ந்தான். வேலை மனசுக்குப் [illegible] பிடித்து, பாங்கில் ப்ரமோஷனும் கிடைத்து, கல்கத்தாவிலேயே நிரந்தரமாய்க் [illegible] குடியும் குடித்தனமுமாய் ஆகிவிடலாம் என்று அவன் ஆசைப்பட்ட நே[illegible] [illegible] கைகூடாமல் அந்தப்பேரிடி அவனைத் தாக்கியது. அதன்பின் அவனுக்கு கல்கத்தாவே வெறுத்துப் போனது.

சென்னையில் அப்பாவின் நண்பர் ஜெர்மனியின் ஒத்துழைப்போடு [illegible] பிரும்மாண்டமான அளவில் டிராக்டர்களை உற்பத்தி செய்யத் [illegible] தொடங்கியதற்கும், இவன் சென்னைக்கு வர விருப்பம் கொள்வதற்கும் சரியாக இருந்தது. நண்பரின் மகன் என்ற முறையில் மட்டுமல்லாமல், கணிசமான [illegible] பணத்தை அந்தத்தொழிற்சாலையில் முதலாகவும் போட்டு, ஆத்மா, அந்த [illegible] க்கம்பெனியில் ஜெனரல் மேனேஜர் ஆனான்.

சென்னை வாழ்க்கை ஆத்மாவுக்குப் பிடித்தது. வட நாடுகளில் கண்ட யந்திர வாழ்க்கை இங்கு இல்லை. பார்ட்டி, சோஷியல் லைஃப், கிளப் என்றும் இருக்கலாம்; வேண்டாமென்றால் ஒதுங்கியும் இருக்கலாம். [illegible] - ஜிம்கானா, எம்.ஸி.ஸி.யில் மெம்பர் ஆனான். [illegible] - சீஃப் சாலையில் தோத்தியான பிளாட் [illegible] இவனுக்கு என்ன? கொடுப்பது கம்பெனி. இரண்டு பெட்ரூம், ஏ.ஸி. [illegible]

ராஜுக்கு வேலை ஆட்கள். ஆத்மாவின் சௌகர்யமான வாழ்க்கைக்கு குறைச்சல் ஒன்றும் இல்லை. 'உன்னைப் பார்க்க வேண்டும்போல இருக்கிறது ஆத்மா'- என்று அம்மா தொடர்ந்து அழைத்தால், புறப்பட்டுப் போய் அரவங்காட்டில் இரண்டு நாட்கள் கடனே என்று இருந்துவிட்டு ஓடிவந்துவிடுவான். ஆடிக்கொரு தரம், அமாவாசைக்கு ஒருதரம் என்று சென்னையில் ஏதாவது வேலை இருந்தால், அண்ணா பிரபு மட்டும் வருவான். காலில் வெந்நீரை ஊற்றிக் கொண்டது மாதிரி வேலையை முடித்துவிட்டு 'எஸ்டேட்டைவிட்டு ஒருநாள்கூட இருக்கமுடியாது' என்று சொல்லிக் கொண்டே திரும்பி விடுவான். அதுவும் வாஸ்தவம்தான். டீ எஸ்டேட், உருளைக்கிழங்கு சாகுபடி, மாட்டுப் பண்ணை, சீஸ் உற்பத்தி செய்வது எல்லாவற்றையும் அவன் ஒருவனாகக் கவனிப்பதால், அங்கு இங்கு அசைய முடியாதபடி வேலையின் இறுக்கம். சின்னப்பிள்ளையிடம் கொஞ்ச நாட்கள் இருக்கலாம் என்று அம்மா சென்னைக்கு வந்ததுண்டு. ஆனால் பிறந்த நாளாய் நீலகிரியிலேயே இருந்து விட்டதால் சென்னையின் வெயிலும், வியர்வையும் விரைவில் அவளைக் கிளப்பிவிடும். தவிரவும் பிரபுவின் பையனுக்கும், பெண்ணுக்கும் பாட்டி இல்லாவிட்டால் சரிப்படாது. சாதம் ஊட்ட பாட்டி, கதைசொல்ல பாட்டி என்று ஒவ்வொன்றுக்கும் அவர்களுக்கு பாட்டி வேண்டும்.

ஆக, ஆத்மா கிட்டத்தட்ட ஒரு தனிக்காட்டு ராஜாவின் வாழ்க்கையைத்தான் நடத்தி வந்தான் - நினைத்தால் சாப்பாடு, நினைத்தால் தூக்கம், நினைத்தால் வெளியே சுற்றுவது என்று.

ஒன்றை இங்கே சொல்லவேண்டும். எத்தனை பணமும் சௌகர்யங்களும் இருந்துங்கூட, பல விஷயங்களில் ஆத்மா அறிவு இழக்காதவனாகவே இருந்து வந்தான்.

குடிப்பான்; சிகரெட் பிடிப்பான். இதனால் கெட்டவன் என்று தள்ளிவிட முடியுமா என்ன?

அடிப்படையில் ஆத்மா நல்லவன்.

இந்தக் காலத்து பணக்கார ஆண்களிடமே உள்ள எல்லாப் பழக்கங்களும் அவனிடம் இருக்கவே செய்தாலும், எதையும் அத்துமீறிச் செய்பவனாக அவன் இல்லாதது ஒரு பெரிய விஷயம்தானே?

சென்னைக்கு வந்து மாசங்கள் சில ஆனபிறகு, ஒரு நாள் ஜிம்கானாவில் பாஸ்கரைச் சந்தித்தான் ஆத்மா.

பாஸ்கரும் அவனும் சட்டக் கல்லூரியில் இரண்டு வருஷங்கள் சேர்ந்து படித்தவர்கள். ஆத்மா மாதிரி பாஸ்கருக்கு அப்போது பணபலம் கிடையாது. ஆனால் கம்பீரத்திலும், உருவத்திலும், புத்தியிலும் ஆத்மாவுக்கு இணையானவன். வாழ்க்கையில் உயரவேண்டும் என்ற வெறி கொண்டவன்; சரியான சந்தர்ப்பவாதி.

சட்டக் கல்லூரி நாட்களில் ஆத்மாவும் அவனுமாய் அடித்த கொட்டங்கள் அநேகம். ஆத்மாவைப் போல சகஜமாய்த் தன்னால் மற்றவர்களைக் கவர இயலவில்லையே என்ற குறை பாஸ்கரின் மனசுக்குள் அப்போது இருந்ததும், இப்போது இருப்பதும் ஆத்மாவுக்குத் தெரிந்த சமாச்சாரமே.



படிப்பு முடிந்தது. ஆத்மா எம்.பி.ஏ. படிக்க அஹமதாபாத் போனான்; பாஸ்கர் அதிருஷ்டவசமாய் முன்னணி வக்கீலிடம் ஜூனியராய்ச் சேர்ந்தான்.

கொஞ்ச நாட்களுக்கு கடிதத் தொடர்பு இருந்தது. அப்புறம் அது தேய்ந்து, மறைந்து போனது.

ஜிம்கானாவில் பழைய நண்பர்கள் மீண்டும் சந்தித்த போது, இருவருமே அந்தஸ்தில் வெகுவாக உயர்ந்திருந்தார்கள்.

பாஸ்கர் சென்னையின் முன்னணி வக்கீலிடம் ஜூனியராக இருந்து தன் திறமையால் பிரபலமான வக்கீலாக விளங்குவது மட்டுமல்லாமல், அவரைக் கவர்ந்து அவர் வீட்டு மாப்பிள்ளையாகவே ஆகிவிட்டிருந்தான்.

பழைய சிநேகிதம் மீண்டும் துளிர்த்த அன்றே, பாஸ்கரின் வீட்டுக்குப் போய் அவன் மனைவி சித்ராவை ஆத்மா சந்தித்தான்.

ஒரே பார்வைதான் – வாழ்க்கையில் முன்னேறச் சித்ராவை ஓர் ஏணியாக பாஸ்கர் எண்ணிக் கைப்பிடித்திருக்கிறான் என்பது அப்பட்டமாய்த் தெரிந்தது.

பாஸ்கரின் அருகில் சித்ராவை நிறுத்தினால் ஜோடிப் பொருத்தம் ரொம்ப சுமார்தான். சித்ரா மாநிறத்துக்கும் மட்டமான நிறம். குட்டை என்றோ, உயரம் என்றோ குறிப்பிட்டுச் சொல்ல முடியாதபடி ஓர் உயரம். அதற்குச் சற்றே அதிகமான, பூசின திணுசில் பருமன்.

ஆனால் சித்ராவின் பற்கள் வெண்மையாய் வரிசையாய் இருந்தன. சிரிக்கும் போது கண்களிலும், அந்த முத்துப் பற்களிலும் ஒரு தனிக் கவர்ச்சி. மற்றபடி அவளுக்கு தலைமுடி ரொம்ப அழகு. தொடையையும் தாண்டிக் கொண்டு முழங்காலைத் தொட முயற்சிக்கும் அடர்த்தியான - கருமையான - அழகான கூந்தல்.

இவர்களுக்கு இரண்டு வயசு ஸ்யாமா ஒரே பெண்!

சித்ரா அளவாகப் பேசினாள், சிரித்தாள், பழகினாள். பழகிய சில நாட்களிலேயே நண்பனைச் சரியாய்ப் புரிந்து கொண்டான் ஆத்மா.

பாஸ்கருக்கு பணத்திமிர் ஏகமாய் ஏறியிருந்தது. தான் ஒரு தலைசிறந்த வக்கீல் என்ற உண்மையைப் புரிந்து கொண்ட திணுசில், ஒரு கால 'பா'வம் முகத்தில் எந்நேரமும் தாண்டவமாடியது.

போட் கிளப் ரோடில் நவீன பங்களா, பென்ஸ் கார், அதிகமான வசதிகளுடன் கூடிய வாழ்க்கை என்று பாஸ்கர் சக்கைபோடு போட்டுக் கொண்டிருந்தான்.

இந்தப் பத்து வருஷகால இடைவெளியில் பாஸ்கர் ஒரு மொடா குடியனாக மாறி இருந்ததையும், ஆத்மா முதல் நாளே புரிந்து கொண்டான்.

மாலை மணி ஏழானால் தலைபோகிற வேலையைக் கூட ஒதுக்கி வைத்துவிட்டு, நண்பர்களுடன் மாடிக்குப் போய் விடுவான் - ஸ்காட்ச் தண்ணீராக ஓடும். மணி பத்து அல்லது பதினொன்றை நெருங்கும்போது சித்ரா போடும் உணவை உண்டபின் நண்பர் கூட்டம் கலைந்து பாஸ்கர் படுக்கப் போவான் - இத்தனை குடி, கண்விழிப்பு கூத்திலும் காலை நான்கு மணிக்கெல்லாம் யாரோ உலுக்கிவிட்டது போல எழுந்து விடுவான். புத்தி முதல் நாள் குடிமயக்கம் இல்லாமல் பளிச்சென்று இருக்கும். நாலரை மணிக்கு கீழே

இருக்கும் அலுவலக அறைக்குள் நுழைந்தால் கோர்ட்டுக்குப் புறப்படுவதற்குள் தொழில் சிம்மமாக அத்தனையும் கரைத்துக் குடித்து விட்டிருப்பான். அப்படி ஒரு சுபாவம் -

எத்தனையோ நண்பர்கள் இருந்தாலும், வாரத்துக்கு இரண்டு முறைகளாவது பாஸ்கர் சந்திக்கும் நெருக்கமான சிலரில் ஆத்மாவும் ஒருவனாவான்.

உமா - சுந்தரும், சுசீலா - மாதவனும் ஆத்மாவுக்குப் பழக்கமானது பாஸ்கர் மூலம்தான்.

சுந்தர் பட விநியோகஸ்தர் ஒருவரின் ஒரே மகன். பெரிய புள்ளி. பட்டப் படிப்பை முழுமையாய்ப் படிக்காமல் - படிப்பு வராத காரணத்தால் - விட்டுவிட்டு, பட விநியோகத் தொழிலில் இறங்கி, இன்று அதில் கரை கண்டு நிற்பவன். பணம் காசுக்குப் பஞ்சம் இல்லை. உமா அவன் தூரத்து உறவுப்பெண். அவர்களுக்குச் சின்ன வயசிலேயே கல்யாணம் ஆகி விட்டதால் இரண்டு ஆண் குழந்தைகள் உண்டு.

மாதவன் தமிழ்நாட்டில் பேர்பெற்ற ஆடிட்டிங் கம்பெனி ஒன்றின் கடைக்குட்டி பார்ட்னர். புத்திசாலி. தொழிலில் சூரன். பாஸ்கருக்கும், சுந்தருக்கும் தொழில் ரீதியில் அறிமுகம் ஆனவன். அவன் மனைவி சுசீலா எம்.ஏ., சைகாலஜி. பெண்கள் கல்லூரி ஒன்றில் லெக்சரராக இருக்கிறாள்; குழந்தைகள் இல்லை.

எது எப்படிப் போனாலும் வாராவாரம் சனிக்கிழமை தப்பாமல் பாஸ்கர், சுந்தர், மாது, ஆத்மா கூடுவதுண்டு. மறுநாள் ஞாயிறு. அதனால் விடிய விடியக் கூத்தடித்தாலும் கேள்வி இல்லை. முடிந்தால் அவரவர் மனைவிகளையும் கூட்டி வருவார்கள். அப்படி முடியாவிட்டாலும் ஆண்கள் மட்டுமாவது கூடுவது நிச்சயம். சாதாரணமாய் இந்தச் சந்திப்பு பாஸ்கரின் வீட்டிலோ, அல்லது சுந்தரின் வீட்டிலோதான் இருக்கும்.

மாதுவோடு அவன் வயசான பெற்றோர்கள் இருக்கிறார்கள். குடி, சிகரெட் என்பதெல்லாம் மனிதனைக் கெடுக்கும் பழக்கங்கள் என்று நம்புகிறவர் அவன் அப்பா. அதனால் வலிய அங்கு போய்த் தங்கள் மரியாதையைக் கெடுத்துக்கொள்ள மாட்டார்கள். பையன் குடிப்பது தகப்பனாருக்குத் தெரியும் என்றாலும், தோளுக்கு மீறிய பிள்ளையை வாய் வார்த்தைகளால் ஏதும் சொல்லமுடியுமா, என்ன? மாது மனைவியுடனோ, இல்லை தனியாகவோ வெளியில் போய் விட்டு விடியும் தறுவாயில் சில நாட்களில் திரும்புவது கூட அவர் அறிந்ததுதான். பிள்ளையிடம் எதுவும் சொல்லமாட்டார். மருமகளைத் தனியாகப் பார்த்து 'உடம்பு கெட்டுப் போகப் போகிறது. ஏனம்மா ராக் கண் முழிக்கணும்?' என்று மனைவியை விட்டுச் சொல்லச் சொல்லுவார்.

ஆத்மா தனிக்கட்டை. அவன் இல்லத்தில் நண்பர்கள் ஒன்று சேருவதற்கு தடை ஒன்றும் இல்லை. மனைவிகள் வராத தினமானால், எங்காவது ப்ளூ மூவி கிடைத்ததென்றால், அதை ஆத்மாவின் இல்லத்தில் தான் அனேகமாய்த் திரையிட்டுப் பார்த்து ரசிப்பார்கள்.

நண்பர்கள் நால்வரும் பணத்திலும், அந்தஸ்திலும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக இருந்ததால், நீ இன்று செலவழி, நான் நேற்று செலவழித்தேன் என்ற



போட்டிப் பேச்செல்லாம் இருக்காது-

சந்திப்பார்கள். தாராளமாய்க் குடிப்பார்கள். கேலி செய்து கொள்வார்கள். வம்படிப்பார்கள். விவாதிப்பார்கள். பாடுவார்கள். மற்றவரைப் பாடச் சொல்லிக் கேட்பார்கள். சாப்பிடுவார்கள் - பின்பு பிரிந்து போவார்கள்.

இப்படி இல்லாமல் சில வேளைகளில் குடி அதிகமாகி, வார்த்தைகள் கொஞ்சம் நாசுக்கின்றி வெளிவந்த நாட்களும் உண்டு. ஒவ்வொருவரும் ஒவ்வொரு தினுசு.

போதை அதிகமானால் பாஸ்கர் தன் தொழிலில் உள்ள மற்றவர்களை, தனக்கு பிடிக்காதவர்களைத் தடித்த வார்த்தைகளால் திட்டுவான்.

சுந்தர் ரொம்பப் பேசாமல் அடங்கிப் போயிருப்பான்.

மாது, தனது இல்லாத குழந்தையை நினைத்து, வயசான பெற்றோரை நினைத்து, என்றோ நடந்த வேதனை சம்பவத்தைச் சொல்லிச் சொல்லி அழுவான்.

ஆத்மா தான் பெரிய பாடகனென்று நினைப்பில் ராக ஆலாபனை செய்து, மற்றவர்கள் போதும் போதும் என்கிற வரையில் பாடிக் கொண்டே இருப்பான்.

சிநேகிதர்கள் சந்திக்கும் நாளெல்லாம் மேற்சொன்ன தினுசுகளில் நடந்து கொள்ள மாட்டார்கள். அதான் சொன்னேனே, தப்பித் தவறிக் குடிவெறி அதிகமாகும் நாட்களில்தான் இந்த கோணா மாணாவெல்லாம் என்று-

ஒருத்தனுக்கு போதை அதிமாகி விட்டதென்றால் மற்றவர்கள் புரிந்து கொண்டு விட்டுக்கொடுத்து, அவனைச் சமாதானம் செய்வார்கள். மனைவிமார்கள் கூட இருக்கும் நாட்களில், அவர்களோ நிலைமையை உணர்ந்து ஒன்றுபட்டுச் சமாளித்து விடுவதும் உண்டு.

இப்படி எத்தனையோ முழிப்புடன் பழகியும்கூட இன்றைக்கு நடந்த சம்பவம் ரொம்ப அசிங்கமாகத்தான் முடிந்து விட்டது.

ஆத்மா சுந்தரின் பங்களாவுக்குள் நுழைந்தபோது மணி ஆறேகால்.

சுந்தரின் வீடு மாம்பலத்தில் இருந்தது. பழையபாணி மாளிகை. சுற்றிலும் தென்னந்தோப்பு, மரங்கள். வாசலில்தான் - புல்வெளியில் கலர் விளக்குகள் நிறையப் போட்டு, டீ பார்ட்டிக்கு அங்குதான் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

நண்டும் சிண்டுமாய் ஏகக் குழந்தைகள் -

பட விநியோகஸ்தன் அல்லவா? இங்கும் அங்குமாய்ப் பட உலகப் புள்ளிகள்-

கேக் வெட்டப்பட்டது-

முந்திரி கேக், வெஜிடபிள் ஸமூஸா, மசாலா வடை, ப்ரூட் ஸாலட், ஐஸ்க்ரீம், காபி - இன்னும் என்னென்னவோ.

வந்திருந்த குழந்தைகள் ஓடியாடி அடித்து முடிந்ததும் பெரியவர்களுடன் வீடு திரும்பத் தொடங்கியபோது மணி எட்டு.

"கமான், லெட் அஸ் கோ அப்..." - பாஸ்கர் வழக்கமான நேரம் தவறிவிட்டதால் தவித்தான்.

"ஒரு நாள் கொஞ்சம் தாமதமானால் என்ன? பொறுங்களேன் - விருந்தாளிகள் போய்விட்டும்" - உமா அவர்களைப் பொதுவாகக் கேட்டுக்கொண்டதால், மேலும் சற்று நேரம் உட்கார்ந்தார்கள்.

மணி எட்டரை. இனி பாஸ்கர், சுந்தர் இருவருக்குமே தாங்க முடியாது -

மனைவியை அழைத்தான் சுந்தர் - "நாங்க மாடிக்குப் போகிறோம் - இருக்கிறவர்களை நீயே அனுப்பிவிடு" என்று சொல்லிவிட்டு நண்பர்களுடன் மாடிக்குப் போனான்.

ஏ.ஸி. அறை உடம்புக்கு இதமாக இருந்தது.

பாட்டிலைத் திறந்து நாலு கிளாஸில் ஊற்றினான் சுந்தர். அங்கேயே இருந்த ஃப்ரிஜ்ஜிலிருந்து சோடா, ஐஸ்கட்டிகளை ஆத்மா எடுத்தான்.

"சியர்ஸ்..." கிளிங் என்று சின்னதாய் ஐஸ் கட்டிகள் குலுங்க, கண்ணாடி டம்ளர்களை தொட்டும் தொடாமலும் மோதிக் கொண்டபின் குடிக்கத் தொடங்கினார்கள்.

"திஸ் ஈஸ் கிரேட்... வெயிலுக்கும், செம்மையாய் வேலை செய்துவிட்டு வந்ததற்கும், இந்த ட்ரிங் எத்தனை ஹெவன்லியாக இருக்கிறது!"

ஒருமணி நேரத்துக்கு முன்னாலே அடைந்திருக்க வேண்டியதை தாமதத்துடன் குடித்த பாஸ்கர் பேசினான்.

கேலிப் பேச்சிலும், சிரிப்பிலும் வெகுசீக்கிரமாகவே ஒரு முழு பாட்டில் உள்ளே போய்விட்டது.

இவர்கள் இரண்டாவது பாட்டிலைத் திறப்பதற்கும், கீழ் வேலைகள் முடிந்து, அவர்கள் மனைவிகள் மேலே வருவதற்கும் சரியாக இருந்தது.

"இன்றைக்கு லேடீஸ் நமக்கு கம்பெனி கொடுக்க வேண்டும்... லெட்அஸ் செலிபரேட் டுடே டிஃபரண்ட்லி"

இப்படி என்றாவது இவர்கள் பலவந்தப்படுத்தினால் ஒரு வாய் அருந்தும் பழக்கமும் அவர்களின் மனைவிகளுக்கு உண்டுதான்-

வேண்டாம் என்று சொல்வதைவிட, சரி என்று சம்மதித்து விட்டு, ஒரு டம்ளர் ட்ரிங்கை வாங்கி வைத்துக் கொண்டு மாலை முழுவதையும் தள்ளும் வித்தை அவர்களுக்குத் தெரியும்.

சுந்தர் ஷெர்ரியை மூன்று கிளாஸில் ஊற்ற, ஆத்மா எடுத்துத் தந்தான்.

பணியாள் இவர்கள் கொறிக்க வறுத்த முந்திரி கருவடாம் கொண்டுவந்து வைத்தான்.

பேச்சு எங்கெல்லாமோ ஓடி எதையெல்லாமோ தொட்டது.

ஷெர்ரியைக் குடிக்காமல் கையில் வைத்துக்கொண்டிருப்பதை பாஸ்கர் ஆட்சேபிக்க, மற்ற ஆண்களும், என்றும் இல்லாத திணுசில் - பெண்களைக் குடித்தே ஆக வேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.

"சுசி பீ எ ஸ்போர்ட் - கல்ப் இட்" மாதுவின் கெஞ்சலுக்கு சுசிலா அடிபணிந்தாள்.

அடுத்து சித்ரா, பின் உமா.

"தொண்டை எரிகிறது."

கண்ணில் ஜலம்வர முகத்தைச் சுருக்கிக்கொண்டாள் சித்ரா.



"நீங்க குடியுங்கள் - நாங்க வேண்டாம் என்றா சொல்கிறோம்? எங்களை எதற்காகப் பலவந்தப்படுத்துகிறீர்கள்!"

உதட்டைப் பிதுக்கி, கண்களைக் கொட்டி, முகத்தைக் கோணலாக்கும் உமாவைப் பார்த்து மற்றவர்களுக்கு சிரிப்பு.

"இன்னொரு சின்ன கிளாஸ்" - பாஸ்கர் மேலும் ஷெர்ரியை ஊற்ற எழுந்தான்-

"ஐயோ... வேண்டாம்..."

"நோ... நாட் எ டிராப்..."

ஒரே கலாட்டா, சிரிப்பு, கேலி.

அன்றைய பார்ட்டி வெகு அமர்க்களமாய் நடந்ததில் உமாவுக்கு ஏகத் திருப்தி... வழக்கமாய்ச் சற்று ஒதுங்கி இருக்கும் அவளும், சித்ராவுமகூட சிரித்துப் பேசி, பொழுதைக் கழித்தார்களென்றால், மற்றவர்களின் கொண்டாட்டத்துக்குக் கேட்க வேண்டுமா?

மணி பதினொன்று-

"எனக்குப் பசிக்கிறது" - என்றாள் சுசிலா.

"எனக்கும்" - என்றாள் சித்ரா.

"கீழே போகலாமா? சமையல்காரனை சாப்பாட்டை சூடு பண்ணச் சொல்லட்டுமா?" என்றாள் உமா.

"என்ன சமையல்?" மாது கேட்டான்.

உமா யோசித்துச் சொன்னாள்.

"வொய் காண்ட் வி ஆல் கோ டு ஸம் பிளேஸ் அண்ட் ட்ரை சம்திங் நியூ?"

"சிக்கன் சாப்பிடலாம். வெஜிடேரியன் சாப்பாடு வேண்டாம்-"

"வெளியே நான் - வெஜிடேரியன் ஹோட்டலுக்குப் போய் கோழி குருமாவும், ஆப்பமும் சாப்பிடலாம்" என்றான் சுந்தர்.

"ஐயே - நீங்க போய்விட்டு வாருங்கள் - நாங்க இங்கேயே சாப்பிடுகிறோம்-" உமாவும், சித்ராவும் சுத்த சைவம்.

"அப்போது நாங்களும் போகவில்லை - லெட் அஸ் ஸிட் ஹியர் அண்ட் ட்ரிங்" பாஸ்கர் அளவு மீறிக் குடித்து விட்டது தெரிந்தது.

"இனியும் வெறும் வயிறுடன் குடித்தால் வேறு வினை வேண்டாமே. வா உமா - அங்கே வெஜிடேரியன் டிஷ் ஆர்டர் பண்ணிச் சாப்பிடலாம். நாழியாகிறதே -" என்று சித்ரா கிளம்ப 'எங்களுக்கும் வீட்டுக்குப் போகணும்; மாமியாரிடம் சுருக்க வந்து விடுவதாகச் சொல்லி இருக்கிறேன்' - என்று சுசிலாவும் எழுந்தாள்.

"டாம் யுவர் மாமியார்" என்றான் பாஸ்கர்.

மாது அவனுக்கு பதில் சொல்லவில்லை. இவன் வாயைத் திறந்து பேசினால், வார்த்தைகள் மேலும் மேலும் வளரும் என்பது தெரிந்ததுதானே!

எல்லோரும் கீழே வந்தார்கள்.

ஆத்மா நல்ல மூடில் இருந்தான்.

பாஸ்கரின் பென்ஸ் வண்டியில் பெண்கள் ஏற ஏதுவாய்க் கதவைத் திறந்து பிடித்தான். பின் மற்றவர்களை நோக்கி - "நான் இந்த வண்டியை ஓட்டுகிறேன்

- நீங்கள் மாதுவின் அம்பாஸிடரில் வாருங்கள். ஃபாலோ மீ'' என்று சொ
விட்டு வண்டியைக் கிளப்பினான்.

பென்ஸ் ஓர் அருமையான கார் - தொட்டால் விமானம் மாதிரி பறக்கு

ஆத்மா கார் ஓட்டுவதில் கெட்டிக்காரன். சோழவரம் ரேஸில் - முன்பு பல
காலத்தில் - மோட்டார் சைக்கிள், கார் ஓட்டிப் பரிசு பெற்றவன்.

பென்ஸை ஸ்டார்ட் செய்து ஜி. என். செட்டி சாலையில் திருப்பினான்.

பின்னால் உமா, சித்ரா. இவன் பக்கத்தில் சுசிலா.

ரியர் மிரரில் பார்த்தான் - அம்பாஸிடர் சாலையில் மெள்ளத் திரும்
தெரிந்தது.

ஒரு வேடிக்கை செய்தால் என்ன?

அம்பாஸிடர் கார் ஸீல் பிரிக்காத புது வண்டி. அதை என்ன முயன்
வேகமாய் ஓட்ட இயலாது - ஸோ, ஒரு விளையாட்டு விளையாடினால் என

தன் எண்ணத்தை வெளியில் சொன்னான்.

உற்சாகமான மன நிலையில் இருந்த மற்ற மூவரும் உடனே ஒ
கொண்டார்கள்.

அம்பாஸிடர் கிட்டே வந்ததும் அவர்களை தன்னை ஓவர்டேக் பண்
அனுமதித்து விட்டு, மறுநிமிஷம் தன் காரின் வேகத்தை அதிகரித்து அ
வண்டியை முந்தி, ''எங்களைப் பிடியுங்கள்'' என்று ஜன்னல் வழிய
கத்திவிட்டு, ஆக்ஸிலேரேட்டரை அழுத்தினான்.

ஜெமினி சர்க்கிள் வந்தது - அதை 'விர்' என்று ஐந்து முறைகள் சுற்றினா

அம்பாஸிடர் காரை ஓட்டின பாஸ்கருக்கும் சூடு பிறந்திருக்க வேண்
முடிந்த அளவு வேகமாய்க் காரைச் செலுத்தி பென்ஸைத் தொடர்ந்தான். இர
வண்டிகளும் ஜெமினி சர்க்கிளைச் சுற்றின சுற்றில், சாலையில் ட்ராபிக் நி
போனது - பின்பு இவர்களின் திட்டப்படி புகாரிக்குச் செல்லும் பாதை
வண்டியை விடாமல், மெரினா கடற்கரையை நோக்கி மிகவும் வேக
ஓட்டினான் ஆத்மா-

பாஸ்கரின் அம்பாஸிடர் காந்தி சிலையிடம் திரும்பி, க்வீன் மேரீஸ் காலே
கடந்து, பாதி தூரம் வருவதற்குள் சாலையின் அந்தக் கோடியில் உள்ள அண்
சமாதி வரை சென்று, லாவகமாய்த் திரும்பி இவர்களைப் பாதி வழி
சந்தித்தான் ஆத்மா.

பென்ஸ் அம்பாஸிடரைத் தாண்டும் போது பெண்கள் மிகு
சிறுபிள்ளைத்தனத்துடன் கைகொட்டிச் சிரித்து மகிழ்ந்தார்கள்-

பாஸ்கர் அந்த இடத்திலேயே வண்டியை நிறுத்தி, திருப்பி பென்ஸை
தொடரத் தொடங்கினான் - அதற்குள் ஆத்மா காந்தி சிலையிடம் வண்டியை
திருப்பி இவர்களைப் புயல் வேகத்தில் எதிர்கொண்டு தாண்டிப் போனான்.

பத்து நிமிஷத்துக்குள் பாஸ்கர் வண்டியைத் திருப்ப முயல்வதும், அதற்
பென்ஸ் கடந்து செல்வதும், பெண்கள் கைகொட்டி 'ஷேம், ஷேம்' என்
கத்துவதும் பல முறைகள் நடந்துவிட்டன.

பாஸ்கருக்கு முகம் சிறுத்து விட்டது.



முதல் காரில் சிரிப்பான சிரிப்பு. எல்லோரும் குழந்தைகளாகவே மாறி
ந்தார்கள்-

டி மணி சாலையில் வண்டியைச் செலுத்தி, புகாரியின் வாசலில் கொண்டு
த்தினான் ஆத்மா.

து நிமிஷங்கள் கழித்து அம்பாஸிடரும் பக்கத்தில் வந்து நின்றது.

ஆத்மா தான் ஒரு பெரிய வெற்றி வீரன் என்ற பாவனையோடு நின்றிருந்தான்.

அம்பாஸிடரிலிருந்து இறங்கிய பாஸ்கரிடம், ''என்ன, தோற்றுப் போனீர்களா?
சொல்கிறேன் என்று கோபிக்காதீர்கள். இன்னும் வேகமாய்க் காரோட்ட நீங்கள்
றுக்கொள்ள வேண்டும் பாஸ்'' என்றாள் சுசிலா - ஒரு பெரு வெற்றி அவளுள்
ஜாலம் செய்தது - உமாவும் சித்ராவும் இந்தக் கேலியை அனுபவித்துச்
சிரித்தார்கள்.

''வாட் நான்ஸென்ஸ் இஸ்'' என்றான் மாது வண்டியை விட்டு இறங்கிக்
கொண்டே-

''இதென்ன விளையாட்டு! எதுக்கும் ஒரு லிமிட் இல்லை?'' - என்று
சீறினான் சுந்தர்.

இவர்கள் நிஜமாக கோபத்தோடு இருக்கிறார்கள் என்பது புரியச் சட்டென்று
சுசிலா அடங்கிப் போனாள்.

திடீரென்று ஓர் அமைதி-

புகாரி வாசலில் இருந்த பூக்காரப் பையன்கள், பக்கத்துக் காரில் இருந்த
வித்தார்கள், அனைவரின் கவனமும் இவர்கள் பக்கம் திரும்பியது.

பாஸ் மெல்ல கிட்டே வந்தான்-

குரூரமாய்ச் சிரித்தான்-

''என்ன ஆத்மா, ஆர் யூ ஏ மேன்? உன் மனதில் என்ன நினைத்துக் கொண்டு
ருக்கிறாய்? இந்த ஸ்பீடில் ஓட்டினாயே, ஆக்ஸிடெண்ட் ஆனால் என்ன ஆகி
ருக்கும்? நீதான் பெண்டாட்டி இல்லாதவனென்றால் எங்களையுமா உன்
லைக்குக் கொண்டுவரத் திட்டம் போடுகிறாய்? யூ வாண்ட் அஸ் டு பிகம்
டோயர்ஸ் ஜஸ்ட் லைக் யூ?''-

முன்பு பாதத்தோடு நின்றிருந்த அலைகள் இப்போது இன்னும் கொஞ்சம்
ண்டு ஆத்மாவின் நீட்டிய முழங்கால், தொண்ட பகுதிகளைத் தடவத்
தொடங்கின.

ஆத்மாவின் அழுகை ஓய்ந்தபாடில்லை!

'என்ன கேள்வி கேட்டுவிட்டான் பாஸ்!'

'மற்ற இருவருக்கும்கூட பாஸ்வின் பேச்சு சரியாகத் தான் இருந்ததா?'

'அடிமனசில் இவர்களுக்கெல்லாம் என்மேல இத்தனை ஆத்திரம் மண்டிக் கிடக்கிறதா?'

'ஸ்கௌண்ட்ரல்ஸ்-'

'வடிகட்டின அயோக்கியர்கள்.'

பாஸ்கரின் பேச்சைக் கேட்டு ஸ்தம்பித்துப்போனான் ஆத்மா. அல்லவா?

குதிக்கவில்லை. கத்தவில்லை - ஒரே ஒரு நிமிஷம் மௌனமாய், ஜடமாய் மரத்துப்போய் நின்றான். சுய நினைவு வந்ததும் இந்தக்கேவலமான மனுஷக்கூட்டத்தை விட்டு ஓடிப் போக வேண்டும்; இவர்களின் முகம் தெரியாத, குரல் கேட்காத இடத்துக்கு, ஓட்டமாய் ஓடிவிட வேண்டும் என்ற நினைப்பு மட்டும் எழ, பதில் ஒன்றும் பேசாமல் சட்டென்று நாலே எட்டில் சாலையைக் கடந்தான்.

எதிரில் வந்த முதல் டாக்ஸியில் பாய்ந்து உட்கார்ந்து "ஓட்டு... வேகமாய் ஓட்டு" என்று பணித்தான்.

"எங்கே சார் போகணும்?"

'எங்கே போவது? தனியான இடம்... இவர்கள் துரத்திக் கொண்டு வராத இடம் எங்கே இருக்கிறது?'

'எங்கு போவதானாலும் கார் வேண்டும் - அது சுந்தரின் வீட்டில் இருக்கிறதே!'

நேராக அங்கு ஓட்டச் சொன்னான்.

வாசலில் இறங்கி பத்து ரூபாய்த்தாள் ஒன்றை வண்டியோட்டியிடம் வீசிவிட்டு, இவன் உள்ளே ஓடினான்.

கூர்க்கா எழுந்து நின்று சலாம் செய்தான்.

போர்டிகோ அருகில் இருந்த தன் வெள்ளை ஸியட்டில் ஏறி, ஸ்விட்ச் வாயில் தொங்கின சாவியைத் திருப்பிக் காரை ஸ்டார்ட் செய்து, ரூம்ம் என்ற பெரிய உறுமலோடு சாலைக்கு வந்தான்.

இது நாழிகை டாக்ஸி டிரைவர்முன் கட்டுப்பாட்டோடு இருந்தவனுக்கு, தனிமை கிடைத்ததும் துக்கம் பீறிக்கொண்டு எழுந்தது.

சாலையில் கவனத்தைச் செலுத்தி நிதானமாக ஓட்ட முடியாதபடி படபடப்பு.

மெரினாவுக்கு வந்தான். காந்தி சிலை பின்பக்கம் வண்டியை நிறுத்திவிட்டு, இறங்கி மணலில் நடந்தான்.

எழுந்த வேதனையில், ஆத்திரத்தில், காலுக்கடியில் இருந்த மணலை எட்டி எட்டி வேகமாய் உதைத்தான்-

ஜலத்தின் அருகில் வந்ததும் காலில் இருந்த ஸ்லிப் ஆன்களைக் கழட்டி "பாஸ்கர் யூ பாஸ்டர்ட்" என்று உரக்கக் கத்திச் சமுத்திரத்தில் ஒன்றன் பின் ஒன்றாக வீசி எறிந்தான்.

மணல் மேட்டில் தொப்பென விழுந்தான்.

தன் இயலாமை நெஞ்சைக் குத்த, தன் மேலேயே பச்சாதாபம் எழ, வாய்விட்டு அழத்தொடங்கினான்-

கிட்டத்தட்ட கால்மணி நேரம் போல் அழுத பின், 'சீ! இது என்ன அசட்டுத்தனம்' என்று தன்னை உலுக்கிக் கொண்டான்.

தொடைப் பகுதிகள் அலைகளின் ஈரத்தால் சிலுசிலுத்தன.

'மணி என்ன?'

உப்புத் தண்ணீர் பட்டதில் உடம்பு கசகசத்தது.



வீட்டுக்குப் போய் ஷவரில் ஜில்லென்று குளித்து, ஸ்காட்சை நீட்டாகச் சாப்பிட்டால் தேவலை போல இருந்தது.

எழுந்தான். தூரத்து இருளில் வெள்ளை முயல்குட்டி மாதிரி தெரிந்த காரில் ஏறிக் கொண்டான்.

ஸ்டீரிங் வீலைப் பிடிக்க முடியாதபடி, கைகள் வியர்த்து நடுங்கின.

சிகரெட் பாக்கெட்டை எடுத்து, ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டான்.

'அயோக்கிய ராஸ்கல்!'

'ஹௌ கேன் ஹி டாக் டு மீ லைக் தட்...?'

திரும்பத் திரும்ப இதே குமுறல்-

கமாண்டர் - இன் - சீஃப் சாலையில் வண்டி திரும்பி அந்த எட்டு மாடி கட்டிடத்தை நெருங்கிக் காம்பவுண்டுக்குள் நுழைந்ததும், நீல நிற புது அம்பாஸிடர் பக்கவாட்டில் நிற்பது தெரிந்தது.

'அவர்கள்தான்' - வண்டியின் நம்பரைப் பார்த்தான். 'அவர்களேதான்.'

'இதயத்தை அறுக்கிற மாதிரிப் பேசிவிட்டு, இப்போது சமாதானம் செய்ய வந்திருக்கிறார்களா? வரவேற்பு அறையில் உட்கார்ந்து கொண்டு என் வரவை எதிர் பார்க்கிறார்களா?'

'யாருக்கு வேண்டும் இந்தத் திமிர்பிடித்தவர்களின் ஸாரியும் சமாதானமும்?'

ஆத்மாவுக்கு பாஸ்கரையும், மாதுவையும், சுந்தரையும் பார்க்க வேண்டும் என்ற நினைப்பே வெறுப்பாக இருந்தது.

நுழைந்த வேகத்திலேயே வண்டியை ரிவர்ஸில் செலுத்தி, திரும்பி அண்ணாசாலையை நோக்கிப் போனான்.

'நன்றாய் காத்திருக்கட்டும்.'

'விடிய விடிய உட்கார்ந்திருக்கட்டும்.'

'அழுத கண்களும், வீங்கிய முகமுமாய் இருக்கும் இந்த நிலையில் அவர்கள் என்னைப் பார்க்க வேண்டாம்.'

'பார்க்க நேர்ந்தால், பின்னால் எப்பவாவது இதைச் சொல்லிக் காட்டிக் கேலி பண்ணக்கூடும்.'

'சீ, என்ன மனிதர்கள்!'

ஆத்மா ஜெமினியைக் கடந்தபோது இப்போது எங்கே போவது என்று யோசித்தான்.

மஹாபலிபுரம் போகும் வழியில் திருவான்மியூரைத் தாண்டி முட்டுக்காடுக்கு அருகில் அவன் கம்பெனிக்கு ஓர் அழகான சின்ன வீக் எண்ட் வீடு இருக்கிறதின் நினைப்பு எழ, அங்கு போனால் என்ன என்று எண்ணினான்.

'இந்தக் கும்பல் அங்கு வராமல் இருக்குமா?'

'எனக்கு தனிமை வேண்டுமே!'

நிதானமாய் யோசித்ததில், அவர்கள் முட்டுக்காடுக்கு வர சந்தர்ப்பம் இல்லை என்று தோன்றியதால், வண்டியை அடையாறு வழியாக முட்டுக்காடுக்கு வேகமாய்ச் செலுத்தினான்.

பாஸ்கரின் வார்த்தைகள் இத்தனை கொடூரமாய் வெளி வந்து விழும் என்று பெண்களில் யாருமே எதிர்பார்க்காததால், சில நிமிஷங்களுக்கு செயலிழந்து போனார்கள்.

'இது என்ன கடுகத்தனை கூட மனிதாபிமானம் இல்லாத பேச்சு?'

'விருகத்தனமையுடன இப்படி பாஸ்கரால் பேச இயலுமா என்ன?'

'சரி. பாஸ்தான் குடிவெறியில் பேசி விட்டான் என்றால் - சுந்தருக்கும் மாதுவுக்கும் புத்தி எங்கே போயிற்று?'

''பாஸ் சும்மா இரு'' என்று அதட்டி இருக்க வேண்டாமோ?'

ஒருவரை ஒருவர் ஏறிட்டுப் பார்த்துக் கொண்டவர்களுக்கு மனதில் ஏதேதோ சில எண்ணங்கள் எழுந்தாலும் யாரும் வாயைத் திறக்கவில்லை.

ஒரு நிமிஷ மௌனத்தில் மாதுவுக்கும் சுந்தருக்கும் பாஸ்கரின் பேச்சிலிருந்த கடுமை மெல்லப் புரியத் தொடங்கியது.

ஆத்மா பதில் ஒன்றும் பேசாமல் ஸ்தம்பித்து நின்று விட்டு, வேகமாக சாலையைக் கடந்து, டாக்ஸி ஒன்றில் ஏறியதைப் பார்த்த பிறகே, அவன் மனதை எத்தனை புண்படுத்தி விட்டோம் என்பது விளங்கியது.

முதலில் சுதாரித்துக் கொண்டவன் மாதுதான்.

''ஆத்மா எங்கே போகிறான்? சுந்தர் கால் ஹிம் ''

சுந்தர் சாலையில் செல்லும் வண்டிகளுக்கு வழி விட்டு, ஜாக்கிரதையாகத் தாண்டுவதற்குள் டாக்ஸி புறப்பட்டுப் போய்விட்டது-

''ஆத்மா... ஹேய் ஆத்மா'' பட் பட்டென்று கைகளைத் தட்டிக் கூவினான் சுந்தர்.

ஹூஹூம். பலன் இல்லை-

திரும்ப வந்து இவர்களுடன் நின்றவன், இப்போது என்ன செய்வது என்று கேட்பதுபோல, மாதுவை ஏறிட்டு நோக்கினான்.

''எங்கே போகிறான்?''

''எங்கே போவான்? சும்மா தனக்குக் கோபம் என்று காட்டிக் கொள்ள பத்து நிமிஷம் சுத்திவிட்டு வந்து சேருவான். இவனைத் தெரியாதா? இவன் செய்வது மாத்திரம் சரி, நான் கேட்டது தப்பு அப்படித்தானே?'' கோபம் இன்னும் அடங்காமல் பாஸ்கர் பேசினான்.

''என்ன இருந்தாலும் அந்த வார்த்தையைச் சொல்லி இருக்க வேண்டாம் பாஸ் - வீ ஆல் நோ தட் ஹி ஈஸ் வெரி சென்ஸிடிவ் அபௌட் இட்...''

''ஸோ வாட்? என் மனைவி எனக்கு முக்கியமில்லையா? ஐ டோன்ட் கேர்-

போதையில் இருக்கும் பாஸ் என்ன சொல்லியும் கேட்க மாட்டான் என்பது தெளிவாக, மற்றவர்கள் வாயை மூடிக்கொண்டார்கள்.

''மாடிக்குப் போகலாமா? சாப்பிட இங்கு வந்தோமா... இல்லை இப்படியே வாசலில் நிற்பதற்கா?''

பெண்கள் மூவரில் சுசிலா தைரியமாய்ப் பேசுபவள்; அவள்தான் பாஸ்கருக்கு பதில் சொன்னாள்-



''பத்து நிமிடம் காத்துப் பார்க்கலாம் பாஸ்; ஆத்மா வந்து விடட்டும்''-

''என்ன பெரிய துரை மகன்? அவனுக்காக நாம ஏன் காக்க வேணும்? நான் மாடிக்குப் போகிறேன் - வா சித்ரா, கம் உமா...''

படிகளில் ஏறினான் பாஸ்.

''நீங்களெல்லாம் மேலே போய்ச் சாப்பாடு ஆர்டர் பண்ணுங்கள். நான் இருந்து ஆத்மாவை கூட்டி வருகிறேன்.'' மாது மட்டும் தங்கி விட்டான்.

மேலே போய் ஏ.ஸி. ஹாலில் அமர்ந்தார்கள்.

ஸ்டுவர்ட் வந்து அருகில் நின்றார்.

''யார் யார் என்ன சாப்பிடுகிறீர்கள்?''

''எனக்கு ஒன்றும் வேண்டாம்...'' என்றாள் சுசி.

''எனக்கும்'' என்றாள் உமா.

''நவன் ஐ டோண்ட் வாண்ட் எனிதிங்'' என்றாள் சித்ரா.

''டாம் யூ விமன்... ஆத்மா இல்லாவிட்டால் என்ன? எதற்காக இப்படி ஆகாத்தியம் பண்ணுகிறீர்கள்?''-

பாஸ்கரின் இரைந்த பேச்சு, பக்கத்தில் இருந்தவர்களைத் திரும்பிப் பார்க்க வைத்தது.

''ஆத்மாவை அப்படி ஓட்டும்படி என்கரேஜ் பண்ணியது நாங்கள்தானே? எதற்காக அவர்மேல மட்டும் பழியைப் போடணும்? எங்களுக்கும் அதில் பங்கு இருக்கிறதே!''

சுசிலா பொறுக்க மாட்டாமல் கேட்டுவிட்டாள்.

ஐஸ் வாட்டர் கிளாஸை எடுத்துக் குடித்தான் பாஸ். பதில் சொல்லவில்லை.

''என்ன இருந்தாலும் அந்த மாதிரி மனசு புண்படும் தினுசில நீங்க மூணு பேரும் நடந்து கொண்டது தப்புத் தான்'' சுசிலா. மேலும் குற்றம் சாட்டினாள்.

ஸ்டுவர்ட் கனைத்தார்-

''ஆர்டர் சார்''-

''இன்னும் இரண்டு சிநேகிதர்களை எதிர்பார்க்கிறோம். அவர்கள் வந்த பிறகு ஆர்டர் செய்கிறோம்.''

ஸ்டுவர்ட் நகர்ந்தார்.

மாது உள்ளே வந்தான்.

''அவனைக் காணவில்லை சுந்தர்'' நாற்காலியில் உட்கார்ந்து பேசினான்.

''எங்கே போயிருப்பான்?''

''வீட்டுக்குத்தான்... வேர் எல்ஸ்?''

''போன் பண்ணிப் பார்க்கலாமா?''

''கோபித்துக் கொண்டு போனால் போகட்டுமே! எதற்காக இப்படி விழுந்தடித்துக்கொண்டு சமாதானம் செய்யணும்?''

பாஸ்கரின் கேள்விக்கு பதில் சொல்லாமல் சுந்தரை நோக்கியே மாது பேசினான்.

"போன் பண்ண வேண்டாம் - நேரேயே போய்ப் பார்க்கலாம் - அதுதான் சரி..." கணவன் சொன்னதை சுசீலா ஆமோதித்தாள்.

"ஐ'ம் நாட் கம்மிங். அவனுக்கு என்ன இத்தனை உபசாரம்?" பாஸ்கர் கல்லுளி மங்கனாகப் பிடிவாதம் செய்தான்.

"நீங்க சொல்வதில் நியாயம் இல்லை." புத்தி சொன்ன சித்ராவின் மேல் எரிந்து விழுந்தான் பாஸ்கர்.

"எனக்கு நீ அட்வைஸ் சொல்ல வேண்டாம் - ஷட் அப்..."

மாதுவும், சுந்தரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"ஆத்மாவைப் புண்பட்ட மனசுடன் விடுவது நியாயம்னு தோணலை பாஸ்கர். வி மஸ்ட் கோ."

"ஆல்ரைட் யூ கோ - ஐ'ம் நாட் கம்மிங்" என்ற பாஸ்கர், ஸ்டுவர்டை அழைத்து, தனக்கு சிக்கன் குருமாவும், ஆப்பமும் கொண்டு வரச் சொன்னான்.

அவனையும், சித்ராவையும் தவிர மற்ற நால்வரும் எழுந்தார்கள்.

"முக்கியமாய் 'ஸாரி' சொல்ல வேண்டியவன் நீதான் பாஸ்கர். டோண்ட் யூ அண்டர்ஸ்டாண்ட்?"

'இல்லை' என்று தலையாட்டினான் - "அவன் தப்பு செய்தவன்; நான் கண்டித்தேன். அவ்வளவுதான். இதற்கு என் ஸாரி?"

இனி இவனோடு பேசிப் பலன் இல்லை என்று அவர்கள் கிளம்பினார்கள்.

"நாளைக்குக் காலை போன் பண்ணுகிறோம் சித்ரா. குட் நைட்."

சித்ராவுக்கும் அவர்களுடன் போக ஆசைதான்... அது தான் சரி என்றும் நினைக்கவே செய்தாள். ஆனால் முரட்டுக் கணவனை மீறிக்கொண்டு அவளால் என்ன செய்ய இயலும்?

ஆப்பமும் குருமாவும் வந்ததும் மூக்குப் பிடிக்கச் சாப்பிட்டான் பாஸ்கர். மனைவி ஏதாவது சாப்பிடுகிறாளா என்று பேச்சுக்குக் கூட கேட்கவில்லை.

பில்லைக் கொடுத்துவிட்டுக் கீழே வந்தார்கள். பென்ஸ் பூட்டப்படாமல் அதன் சாவியும் இக்னிஷனிலேயே இருந்தது.

வீட்டுக்குப் போனார்கள்.

வீட்டுக்கு வந்து நைட் டிரஸ் மாற்றிக்கொண்டு, படுக்கையில் அவள் படுப்பதற்குள், பாஸ்கர் குறட்டை விட்டுத் தூங்கத் தொடங்கி இருந்தான்.

'ஆத்மா என்று இல்லை, மற்ற எவருடைய உணர்ச்சிகளையும் மதிக்க இவர் கற்றுக் கொள்ளவில்லையே!

இவருக்கு, என்று, இதெல்லாம் புரியும்?' என்ற கேள்வி மனசுக்குள் எழ, வேதனையுடன் படுத்தாள் சித்ரா.

புகாரியை விட்டுக் கிளம்பிய மற்றவர்கள், ஆத்மாவின் வீட்டை அடைந்தார்கள். சமையற்காரப் பையன் ராமு, ஆத்மா இன்னும் வரவில்லை என்றதும், ஒரு வேளை காரை எடுக்கச் சுந்தரின் வீட்டுக்குப் போயிருக்கலாமோ என்ற நினைப்பில் அங்கு போனார்கள். கூர்க்கா, ஆத்மா வந்து போன விஷயத்தைத் தெரிவித்ததும், வழியில் அவனை 'மிஸ்' பண்ணியிருக்கலாம் என்று எண்ணி, மீண்டும் நுங்கம்பாக்கத்துக்கே வந்தார்கள்.



ஆத்மா இன்னும் வரவில்லை.

வரவேற்பு அறையில் உட்கார்ந்தார்கள்.

"எங்கே போயிருப்பான்?"

"அவனும் குடித்திருந்தானே? ஒருவேளை படபடப்பில், குடிபோதையில் ஏதாவது ஆக்ஸிடெண்ட் ஆகி இருக்குமா?"

மணி பன்னிரண்டைத் தாண்டியது.

"இன்னும் எத்தனை நேரம் காத்துப் பார்ப்பது? புறப்படலாம். காலையில் பார்த்துக் கொள்ள வேண்டியது தான்" என்ற முடிவோடு எழுந்தார்கள்.

சுந்தர் - உமாவைத் தி.நகரில் விட்டுவிட்டு, மாதுவும் சுசீலாவும் தங்கள் வீட்டை அடைந்தபோது மணி கிட்டத்தட்ட ஒன்று.

ஐந்து ஏக்கர் சவுக்குத் தோப்பில் சின்னதாய் உள்ள இந்த வீடு விலைக்கு வந்தபோது, "பல விஷயங்களுக்கும் சௌகரியமாய் இருக்கும். வாங்கி விடலாம்" என்று விஷமமாய் அவன் கம்பெனி டைரக்டர் ஒருவர் சொன்னதைக் கேட்டு, ஆத்மா அப்போது சிரித்தான். இன்றுவரை, அவன் 'அந்த மாதிரி' எந்த விஷயத்துக்காகவும் இந்த வீட்டைப் பயன்படுத்தியவன் இல்லை.

'ஸீ பாத்' ஆத்மாவுக்குப் பிடிக்கும். கம்பெனி நண்பர்களுடன் விடுமுறை நாட்களில் இங்கு வந்ததுண்டு. கடலில் குளித்து அலுத்து வீட்டுக்கு வந்தால், ஐஸ் பெட்டியில் குளிர்ந்த பியரும் ஹோட்டலிலிருந்து வாங்கி வந்த பதார்த்தங்களும் தயாராக வைத்து உபசரிப்பான் வாட்ச்மேன் வடிவேலு.

வீட்டைப் பராமரிக்க, இப்படி உயர் அதிகாரிகள் திடுதிப்பென வந்தால், அவர்களின் தேவையைக் கவனிக்க என்று, கம்பெனி ஒரு தோட்டக்காரன் கம் வாட்ச்மேனை நியமித்திருந்தது.

'இப்போது போனால் வீடு பூட்டியிருக்குமோ? வடிவேலு இருப்பானோ?'

வீட்டுக்கு கொஞ்ச தூரம் இருக்கையில் இன்னொரு சந்தேகமும் ஆத்மாவுக்கு எழுந்தது-

'ஸப்போஸ் ஸம்படி எல்ஸ் ஈஸ் தேர்?'

'டைரக்டர், அல்லது அவரின் நண்பர் எவராவது தங்களின் பெண் சிநேகிதியுடன் அங்கு வந்து தங்கியிருந்தால்?'

'இந்த மாதிரியான திருட்டுக்காரியங்களுக்காகப் பயன்படுத்துவது தானே இந்த வீட்டை வாங்கியதன் முக்கிய நோக்கம்? சரி - தூரத்திலிருந்து பார்க்கலாம். வீட்டில் விளக்கோ, அல்லது வாசல் போர்டிகோவில் காரோ நின்றால் சத்தம் இல்லாமல் திரும்பிவிட வேண்டும்' என்று எண்ணிய வண்ணமே ஆத்மா கடற்கரை வீட்டை அடைந்தான்.

அவனுக்கு அதிருஷ்டம்தான்-

வீட்டில் ஈ காக்கை இல்லை - போர்டிகோவில் ஒரு கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்த வடிவேலு, இவன் கார் விளக்கின் ஒளி மேலே பட்டதும் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து கதவைத் திறந்தான்.

ஆத்மா வீட்டுக்குள் போனான்.

நிசப்தம், தனிமை, பிய்த்துக்கொண்டு வீசிய காற்று - [illegible] நாடித்தானே இத்தனை தொலைவு வந்திருக்கிறான்?

"[illegible] பியர் இருக்கா?"

[illegible] 'இருக்கிறது' என்றான்-

"ஒரு பாட்டில் பியரையும், குளிக்கிற டவல் ஒன்றையும் ஒரு கூடையில் வைத்துக் கொடு."

சொன்னபடி அவன் செய்தான்.

கூடையைக் கையில் எடுத்துக் கொண்ட ஆத்மா "நீச்சில் குளிச்சிட்டு வரேன் - நீ சாப்பிட ஏதாவது தயாரபண்ணி வை" என்று சொல்லி, வீட்டை விட்டு இறங்கி, சவுக்குத் தோப்பைக் கடந்து கடலை நோக்கி நடந்தான்.

பௌர்ணமி ஆகி இரண்டு நாட்கள் ஆகியிருக்குமோ என்னவோ, டியூப் லைட் போட்ட மாதிரி வெளிச்சம்.

துணிமணிகளை ஒவ்வொன்றாய்க் கழட்டி நிர்வாணமாய்க் கடலில் இறங்கினான்.

வேகமாய் புரண்ட அலைகளில் முங்கி விழுந்து குளித்தான்.

அம்மணமாய் ஜலத்தை விட்டு வெளியே வந்தவன் கூடையிலிருந்து டவலை எடுத்து மணலில் விரித்தான்-

பியர் பாட்டிலைத் திறந்து ஒரே வாயில் அரைப்பாங்கைக் குடித்து டவலில் நிர்வாணமாய்ப் படுத்துக் கொண்டான்-

அன்று மணந்து, பின்பு இறந்து, இன்று தனியாகத் தன்னை தவிக்கவிட்டுச் சென்ற தன் அன்பு மனைவி சாருவை நினைத்தான் - கண்களில் மீண்டும் நீர் பூத்தது.

**போ**ன் அடிக்கும் சப்தம் கேட்டு தூக்கத்தில் இருந்து விழித்துக் கொண்ட உமா கணவனை உலுக்கி எழுப்பினாள்...

"என்ன?"-

"போன் அடிக்கிறதே, யார் என்று கேளுங்களேன்."

ரிசீவரை எடுத்து 'ஹலோ' என்றான் சுந்தர்.

"சுந்தர் திஸ் ஈஸ் மாது. தூக்கத்திலிருந்து எழுப்பி விட்டேனா? ஸாரி... எனக்கு என்னமோ மனசு சரியில்லை. ஆத்மா வந்துவிட்டானா என்று கேட்க அவன் வீட்டுக்குப் போன் பண்ணினேன் - இன்னும் வரவில்லையாம். ராமு சொன்னான்."

"இஸிட்? மணி என்ன இப்போது?"

"நியர்லி த்ரீ ஓ க்ளாக்" -

"சுந்தரா? என்ன பண்ணுகிறான் ஆத்மா?"

"சசிகலாவுக்கும் எனக்கும் தூக்கமே வரவில்லை சுந்தர்... காரை எடுத்துக் கொண்டு எம்.ஜி.ஜி., ஜிம், எல்லாம் ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு வந்தோம். எங்கும் அவன் காரைக் காணவில்லை. நாம் அப்படிப் பேசினது, கோபித்தது, அவனை



மனசு உடைந்து போக விட்டது என்னமோ தவறு என்று சுகி சொல்கிறாள் - ஐ திங்க் தட் ஷி ஈஸ் ரைட் - மனசு குறுகுறுக்கிறது சுந்தர்."

உமா கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டு, கணவன் போனில் பேசுவதிலிருந்து விஷயத்தை கிரகிக்க முயன்றாள்.

"என்ன செய்யலாம்...? பாஸ்கர் வீட்டுக்கு சண்டை போடப் போயிருப்பானோ?"

"அதையும் டயர் பண்ணிப் பார்த்து விட்டேன். சித்ரா பேசினாள். பாஸ்கர் தூங்குகிறான். ஆத்மா அங்கே வரவில்லையாம். 'ப்ளீஸ் ஆத்மாவைத் தேடிச் சமாதானம் செய்து எங்கள் சார்பில் ஸாரி சொல்லுங்கள்' என்று சித்ரா கெஞ்சினாள் - அதுவும் தவிர ஆத்மா பதிலுக்கு சண்டை போடும் குணம் கொண்டவனில்லையே!"

ஒரு நிமிஷம் மௌனம்.

"பாஸ்கர் பேசினது ரொம்ப அதிகம் என்றுதான் நான் நினைக்கிறேன் சுந்தர். ஆத்மா ஒரு திறுசானவன். சிரிக்கச் சிரிக்கப் பேசுவானே தவிர, மனசுக்குச் சரியான தொட்டால் சுருங்கி, அதுவும் அவன் திருமணத்தைப் பற்றி பேசினாலேயே அவன் நத்தையாக ஓட்டுக்குள் ஒடுங்கிப் போவான் உனக்குத்தான் தெரியுமே."

"குடிவெறியில் ஏதும் ஏடாகூடமாய்ச் செய்து கொள்ள மாட்டானே, மாது?"

"மாட்டான் என்றுதான் நம்புகிறேன். லெட் அஸ் ஹோப் ஃபார் தி பெஸ்ட்..."

"நாம் வேறு என்ன தான் செய்ய இயலும்? விடிந்ததும் விடியாததுமாய் அவன் வீட்டிற்குப் போய், நாலு தடவை 'ஸாரி வீ டிண்ட் மீன் இட்' என்று சொல்லலாம். முடிந்தால் பாஸ்கரையும் அழைத்துப் போகணும். என்ன?"

அதோடு அவர்களின் சம்பாஷணை முடிந்தது.

**க**டற்கரை மணலில் படுத்து, ஆகாயத்தை வெறித்த ஆத்மாவுக்கு சாருவை தான் முதல்முதலில் சந்தித்ததும், பழகியதும் ஞாபகத்துக்கு வந்தன.

கல்கத்தாவில் அமெரிக்கன் பாங்க் ஒன்றில் அஸிஸ்டெண்ட் மானேஜராக அவன் பதவியேற்றிருந்த சமயம்-

எக்கச்சக்கமான சம்பளம்-

ஹோட்டலில் இருக்கப் பிடிக்காமல் சின்னதாய் ப்ளாட் ஒன்றை வாடகைக்கு எடுத்து, பெங்காலி சமையல்காரன் ஒருவனை அமர்த்திக் கொண்டு, ஆத்மா சௌக்கியமாய் இருந்தபோது தான் அவளைப் பார்த்தான்.

அவன் இருந்த கட்டிடத்தில் பல மாடிகள். அவற்றில் பல குடும்பங்கள்.

பூட்டி இருந்த எதிர் ப்ளாட்டில் அன்று அந்தக் குடும்பம் வந்து இறங்கியதை ஆத்மா பார்த்தான்.

அப்பா, அம்மா, ஒரு சின்ன பையன், அப்புறம் அவள்.

அவள் பெயர் சாருலதா என்பதை, ஆத்மா அன்றே தெரிந்து கொண்டான்.

போஸ் - சாருலதாவின் அப்பா - சொந்தத்தில் வியாபாரம் செய்கிறவர்.

அவருக்கு ஒரே பையன், ஒரே பெண்.

சாருலதா பி.எஸ்ஸி. ஹோம் சயன்ஸ் படிக்கிறாள். ஃபைனல் இயர்.

முதல்நாள், முதல் தடவை கண்ணை விரித்து ஆத்மாவைப் பார்த்த நாழிகையில், அவன் மனசுக்குள் எப்படியோ சாருலதா புகுந்து கொண்டாள்.

அவளை ஒத்த பெண்களெல்லாம் பெல் பாட்டமும், சல்வார் கமீஸுமாகத் திரிந்து ஆட்டம் போடும்போது, இவள் மட்டும் வெள்ளையில் சிவப்பு பார்டர், நீல பார்டர், பச்சை பார்டர் என்ற நூல் புடவையைக் கஞ்சி விட்டு நறுவிசாய் உடுத்திக்கொள்வாள்.

அப்போதுதான் பறித்த மலரின் புதுமையுடன் அவளால் எந்நேரமும் எப்படி இருக்க முடிந்தது. நிலாவை துண்டம் போட்டுச் செய்த மாதிரியான மாசு மருவில்லாத முகம், கறுத்த கண்கள், குளுமையான பார்வை - 'என்னைப் பார்த்துக்கொண்டே இரு' என்று ஆணையிடும் அற்புதமான அழகு.

அவள் அதிகமாய் ஒப்பனை செய்து கொண்டோ, அலங்கரித்துக் கொண்டோ ஆத்மா பார்த்ததில்லை. காதுகளில் வளையம், கையில் மெலிசாய் ஒரு வளையல் - அவ்வளவுதான்.

எப்படிப் பேசத் தொடங்கினார்கள், எந்தத் திருசில் பழகத் தொடங்கினார்கள் என்ற விவரங்களெல்லாம் இங்கு எதற்கு?

மனசு பிடித்துப் போனது, காதல் கொண்டுவிட்டார்கள் என்றால் போதாதா?

ஆத்மா இதற்குமுன் பெண்களுடன் நெருங்கிப் பழகியவன்தான். தலைகால் புரியாமல் பெண் உடம்பு தேடி அலைபவனாக இல்லாவிட்டாலும், அவ்வப்போது பெண் சிநேகிதிகளுடன் பொழுதைக் கழித்தவன்தான்-

விபசார விடுதிகளுக்கு மட்டும் போகமாட்டான். நோய்கள் அங்கிருந்துதான் பரவுகின்றன என்று மனசில் உண்டான பயம் காரணம்-

சென்னையில் லா படிக்கும்போதும், அஹமதாபாதில் எம்.பி.ஏ. படிக்கும்போதும், பம்பாயில் வேலை பார்த்தபோதும், நாகரிகப் பெண்களுடன் ஒரு குறிப்பிட்ட பந்தமும் இல்லாமல் பழகியிருந்த ஆத்மாவுக்கு, சாருலதாவைக் கண்டது முதல் ஏனோ மனசு கிளு கிளுத்துப் போனது.

அவளின் அழகா? குணமா? இல்லை எளிமையா? எது தன்னைக் கவர்ந்தது?

மூன்றும் தான்.

சாருலதா ஒரு பூ மாதிரி மென்மையானவள், பயந்த சுபாவம் கொண்டவள் என்பதெல்லாம் புரியப் புரிய இவளை வாழ்நாள் பூராவும் பக்கத்திலேயே வைத்துப் போற்றிக் காப்பாற்ற வேண்டும் என்ற தாபம் இதயத்தில் எழுந்தது.

அன்று தசராவின் கடைசி நாள். போஸ் குடும்பத்தாரோடு, ஆத்மாவும் ஹூப்ளி நதிக்கரைக்குப் போயிருந்தான். கூட்டமான கூட்டம்.

லாரிகளில் துர்க்கை பிம்பங்கள் வந்து இறங்கினவைகளை ஒவ்வொன்றாகப் படிகளில் எடுத்துச் சென்று கங்கையில் தள்ளியது பார்க்கப் பரவசமாய் இருந்தது.

சாருலதாவுடன் ஆத்மா நதிக்கரையில் குட்டைச் சுவரில் உட்கார்ந்திருந்தான். போஸும், மற்றவர்களும் படிகளில் இறங்கி, காளியைக் கிட்டத்தில் தரிசனம் பண்ணுவதில் கவனமாய் இருந்தனர்.



அந்தச் சந்தடியில், அந்த இரைச்சலில், ஆத்மா சாருலதாவின் கைகளைத் தன் கையோடு கோர்த்துக்கொண்டு, "நான் உன்னை மணக்க விரும்புகிறேன் - நீ சம்மதிப்பாயா சாரு?" என்றான்.

மறுநாள் போஸிடம் பேசி, அவர் சம்மதத்தை அறிந்து கொண்டபின், பாங்கில் ஒரு வார லீவு போட்டு விட்டு அரவங்காடுக்குப் பயணமானான்.

அம்மாவிடமும், அண்ணாவிடமும் தன் விருப்பத்தைச் சொன்னான்.

முதலில் அம்மா மறுத்தாள், அழுதாள், புலம்பினாள்,

பின் மகனின் தீர்மானமான முடிவைக் கண்டு அரை மனசுடன் சம்மதித்தாள்.

திருமணத்தைச் சென்னையிலோ, சொந்த ஊரிலோ வைத்துக் கொண்டால், உறவினர் நடுவில் அம்மா சங்கடப்படுவாள் என்பதை உணர்ந்து, கல்கத்தாவிலேயே நடத்த ஆத்மா ஏற்பாடு செய்தான்.

அம்மா, அண்ணா, மற்ற முக்கிய உறவினர்கள் முதல்நாள் வந்து, திருமணம் முடிந்த மறுநாளே ஊருக்குத் திரும்பி விட்டனர்.

ஆத்மா, சாருவுடன் தனிக்குடித்தனம் செய்ய இன்னும் சௌகரியமான வீட்டுக்குக் குடிபோனான்.

என்ன சிரிப்பு..! என்ன விளையாட்டு..! என்ன இன்பம்..!

எத்தனை பேருக்கு அப்படியொரு வாழ்க்கை கிட்டும்?

முதல் சில வருஷங்கள் குழந்தைகள் இல்லாமல் இருந்துவிட்டு பின்பு, குடும்பத்தைப் பெருக்கலாம் என்பது ஆத்மாவின் திட்டம்.

ஆனால் சாருலதா இதற்கு உடன்படவில்லை.

அவளுக்கு உடனடியாகக் குழந்தைகள் வேண்டுமாம். ஏனாம்?

முகத்தை மூடிக்கொண்டு காரணத்தைச் சொல்ல மறுத்தாள்.

ஆத்மா கெஞ்சினான், கொஞ்சினான்.

அழகான கணவன் மாதிரியே, அவளுக்குப் பெண்ணும், பிள்ளையும் வேண்டுமாம். தவிரவும் சின்ன வயசிலேயே குழந்தைகளைப் பெற்றுவிட்டால் வளர்க்கும் சிரமம் தெரியாதாம்; இவர்கள் திடமாய், உடம்பில் வலிவுடன் இருக்கையிலேயே குழந்தைகளை ஆளாக்கிப் படிக்க வைத்து கல்யாணம் பண்ணிக் கொடுத்து விடலாமாம்.

அத்தை பாட்டி மாதிரி சாரு என்னென்னவோ சொல்ல, ஆத்மா சரி என்று தலையாட்டினான்.

திருமணமான மூன்றாம் மாசம் சாரு நாற்பத்திஐந்து நாட்கள் கர்ப்பமாயிருந்தாள்.

வெடிங் அனிவர்ஸரியின் போது, கையில் குழந்தை இருந்திருக்கும் - எல்லாம் சரியாக இருந்திருந்தால்!

டாக்டரிடம் போனார்கள் - டெஸ்ட் செய்த அவர் கர்ப்பத்தை ஊர்ஜிதப் படுத்தினார். சாரு நார்மலாக இருப்பதாகச் சொன்னார். சாதாரணமாய்ச் செய்யும் அன்றாட வேலைகளுடன் சகஜமாய் இருக்கச் சொன்னார்.

எல்லாம் சரிதான். ஆனால் நடந்தது என்ன?

இரண்டாம் மாசம் முடிவதற்குள் தாள முடியாத மூத்திர எரிச்சல் தோன்றியது.

டாக்டர் பரிசோதனை செய்தார்.

மூத்திர வாயில் ஏதோ இன்ஃபெக்ஷன், ஐந்து நாள் மருந்தில் குணமாகிவிடும் என்றார்.

''ஸ்ட்ரெப்டோமைசின் ஊசி போட்டுக் கொண்டதுண்டா?'' என்று கேட்டார்.

''உண்டு'' என்றாள் சாரு.

ஐந்து நாட்களுக்கு அந்த ஊசியும், வேறு சில மாத்திரைகளையும் எழுதிக் கொடுத்தார்.

முதல் நாள் இன்ஃஜெக்ஷன் போட்டுக்கொண்டு, சினிமாவுக்குப் போய் விட்டு வந்தார்கள்.

மறுநாள், டாக்டரிடம் போய்விட்டு, நேராக பளூஃபாக்ஸ் ரெஸ்டாரண்டுக்குச் சென்று சாப்பிட திட்டம்-

அன்று காலையிலிருந்தே சாரு ஏக குஷியாய் இருந்தாள்.

பிறக்கப் போவது ஆணா பெண்ணா என்ற அசட்டுச் சர்ச்சை, என்ன பேர் வைக்கலாம் என்ற விவாதம்-

மூத்திர எரிச்சல் கம்மியாய் இருந்ததாகச் சொன்னாள்.

மாலையில் இருவரும் தயாரானதும் டாக்டரிடம் போனார்கள்.

கார் பயணத்தில் சாரு சற்றே நிலை கொள்ளாமல் இருப்பது போலத் தோன்றியது.

''என்ன சாரு?''

''ம்... ஒன்றும் இல்லை.''

மீண்டும் டாக்டரின் வரவேற்பு அறையில் காத்திருக்கும் போது அவள் முகத்தில் சங்கடம்-

''வாட் ஈஸ் இட் டார்லிங்?''

திடீரென்று பத்து நிமிஷமாய் அடிவயிற்றை வலிக்கிறதாம் - ஒரு நிமிஷம் கத்தியால் அறுக்கிற மாதிரி வலிக்கிறதாம். மறு நிமிஷம் ஒன்றும் இல்லையாம்-

டாக்டர் ஊசி போட இவர்களை அழைத்தார்.

ஸ்ட்ரெப்டோமைசினைக் குத்தினார்.

ஊசியை வெளியில் எடுத்து ஸ்பிரிட்டைத் தேய்க்கும் போது சாருலதாவின் நெற்றியில் வேர்வைத் துளிகள்.

''வாந்தி எடுக்கணும் போல இருக்கிறது டாக்டர்'' என்றாள்.

''ஏன்? வெறும் வயிறுடன் பிரயாணம் செய்தீர்களா? மசக்கை படுத்தலா?''

டாக்டர் கேலியாகவே பேசினார்.

பதில் சொல்லாமல் எழுந்து, வாஷ்பேஸினிடம் ஓடிக் குடமாய் வாந்தி எடுத்தாள் சாரு.

அவளைத் தாங்கிப் பிடிக்கக் கிட்டத்தில் ஆத்மா போன போது அவன் மேலேயே மயங்கி விழுந்தாள்.

என்னாயிற்று?



ஆரம்பக் கால கர்ப்பத்தின் சேஷ்டைகள் என்று முதலில் நினைத்த டாக்டர், சாருலதாவின் பல்ஸைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போனார்.

என்னது இது?

ரியாக்ஷனா?

ஸ்ட்ரெப்டோமைசின் அலர்ஜியா?

ஊசியை எடுத்த மறு கணம் இப்படி மயங்கி விழக் காரணம் ட்ரக் அலர்ஜியா?

அஸிஸ்டண்டை அழைத்தார். பரபரவென்று அவில், டெகோட்ரான் மருந்துகளை இன்ஜெக்ட் செய்தார்.

தரையில் கிடந்த சாருலதாவைத் தூக்கி பேஷண்ட் டேபிளில் கிடத்தினார்.

நிலைமையில் முன்னேற்றம் இல்லை.

அட்ரனலின், மற்ற உயிர் காக்கும் மருந்துகளை இரண்டு கைகளிலும் மாற்றி மாற்றி ஊசி மூலம் ஏற்றினார்கள்.

ஆத்மா வெலவெலத்துப் போனான்.

''என்ன டாக்டர்? வாட் ஹேப்பண்ட்?''

''மருந்து அலர்ஜி என்று நினைக்கிறேன்.''

''நேற்றுப் போட்டுக் கொண்டாளே?''

''இந்த மருந்துகளுக்கெல்லாம் எப்போது அலர்ஜி வரும் என்று கிடையாது - முதல் டோஸிலும் வரலாம். நூறாவது டோஸிலும் வரலாம் - உடனடி மாற்று மருந்துகள் கொடுத்து விட்டோம்... ஷி வில் பி ஆல்ரைட்''

டாக்டர் மொழிந்து விட்டார்.

இரண்டு நிமிஷங்களில் கண்களைத்திறந்த சாரு, கணவனை நோக்கி, ''இங்கே வாருங்களேன்'' என்றாள் மெல்ல-

ஆத்மா கிட்டத்தில் வந்து அவளை அணைத்துக் கொண்டான்.

''பயப்படாதே சாரு... உனக்கு ஒன்றும் இல்லை...''

புன்னகைக்க சாரு முயன்றாள். முடியாதபடி அடி வயிற்றில் வலி-

முகம் அஷ்ட கோணலாகத் துடித்தவள் 'கொள கொள' என வாந்தி எடுத்தாள்.

ரத்த வாந்தி -

தேகத்தில் உள்ளுக்குள் என்னமோ கோளாறு!

அப்படியானால் இது மருந்து அலர்ஜி இல்லையா?

டாக்டர் விழித்துக் கொண்டார்.

ஆக்ஸிஜன் சிலிண்டரைப் பொருத்தி, வாயுவை உள்ளே செலுத்தினார்.

மற்ற மருந்து, இன்ஜெக்ஷன்களை அஸிஸ்டண்ட் செலுத்த காரில் சாருவை அள்ளிப் போட்டுக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடினார்கள்.

என்ன ஓடி என்ன?

கல்கத்தா நெரிசலில் நினைத்த நிமிஷத்தில் ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் போவது சாத்தியமா என்ன?

சாருவின் கதை முடிந்த விதம் இப்படித்தான்-

பிறகு, போஸ்ட்மார்ட்டம் செய்து, என்ன கோளாறு என்று கண்டு பிடித்த பிறகு சொன்னார்கள்.

மருந்து அலர்ஜி இல்லையாம்.

கரு கர்ப்பப்பையில் வளராமல் ஃபெலோபியன் குழாயில் வளர்ந்து விட்டதால் எழுந்த விபத்தே சாருவின் உயிரைக் குடிக்கக் காரணமாம்-

ஆயிரத்தில் ஒரு பெண். இந்த மாதிரிக் கர்ப்பம் தரிப்பதுண்டாம்-

கருப்பைக்குள் கரு போகாமல் மெல்லிய ஃபெலோபியன் குழாயில் தங்கி, அங்கேயே வளருவதை குழாயால் எப்படித் தாக்குப்பிடிக்க இயலும்? கருவின் வளர்ச்சி ஓரளவு வந்ததும் 'பொட்'டென்று குழாய் வெடித்துப் பிண்டம் வெளியே வந்து, மற்ற உறுப்புகளுடன் கலங்க நேரும்போது இப்படி அகால மரணம் ஏற்படுமாம்.

அதிருஷ்டவசமாகச் சிலருக்குக் குழாய் கரு வளரத் தொடங்கினதுமே, ரத்தப் போக்கு, வயிற்றில் வலி என்று பல அறிகுறிகள் தென்பட்டு, டாக்டர் ஆபரேஷன் மூலம் இத்தகைய கருவை அகற்றித் தாயைக் காப்பாற்றுவது உண்டாம்.

ஆனால், சாருலதாவின் விஷயத்தில் ஓர் அறிகுறியும் இல்லையே!

கடைசி நிமிஷம் வயிற்று வலியில் குழாய் சிதறியிருக்கிறது; சில நிமிஷங்களில் ரத்த வாந்தி எடுத்ததற்கும் இதுவே காரணம்.

டாக்டர் மேல் தப்பு சொல்வதற்கில்லை.

இப்படி ஒரு திருட்டுத்தனம் சாருவின் வயிற்றுக்குள் இருக்கும் என அவரால் எப்படி ஜோஸியம் சொல்ல இயலும்?

ஊசி போட்ட கையோடு மயங்கியதால், மருந்து அலர்ஜி என்று எண்ணியதிலும் தவறில்லையே!

ஆசை ஆசையாய் உண்டான குழந்தையே சாருவின் மரணத்துக்குக் காரணம் என்ற உண்மையை ஆத்மாவால் ஜீரணிக்க முடியவில்லை.

அடுத்து வந்த மாசங்களில் பித்துப் பிடித்தவன்போல இருந்தான், திரிந்தான்; பேசினான்.

பெண்களின் உடம்பை மனசால் விரும்பாதவனாக அவன் மாறியதும் அப்போதுதான். மனக்குமுறலை அடக்கக் குடியை வழியாகத் தேர்ந்தெடுத்ததும் அப்போது தான்.

ஐஸ் பெட்டியிலிருந்து முட்டையை எடுத்து அவித்து ரொட்டியின்மேல் வெண்ணெய் தடவி, முட்டை ஸ்லைஸ்களை வைத்து சாண்ட்விச்சினைத் தயார் செய்து, மேஜை மேல் வடிவேலு வைத்து ஒரு மணி நேரம் ஆகிவிட்டது.

நல்ல வேளையாக முட்டையும், ரொட்டியும் இருந்தன - அன்று மாலை பெரிய முதலாளி வருவதாகச் சொல்லி, இவன் சில்லறை ஏற்பாடுகளைச் செய்து வைத்திருந்தது நல்லதாகப் போயிற்று.

ஆத்மாவை அவனுக்கும் பிடிக்கும். இங்கு வந்திருக்கும் பல சமயங்களில் குடித்துவிட்டு மற்றவர்கள் கெக்கே பிக்கே என்று நடந்து கொள்ளுவது மாதிரி இந்த ஐயா செய்வது இல்லை என்பதால், ஒரு தனி பிரியம். தவிரவும் குட்டிகளை



இந்த ஐயா அழைத்து வந்தும் இவன் பார்த்ததில்லை. அதனாலும் ஒரு தனி மரியாதை -

ஆனால், இன்றைக்கு ஆத்மா வந்து இறங்கின வேகத்தைக் கண்டதும், வயிறு 'பக்'கென்று நடுங்கியது.

பியர் எடுத்துக் கொடுத்த பிறகு, ஆத்மா பீச்சை நோக்கிப் போனபோதும் அவனுக்குக் கொஞ்சம் திகில் தான்.

'இந்நேரத்துக்கு என்னத்துக்காகக் கடலில் குளிக்கப் போகணும்?'

'ஐயாவைப் பார்த்தால் நிலைமை சரியில்லையே?'

ஆத்மா போய் ஐந்து நிமிஷங்கள் ஆன பிறகு, அவனும் தொடர்ந்து போனான்.

தூரத்தில் நின்று பார்த்தபோது ஆத்மா நிர்வாணமாய்க் குளிப்பது தெரிந்தது.

என்ன கூத்து இது?

குளித்து முடித்த ஆத்மா திரும்ப வந்து டவலில் படுப்பதையும் அவன் பார்த்தான். மனசு சரியில்லையா?

என்னவானாலும் வந்து படுத்து விட்டார். இனி கொஞ்சம் பொறுத்து வீட்டுக்குத் திரும்பிவிடுவார். போய்ச் சாப்பாடு தயாரிக்கிறதுதான் சரி என்று எண்ணி வடிவேலு வீட்டுக்குத் திரும்பினான்.

சாப்பாட்டை ரெடியாக்கிவிட்டு, வாசலில் வந்து உட்கார்ந்தான்.

நாழிகை ஆக ஆக, இருப்புக் கொள்ளாமல் மறுபடியும் கடலை நோக்கிச் சென்றான்.

ஆத்மா அந்த இடத்திலேயே அசையாமல் கிடந்தான்.

'தூங்குகிறாரா?'

'இந்த ஊதற்காற்றில் இப்படி உடம்பில் துணியில்லாமல் படுத்தால் ஜலதோஷம் பிடிச்சுக் கொள்ளாதா?'

'எழுப்பினால் கோபிப்பாரோ!'

'ஐயா' என்றான் கிட்டத்தில் நெருங்கி -

ஆத்மா எழுந்திருக்கவில்லை.

தோளைத் தொட்டு 'ஐயா' என்றான் மறுபடி.

சட்டென்று கண்களைப் பிரித்தான் ஆத்மா

''இப்படிப் படுத்திருந்தால் உடம்புக்கு வரும்ங்க... எழுந்து வீட்டுக்கு வந்து சாப்பிட்டுப் படுங்க...''

'நீ யாரடா என்னைக் கேட்க? உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ!' என்று கத்த நினைத்த ஆத்மா அடக்கிக் கொண்டான் - 'இவன் என்ன தப்புசெய்தான்? இவனை எதற்காகக் கோபிக்க வேண்டும்?'

பேசாமல் எழுந்து டவலைச் சுற்றிக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தான்.

சாமான்களைத் திரட்டின வடிவேலு அவனைத் தொடர்ந்தான்.

ஆத்மாவின் ஆத்திரம் இன்னும் தணிவதாக இல்லை. சாருவுடன் அவன் வாழ்ந்த மாசங்கள் நாலு கூட இல்லாமல் இருக்கலாம்; ஆனாலும் அதில்தான் எத்தனை அந்நியோன்யம், அன்பு, இனிமை எல்லாம்!

நாக்கைப் பிடுங்கிக்கொண்டு - அவமானத்தில் - சாகிற மாதிரி இந்தக் கேள்வியைக் கேட்டானே அந்த பாஸ்கரின் யோக்கியதை எனக்குத் தெரியாதா?

ப்ளு ஃபிலிம் பார்க்க அவன் பறப்பதும் உயரமான பெண்களை, முக்கியமாய் சின்ன இடையும் பெரிய மார்பகங்களும் கொண்ட பெண்களைக் கண்டால் அவன் தவியாய்த் தவித்து உருகுவதும் நான் அறியாத சமாச்சாரமா?

கட்டின பெண்டாட்டி வீட்டில் காத்திருக்கையிலேயே இன்னொரு பெண்ணிடம் கூடிக் குலவ ஆசைப்படுபவனாயிற்றே!

ஏன்? இந்த சுந்தர் மட்டும் என்ன வாழ்ந்தான்?

சினிமா வினியோகிக்கிறேன் என்ற ஹோதாவில், எத்தனை எத்தனை நடிகைகளை ருசிபார்த்திருக்கிறான்!

வகையாய் ஆபீஸில் இதற்கெல்லாம் இடம் உண்டு.

இன்னொரு சமயம் அவன் என்ன செய்தான்?

'ஹோட்டலில் இன்று ஒரு விசேஷம் நடக்கப் போகிறது. மென் ஒன்லி அஃபேர்! யாரும் மிஸ் பண்ணாதீர்கள்' - என்று போனில் அழைப்பு விடவே பாஸ்*, மாது, நான் மூவருமாய் போனோமே-

வடநாட்டு நண்பர் தங்கி இருந்த அறைக்கு அழைத்துப் போனான் சுந்தர் அங்கு இன்னும் நாலைந்து நண்பர்கள்.

சின்ன பெண்ணொருத்தி வந்தாள் - வயது பதினெட்டு இருந்தால் அதிகம்.

ஸ்ட்ரிப்டீஸ் நடனம் தொடங்கியது.

நடுவில் அவள் - சுற்றிலும் கையில் ட்ரிங் கிளாஸுடன் ஆண் மிருகங்கள்-

ஒவ்வொரு உடுப்பாய்க் களைந்து தோல் உரித்த கோழிக் குஞ்சு போல வெள்ளை வெளேரென்று சின்ன உடம்பைக் காட்டிக் கொண்டு அவள் ஆட—ஆட—மிருகங்களின் வெறி அதிகமானது-

அதற்கு அப்புறம் பத்துப் பேர்கள் சுற்றி நின்று பார்க்கையிலேயே அந்தப் பெண்ணோடு ஒருவன்...?

தன்னால் அந்தக் காட்சியை ரசிக்க முடியாமல் போனதை இப்போது நினைத்துக் கொண்டான் ஆத்மா.

மாதுவின் நிலையும் கிட்டத்தட்ட இவன் மாதிரியே இருந்ததால் ''நாங்கள் போகிறோம்'' என்று சொல்லிக் கொண்டு இருவரும் வெளியேறி விட்டார்கள்-

'ஆண் ஆணாக இருக்கணும்! இதெல்லாம் பட்டுக் கொள்ளமாட்டேன் என்றால் அப்புறம் ஆணாக இருப்பதின் அர்த்தம் என்ன?' என்று மற்றொரு சமயம் பாஸ்கர் கேலி செய்தபோதும், இவர்கள் பதில் ஒன்றும் சொல்லவில்லை.

'இருக்கட்டும், பாஸ்* எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும், சுந்தர் எந்த தினுசில் வேண்டுமானாலும் நடந்து கொள்ளட்டும்.'

'ஆனால் இவன் வழிக்கு ஏன் வர வேண்டும்?'

'என்ன சொன்னான்?'

**''நீ மனைவி இல்லாதவன் என்பதால் எங்களையும் அந்த நிலைக்குக் கொண்டு வர முயல்கிறாயா?''**



ரசிக்கல..!

டேய், பாஸ்*, நானும் சாருவும் வாழ்ந்த வாழ்க்கை உனக்குப் புரியாதுடா. திருடனாய் வாழும் உனக்கு அந்த அற்புதம் எப்படிப் புரியும்? புரிந்திருந்தால் மனைவியை இழந்து மனசுக்குள் சதா மருகிக் கொண்டிருக்கும் என்னைப் பார்த்து அப்படிக் கேட்டிருக்க மாட்டாய்.'

'சுந்தர், மாது... நீங்களும் பாஸ்*வோடு சேர்ந்து கொண்டீர்களே, இது என்ன அக்கிரமம்!'

''வாயை மூடடா, என்ன வார்த்தை பேசுகிறாய்?'' என்று அதட்டி இருந்தால் நியாயம்-'

'சுந்தர்! அடிப்படையில் நீ நல்லவன், எனக்குத் தெரியும். உன் சூழ்நிலை காரணமாக பாஸ்கரில் முக்கால் வாசியாக நீ மாறியிருக்கிறாய். அதனால் பாஸ்கர் அப்படிப் பேசினது உன் மனசுக்குச் சரியாகப் பட்டதோ, என்னமோ!'

'ஆனால்,

மாது?

நீ கூடவா மாது?'

'தர்ம, நியாயங்களுக்குக் கட்டுப்பட்டவன் நீ. அசிங்கமாக மனசால் நினைப்பதுகூட உனக்குக் கஷ்டம் என்று நான் நம்பியிருந்தேனே. பொய்யா?'

ஆத்மா நெற்றியில் ஓங்கிப் பட்டபட்டென்று அறைந்து கொண்டான்.

சற்றுமுன்வரை அழுத அழுகையெல்லாம் நின்று போய், தன் மேலேயே உண்டான பச்சாதாபம் மறைந்து போய், அவமான உணர்வு தோய்ந்துபோய்க் கோபமும் ஆத்திரமும் மட்டும் நெஞ்சுக்குள் பூதாகரமாய் உட்கார்ந்திருந்தன.

'என்ன செய்வேன்?'

'புண்பட்ட என் உள்ளத்துக்கு எந்த தினுசில் மருந்து போடுவேன்?'

வடிவேலுவின் கெஞ்சலுக்குக் கட்டுப்பட்டு வீட்டுக்குத் திரும்பி, ஒரு சாண்ட்விச்சை வேண்டா வெறுப்பாக முழுங்கிவிட்டுப் படுக்கையில் சாய்ந்தவனுக்கு இருப்புக் கொள்ளாததால், சிகரெட்டைப் பற்றவைத்தான், எழுந்து இப்படியும் அப்படியும் நடந்தான். சுவரில் சாய்ந்து நின்றான். மறுபடி படுக்கையில் உட்கார்ந்தான்.

'மனசே அடங்கு. அடங்கு. இந்த உலகத்தில் மனிதர்கள் மிருகமாக மாறுவதும், பிறர் மனசைக் கிழிப்பதும் சகஜம். அதனால் நீ கிடந்து துடிக்காதே. அடங்கு. அடங்கு.'

விடாமல் தனக்குத்தானே உபதேசித்துப் பார்த்தான்

ம்ஹூம். பலன் இல்லை.

'இத்தனை வருஷங்களாய் நான் யாருக்குத் தீங்கு செய்தேன்! சராசரி மனிதனைக் காட்டிலும் ஒழுங்காக வாழவில்லையா? யாருக்குக் கெடுதல் செய்தேன்? எனக்கு ஏன் இந்தத் தண்டனை?'

'என்ன செய்து இந்த வேதனையைக் குறைப்பேன்?' திடீரென்று குறுக்கே பாய்ந்தது புத்தி.

'பழிக்குப் பழி வாங்கினால்?'

'ஆமாம். வென்ஜன்ஸ்-'

'நல்லவனாய் வாழ்ந்து பட்டது போதும் -இனி அயோக்கியத் தனத்துக்கு அதே அயோக்கியத்தனத்தால் பதில் சொன்னால்தான் நிம்மதி-'

'என்ன செய்யலாம்?'

'எப்படி எப்படி?'

மாதுமேல் வஞ்சம் தீர்க்க ஏனோ மனசு தயங்கியது. கண்டிப்பாய் அவன் பாஸ்கரின் வார்த்தைகளை ஆமோதித்திருக்கமாட்டான் என்று தோன்றியதால், தாற்காலிகமாய் அவனை ஒதுக்கி வைத்துவிட்டு மற்ற இருவரைப் பற்றியும் நினைத்தான்.

'உமா, சித்ரா இருவரிடமும் அவரவர் கணவர் வேறு இடங்களில் மற்றப் பெண்களுடன் செய்யும் அக்கிரமங்களைப் பற்றிச் சொன்னால்..?'

'என்ன நடக்கும்?'

'கணவரிடம் சென்று ஏன் இப்படிச் செய்தீர்கள்? என்று சண்டை போடுவார்களா? அதன்மூலம் பாஸ்கரும் சுந்தரும் மன நிம்மதியை இழப்பார்களா?'

இது நடக்கும் காரியமாய்த் தோன்றவில்லை.

உமாவுக்கும், சித்ராவுக்கும் இத்தனை நாட்கள் இந்த உண்மைகளெல்லாம் தெரியாது என்பது என்ன நிச்சயம்.

முழுசாய் அறிந்திராவிட்டாலும், அரசல் புரசலாய்த் தெரிந்து வைத்திருப்பார்கள் என்றே ஆத்மாவுக்குத் தோன்றியது.

'என்ன... எங்களுக்குத் தெரியாததையா நீ சொல்ல வந்து விட்டாய் என்றால்...?'

மேலும் மனைவிகளின் கேள்விகளுக்கோ, கண்ணீருக்கோ, சண்டைக்கோ பயப்படும் ஆசாமிகள் பாஸ்கரும் இல்லை. சுந்தரும் இல்லை.

'போடி சரிதான், நான் புருஷன்; என்ன வேணுமானாலும் செய்வேன். நீ யாரடி கேட்பதற்கு?' என்று கத்தக் கூடியவர்கள்தாம். மனசு கஷ்டப்படவும் மாட்டார்கள். மனைவிக்குத் தங்கள் நடவடிக்கைகள் தெரிந்துவிட்டதே என்று புலம்பவும் மாட்டார்கள். சரியான அரக்கர்கள்.

அதனால் இப்படிச் செய்வதன்மூலம் ஆத்மாவால் எப்படி கண்டிப்பாகப் பழி வாங்க இயலும்?

வேறு ஏதாவது செய்ய வேண்டும்?

வேறு என்ன?

யோசி - அடிபட்ட மனமே யோசி - புத்திசாலி என்று மார்தட்டும் ஆத்மாவே யோசனை செய்.

சிகரெட் தீர்ந்து விட்டது.

வடிவேலுவைக் கூப்பிட்டு அலமாரியிலிருந்து 'ராத்மன்ஸ்' சிகரெட் பெட்டி எடுத்து வரச் செய்தான்.



சங்கிலித் தொடர்போல ஒன்றின்பின் ஒன்றாகப் புகைத்துக் கொண்டே சிந்தித்தான்-

'என்ன கேட்டான அந்த ஸ்கௌண்ட்ரல்?'

'நீ மனைவி இல்லாதவனாக இருப்பதைப்போல நாங்களும் ஆக வேண்டுமா?' என்றுதானே!

'அதையே அவனிடம் கொஞ்சம் மாற்றி நான் கேட்டால்?'

'வொய் நாட்?'

சொல்ல வேண்டியது என்ன என்று புரிந்து போனதால் ஆத்மா நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான்-

'எஸ்...'

'பழிக்குப் பழி-'

'எனக்காவது மனைவி செத்துப் போனதால நான் பெண்டாட்டி இல்லாதவனாக ஆனேன். ஆனால், மனைவி உயிருடன் இருக்கும் போதே பாஸ்கரும் சுந்தரும் அவர்களை உடலால், மனசால் இழந்தவர்கள் ஆக வேண்டும்.'

'ஆத்மா - இது ஒன்றின் மூலமாகத்தான்டா நீ சரியாய் வஞ்சம் தீர்த்துக் கொள்ள முடியும்.'

'என்னோடு சாரு வாழ்ந்த காலம் எத்தனை? நாலு மாசங்கள்?'

'எஸ்...'

'சரியாய் அதே நாலு மாசங்கள் ஆவதற்குள்... ஏன் அவ்வளவு நாட்கள்? மூன்று மாசங்கள் முடிவதற்குள், ஒருவனையாவது உயிருடன் பெண்டாட்டியை இழந்தவனாகச் செய்ய வேண்டும்.'

'அப்புறம் அவனை நாலு பேர்கள் நடுவில் நிறுத்தி 'நானாவது மனைவி செத்ததால் தனியானேன்! ஆனால் நீ? நீ ஒரு சுத்தமான ஆணா? இல்லை நாயா?' என்று கேட்க வேண்டும்.'

எரிமலை உள்ளுக்குள் குமுறுவதுபோலத் தத்தளித்த ஆத்மா, ஒரு முடிவுக்கு வந்த பின் சற்றே சாந்தமானான்-

தான் செய்வது சரியா, தவறா, தர்மமா, அதர்மமா என்பதைப்பற்றியெல்லாம் அவன் நினைக்கத் தயாராக இல்லை.

காயம்பட்ட நாகமாக மனசு கருவியதால் விடிவதற்கு அரைமணி இருக்கையில் ஒரு சபதத்தைச் செய்து அதை நிறைவேற்றுவது எப்படி என்று யோசிக்கத் தொடங்கினான்.

'முதலில் யார்?'

'உமாவா. இல்லை சித்ராவா?'

**கா**லை மணி ஆறேகால். மாது எழுந்து பல் விளக்கிக் கொண்டிருக்கும்போது, கையில் காபியுடன் வந்து நின்றாள் சுசிலா.

வாயைக் கொப்பளித்துவிட்டு, காபியை வாங்கிக் கொண்ட மாது.

படுக்கையில் உட்கார்ந்தான்.

இரவு சரியாகத் தூங்காததில் இருவருக்கும் கண்கள் சிவந்து எரிச்சலைத் தந்தன.

"ஆத்மா இன்னும் வரவில்லையாம் - போன் பண்ணிக் கேட்டேன்," சுசீலா மெதுவாகப் பேசினாள்.

வாயருகில் கொண்டுபோன டம்ளரை மறுபடியும் இறக்கி விட்டான் மாது.

புருவங்கள் நெரிந்தன - முகத்தில் கலக்கம்.

"இன்னுமா? ராத்திரி பூராவும் எங்கிருந்தான்? என்ன பைத்தியக்காரத்தனம் இது?"

காபியை ஒரே மடக்கில் குடித்து எழுந்தான். எலெக்ட்ரிக் ஷேவரைக் கையில் எடுத்து ஷேவ் பண்ணிக் கொண்டே, "நீ சுந்தரை போனில் கூப்பிடு" என்றான் மனைவியிடம்.

படுக்கை அறையிலேயே இருந்த எக்ஸ்டென்ஷன் நம்பர்களை சுழற்றினாள் சுசிலா.

"சுந்தர் இன்னும் எழுந்திருக்கவில்லையாம். எழுப்பட்டுமா என்கிறாள் உமா-"

"வேண்டாம்; நான் புறப்பட்டு ஆத்மாவின் வீட்டுக்குப் போகிறேன்; சுந்தர் எழுந்தால் விவரத்தைச் சொல்லச் சொல்."

உடையை மாற்றிக் கொண்டு ஹாலுக்கு வந்தான். சுசிலா தொடர்ந்தாள்.

"சோமசுந்தரம் எட்டு மணிக்கு வருவார் சசி. டெல் ஹிம் தட் ஐ ஹாவ் காட் அவுட் ஆன் அர்ஜெண்ட் வொர்க். இருக்கச் சொல். எட்டரை மணி வரைக்கும் பார். நான் வரவில்லை என்றால் ஆபீசுக்கு வந்துவிடச் சொல். அங்கு பார்க்கிறேன். டெல் ஹிம் தட் ஐ'ம் ஸாரி ஃபார் திஸ்."

வாசலுக்கு வந்தவன் வராந்தாவில் பேப்பர் படித்துக் கொண்டு தந்தை உட்கார்ந்திருப்பதைக் கண்டு மரியாதைக்காக நின்றான்.

"வெளியில் போகிறாயா?"

"ம்... ஒரு முக்கிய வேலை..."

தந்தை மேற்கொண்டு மகனை எதும் கேட்கவில்லை. தனக்குத்தெரியவேண்டிய விஷயமென்றால் அவனாகவே சொல்லுவான் என்ற நம்பிக்கை.

"ராத்திரி சரியாய்த் தூங்கவில்லையா? முகம் நன்றாக இல்லையே?"

என்ன சொல்லுவான் மாது?

பேரப்பிள்ளை பிறக்காத அவருக்கு மாது என்றும் குழந்தைதானே?

"சரி போய்விட்டு வாப்பா-"

மாது ஷெட்டை நோக்கிப் போனான்.

ஆத்மாவின் வெள்ளை பியட் அதன் இடத்தில் இல்லை.

மாடிக்குப் போனான்.

ராமு கதவைத் திறந்தான்.



எஜமானன் இரவு முழுவதும் வரவில்லையே என அவன் கவலைப்படுவது வெளிப்படையாகத் தெரிந்தது.

ஆத்மா இப்படி வீட்டுக்கு வராமல் தங்கியது இது தான் முதல் முறை.

சாதாரணமாகப் பதினொன்றுக்குள் வந்து விடுவான்; என்றாவது நீடிப்போனால் ஒரு மணியைத் தாண்டியதில்லை.

"காபி தரட்டுமா ஐயா?"

"ம்"-

காபி வந்தது - அதை உறிஞ்சிக்கொண்டே பேப்பரைப் புரட்டும்போது வாசற் கதவில் சாவியை நுழைக்கும் சப்தம் கேட்டது.

ராமு நடைக்கு ஓடினான்.

மாது தலையை நிமிர்த்தினான்.

ஆத்மாதான்-

தாங்க முடியாமல், முழுசாய இருக்கிறான் - தான் பயந்தது போல விபத்து ஒன்றும் இல்லை.

ஹாலில் நுழைந்த ஆத்மாவைப் பார்க்கையில் மாதுவுக்குப் பரிதாபமாக இருந்தது.

'நீர் கோத்து வீங்கிய முகம் - அலங்கோலமான உடை - அழுதானா என்ன?

'ஆத்மாவா! அழுதானா! அத்தனை தூரத்துக்கு மனசு புண்பட்டுப் போனானா?'

'முன்பொரு நாள் தன் அருமை மனைவி சாரு இறந்ததை விரிவாக ஒரே ஒரு தடவை மட்டும் பேசினபோது கூட கண் கலங்காத ஆத்மாவா அழுதிருக்கிறான்?'

சிரிக்கச் சிரிக்கப் பேசி, மென்மையாய், பண்புடன் நடந்து கொள்ளும் ஆத்மா, இப்போது எப்படிக் குலைந்து போயிருக்கிறான்!

எழுந்து சென்று - 'பைத்தியக்காரா' என்று முணுமுணுத்து ஆத்மாவை அணைத்துச் சமாதானம் செய்ய வேண்டும் என்ற ஆசையை மாது அடக்கிக் கொண்டான்.

ஆத்மாவை அறிந்த நாள் முதற்கொண்டே அவனுக்கும் சுசிலாவுக்கும் ஏனோ ஒரு தனிப் பாசம் உண்டு. அதுவும் அவனின் சின்ன வயசு இழப்பைக் கேட்டதிலிருந்து நெஞ்சுக்குள் அவனுக்கென தனி இடம் ஒதுக்கியிருப்பது ஆத்மாவுக்குக்கூடத் தெரியாது.

மாது மாடியில் காத்திருக்கிறான் என்பதைக் கீழே அம்பாஸிடரைப் பார்த்ததுமே ஆத்மா புரிந்து கொண்டான்.

ஒரு நிமிஷம் லிப்டில் ஏறாமல் தான் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப்பற்றிச் சிந்தித்தான்-

இவர்களைச் சந்திப்பதைத் தவிர்க்க முடியாது. ஆனால் இவர்களின் கெஞ்சலோ, சமாதானமோ தான் செய்திருக்கும் முடிவை மட்டும் பாதிக்க விடக்கூடாது என்ற தீர்மானத்துக்கு வந்த பிறகு, லிப்ட் ஏறித் தன் பிளாட்டுக்கு வந்தான்.

மாதுவைத் தனியாகக் கண்டதில் அவனுக்கு ஓர் அல்ப சந்தோஷம். மாதுமேல் அவனுக்குக் கோபம் இல்லை. அதுவும் கூடப்பிறந்த சகோதரி மாதிரி ஸ்வாதீனத்துடன் பழகும் சுசிலாவை அவனால் வேறு எந்தத் தினுசிலும் நெருங்குவது சாத்தியமாகாது.

அவனின் எதிரி மற்ற இருவரில் ஒருவர்-

இன்னும் யாரென்று அவன் முடிவு எடுக்கவில்லை.

இதில் அவசரம் கூடாது. நேரம் வேண்டும். நிறைய... நிறைய...

''ஹலோ, ஆத்மா!''

பதிலுக்கு சின்னதாய்ப் புன்னகைத்துவிட்டு சோபாவில அமர்ந்தான் ஆத்மா.

'மாதுகூட இரவில் அவஸ்தைப்பட்டானா? முகமும் கண்ணும் காட்டுகின்றனவே.'

ஆத்மாவுக்குத் திருப்தியாக இருந்தது.

சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டு மாதுவை நன்றாய நிமிர்ந்து பார்த்தான்-

'இனியும் எப்படிச சம்மா இருப்பது? ஏதேனும் பேச வேண்டாமா?'

''நேத்து நடந்த சம்பவத்துக்காக நாங்க ரொம்ப வருத்தப்படுகிறோம், ஆத்மா. அந்த வார்த்தை, அந்தப் பேச்சு, அவை ரொம்பத் தரக்குறைவானவை. இது எப்படி நிகழ்ந்ததென்றே தெரியவில்லை. இட் மஸ்ட் பீ இன்ப்ளுயன்ஸ் ஆஃப் த ட்ரிங்ஸ். புரிந்துகொள் ஆத்மா, ப்ளீஸ்''

ஆத்மா பதில் பேசவில்லை.

'நான் எதும் பேசக்கூடாது; எதாவது பேசினால் தப்பித் தவறி என் ஆத்திரம் தன் ஸ்வரூபத்தைக் காட்டக் கூடும்; என் உள் நோக்கத்தை இவன் புரிந்து கொள்வான்.'

ஆத்மா வருத்தத்தின் காரணமாகவே பேசாமல் இருக்கிறான் என்று எண்ணிய மாது தொடர்ந்து, தாங்கள் உடனேயே புகாரியை விட்டு வெளி வந்தது, வீட்டுக்கு வந்து காத்திருந்தது, பின் காரை எடுத்துக் கொண்டு எம்.வி.வி., ஜிம்கானா முதலிய இடங்களுக்குச் சென்றது எல்லாவற்றையும் விரிவாகச் சொன்னான்.

'அப்படியானால், இவர்கள் நிஜமாகவே தான்செய்த தவறுக்காகத் துடித்துப் போய்விட்டார்களா?'

'நான்தான் தவறாகக் கற்பனை செய்து விட்டேனா?'

மாது பேசி, ஆத்மா யோசிக்கும்போதே, வாசல் மணி அழைத்தது.

ராமு கதவைத் திறந்ததும் - உள்ளே சுந்தர் வந்தான்.

ஆத்மாவின் நனைந்து அழுக்கடைந்த உடைகளையும், உப்பின முகத்தையும் கண்ட அவன், ''என்னாயிற்று ஆத்மா? ஆக்ஸிடெண்ட்டா?'' என்று பதறினான்.

இதற்கும் ஆத்மா மௌனமாகவே இருந்தான்.

மாது நிதானமாய் பேசினவைகளையே சுந்தர் படபடப்புடன் மீண்டும் விவரித்தான்.



கடைசியில் ''பாஸ்கர் சொன்னது, செய்தது, என் தொடர்ந்து இப்போது செய்வதும் ரொம்ப மோசம் ஆத்மா. நேற்று எத்தனை கெஞ்சினோம் தெரியுமா? சுத்தமாய்வர மறுத்துவிட்டான். வீ ர்யவி பெலட் பாட் - இப்போது கூட அவன் வீட்டுக்கு, இங்கு வரும் முன் போன் பண்ணினோ. 'நான் எதற்காக இந்தக் காலை வேளையில் அங்கு வரவேண்டும்? எனக்கு வேலை இருக்கிறது. கஸ்டமர்ஸ் காத்திருக்கிறார்கள்' - என்று சொல்லி விட்டான் - சே - இது ரொம்ப மோசம், இல்லையா, மாது?''

சுந்தர் வேகமாகப் பேசத் தொடங்கியதுமே மாது கொஞ்சம் பயந்தான். 'நாங்கள்' என்று பொதுவாகப் பேசி இது நாழிகை அவன் ஆத்மாவைச் சமாதானம் செய்ததில் பாஸ்கரையும் சேர்த்தே பேசியிருந்தான் - ஆத்மாவின் கோபம் பாஸ்கரிடம் தனிப்பட்ட விதத்தில் இருக்கும் என்று கணக்கிட்டே அவன் கூறியதை சுந்தர் கெடுத்துவிடப் போகிறானே என்று மாது பயந்தது சரியாகப் போயிற்று.

'ரஸாபாசமாய்ப் பேசிவிட்டு மன்னிப்புக் கேட்கத் தயாராக இல்லாத அளவுக்குத் திமிரா?'

'முதல் நாள் இரவு மாதுவும், சுந்தரும் என்னைத்தேடி அலைந்திருக்கிறார்கள்; சமாதானம் செய்யத் துடித்திருக்கிறார்கள்-'

'ஆனால் பாஸ்?'

'வயிறு முட்டச் சாப்பிட்டுவிட்டுப் பெண்டாட்டியுடன் படுக்கப் போய்விட்டானா?'

தனக்கு முதல் எதிரி யார், முதலில் வஞ்சம் தீர்த்துக் கொள்ள யாரைத் தேர்ந்தெடுப்பது என்று நிதர்சனமாய் ஆத்மாவுக்குப் புரிந்து போனது.

பாஸ்கர்-

அவன்தான் - அந்தத் திமிர் பிடித்தவன் தான்-

சுந்தரும் மாதுவும் மாறி மாறிப் பேசினபிறகும் தான் வாய் திறக்காமல் இருப்பது அநாகரீகம் என்று நினைத்ததும், முதலில் இவர்களை இங்கிருந்து அனுப்ப வேண்டுமானால், தான் இவர்கள் சமாதானத்தை ஏற்றுக் கொண்டதாக அறிவிப்பதுதான் சரி என்று எண்ணிய ஆத்மா மெல்லப் பேசினான்.

''தட்ஸ் ஆல் ரைட். நண்பர்கள் என்றால் நாலும்தானே இருக்கும்? முதலில் கஷ்டமாகத்தான் இருந்தது. நௌ ஐ'ம் ஆல் ரைட்''-

இவன் நிஜம் சொல்கிறானா? இல்லை முழுப் பொய்யா?

''உன் முகம் ஏன் இப்படி இருக்கிறது? துணிகளில் ஏன் இந்த அழுக்கு, ஈரம்?''

- சுந்தர் விடவில்லை.

''இதுவா? மெரினாவிற்குச் சென்று கடலில் அளைந்தேன். அப்புறம் அங்கேயே காரில் படுத்துத் தூங்கி விட்டேன். தட்ஸ் வொய் ஐ லுக் லைக் திஸ்''

'அப்படியானால் ஆத்மா சரியாகி விட்டானா? மனசில் வருத்தம் போய்விட்டதா?'

மாது, சுந்தர் இருவருக்குமே நிம்மதி.

'ராத்திரி சரியாய்த் தூங்காததால் தலையை ரொம்ப வலிக்கிறது. காபியுடன்

'மாத்திரை போட்டுக் கொண்டு ஒரு குட்டித் தூக்கம் தூங்கி எழுந்தால சரியாகிவிடும்'' - வலிய வரவழைத்துக் கொண்ட புன்னகையுடன் ஆத்மா பேசினான்.

உண்மையாகவே இவன் சாதாரணமாயத்தான் இருக்கிறான் என்று நம்பியதால, "சரி இப்போது நாங்கள் புறப்படுகிறோம் - மாலையில பார்க்கலாம், டேக் ரெஸ்ட்'' என்று சொல்லி மாதுவும், சுந்தரும் வெளியே வந்தார்கள்.

லிப்டில் கீழே இறங்கும்போது சுந்தர், "அவன் ஸ்போர்டிவ ஆகத்தான் எடுத்துக் கொண்டிருக்கிறான், நாம்தான் அனாவசியமாய்ப் பயந்து விட்டோம்'' என்றான்.

'இதுவும் சரிதான். சுசி ஸைக்காலஜி படித்தவள். மனுஷனின் மன ஓட்டத்தை அறிந்தவள்' என்று நினைத்துத் தானும் சுசிலா சொன்னதை வைத்துக் கொண்டு ரொம்பத்தான் அலட்டிக் கொண்டு விட்டோம் என்று எண்ணிய மாது பேசாமல் காரில் வந்து அமர்ந்தான்.

சித்ராவுக்கு மனசு சரியில்லை. குழந்தை ஸுமனாவை மடியில் வைத்துக்கொண்டு காலை ஆகாரத்தைச் சிறிது சிறிதாய்க் கொடுத்தவளுக்கு, முதல்நாள் இரவு சம்பவத்தை கொஞ்சமும் மறக்கமுடியாமல் போயிற்று.

போட்கிளப் ரோடிலிருந்த அவர்களின் இல்லம் கண்ணைப்பறிக்கும் திணுசில், நாகரிகமாய் அமைந்திருந்தது.

சாப்பாட்டு ஹாலிலிருந்து தோட்டத்துக்கு வரப் பெரிய கண்ணாடிக் கதவுகள் உண்டு.

அதன் வழியாய்ச் சென்றால் பசுசைப் புல்வெளியும், பூத்துக்குலுங்கும் செடிகளும் மனசைக் கவரும்.

புல்வெளியில், ஆடும் ஊஞ்சல் போன்ற சோபாவைப் பொருத்தியிருந்ததில் அமர்ந்து தோட்டத்தின் ஜீவராசிகளை வேடிக்கை காட்டிக் கொண்டே அன்றாடம் மகளுக்கு உணவு கொடுப்பாள் சித்ரா.

முக்கால்வாசி இரவுகளில் கணவனுடன் இருக்க வேண்டி வருவதால் குழந்தையைக் கவனித்து இரவு உணவைக் கொடுக்க முடியாது போவதில் சித்ராவுக்குக் கொஞ்சம் வருத்தமே.

ஸுமனாவுக்கு வேண்டியதைச் செய்யாமல் என்ன பார்ட்டி, குடி, அமர்க்களம் என்று கோபம் எழும்.

ஆனால் வெளியில் சொல்ல மாட்டாள்.

சொன்னால் மட்டும் இவள் நினைப்பது நடந்து விடுமா?

குழந்தை பிறந்த புதிதில் பாஸ்கர் தன் நண்பர்களோடு மாடியில் குடித்து, சிரித்துப் பேசும் வேளையில் இவள் அருகில் இருந்து அவர்களைக் கவனிக்க வேண்டும் என்று சொன்ன நாட்களில், ஓரிரு முறைகள் 'நான் எதற்கு? ஆள் போதாதா? ஸுமனாவுக்கு ஆகாரம் கொடுக்கணுமே' என்று கூறிச் செமமையாய் வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கிறாள்.

"ஏன், ஆயா பால் கொடுத்தால் உன்பெண் குடிக்க மாட்டாளோ? என்னையும், என் ஃப்ரண்ட்ஸையும் கவனிப்பதைவிட உனக்கு அது ரொம்ப முக்கியமோ?''



என்று பாஸ்கர் ஊசி குத்துகிற மாதிரிக் கேட்பான்.

இல்லையென்றால், "துரைசானி இந்த வேலை செய்தால குறைந்துவிடுவாயோ?'' என்பான்.

இன்னும் ஏதேதோ சொல்லியிருக்கிறான் - அதனால் அவன் பக்கத்துப் போக சித்ராவுக்குப் பயம்.

பணக்கார வக்கீலின் ஒரே மகளானாலும், சித்ரா சுபாவத்தில் ரொம்ப சாது. அவள் அம்மா அப்படித்தான் இருந்திருக்கிறாள் - சிம்மமாய்க் கர்ஜிக்கும் தந்தையின் எதிரில் நின்று ஒரு வார்த்தை அம்மா பேசி, சித்ரா அறிந்தது கிடையாது.

பாஸ்கர் அவள் தந்தையிடம் ஜூனியராகச் சேர்ந்த நாட்களில் பாஸ்கரோடு அவளுக்கு நேரடியாய் அதிகப் பரிச்சயம் இல்லை.

இரண்டு வருஷங்கள் கழித்து, ஒருநாள் அம்மா இவளைத் தனியாய் அழைத்து, "பாஸ்கருக்கு உன்னைக் கல்யாணம் செய்துகொடுக்கத் தீர்மானித்திருக்கிறாராம் உன் அப்பா; சொல்லச் சொன்னார். அந்தப் பிள்ளையைப் பார்த்தால் நல்லவனாகத் தெரிகிறது. கண்ணுக்கு நன்றாய இருக்கிறான். பிக்கல் பிடுங்கல் இல்லை. ரொம்பப் புத்திசாலி. முன்னுக்கு வரக் கூடியவன் என்றும் அப்பா சொல்கிறார்'' என்று சொன்னாள்.

பி.ஏ. முதலாண்டு சித்ரா படிக்கையில் திருமணம் நடந்தது.

"பெண் படித்து என்ன ஆகணும்? எனக்கு இஷ்டமில்லை; பாஸ்கருக்கும் விருப்பமில்லை'' என்றார் அப்பா.

மாமனாருக்கு ஏத்த மருமகன் தான்!

பாஸ்கர் வீட்டோடு இருக்கும் மாப்பிள்ளையானான்.

முதல் மூன்று வருஷங்கள் சித்ரா உண்டாகவே இல்லை!

அம்மாவுக்கு ரொம்ப வருத்தம்.

ஜோஸியம் பார்த்தாள். தெரிந்த கோவில்களுக்கெல்லாம் அபிஷேகத்துக்கு பிரார்த்தித்துக் கொண்டாள்.

மகளிடம் "எல்லாம் சரியாக இருக்கிறதல்லவா?'' என்று தனிமையில் கேட்பாள்.

அதற்கொன்றும் குறைச்சல் இல்லை. இரவு எத்தனை மணிக்குக் கேஸ் கட்டுகளிலிருந்து மீண்டு வந்தாலும், சித்ராவை உலுக்கி எழுப்பாமல் பாஸ்கர் படுத்ததில்லை.

தினம் பெண்டாட்டி தேவைப்படும் ரகம்தான் பாஸ்கர்.

டாக்டரிடம் சித்ராவை அழைத்துப் போனாள் அம்மா. "டி அண்ட் ஸி பண்ணுங்கள் - சரியாகிவிடும்'' என்றார் டாக்டர்.

அவர் வாக்கு பலித்தது.

டி அண்ட் ஸி பண்ணிய அந்த மாசமே கைமேல் பலன்.

ஆனால் மாசங்கள் ஐந்தைக்கூட அந்தக் கரு தாண்டவில்லை.

அபார்ஷன் -

மறுபடி உண்டானாள் சித்ரா-

இதற்கு எழுபது நாள் வாழ்வு-

ஏன் இப்படி?

ஆசைப்பட்ட அப்பாவே ஆடிப்போனார்.

தருசாவூருக்கு அருகில் இருக்கும் கர்ப்பரக்ஷகி கோவிலுக்குப் போய் வந்தார்கள். இதற்கும் 'டெபபே' காட்டி விட்டது மூன்றாவது கர்ப்பம் - இது இரண்டாம் மாசமே அவுட்.

சித்ரா குன்றிப் போனாள்.

அம்மாவிடம் புலம்புவாள்.

பாஸ்கருக்கு இதெல்லாம் பிடிக்கவில்லை. இரண்டு மூன்று முறைகள் அபார்ஷன் ஆனால் என்ன? சின்ன வயசுக்காரிதானே? இந்த முறை இல்லாவிட்டால் இன்னொரு தடவை; எதற்காக இந்த மாய்மாலம்? என்றே கசந்தான்.

பேரும் புகழும் அவனை நாடி வந்த காலம் அது. அதனால் சந்தோஷமாக இருக்க வேண்டிய தருணம் வீணாகிறதே என்றே அவன் அங்கலாய்த்தான்.

கிளப் - நண்பர்கள் கூட்டம் பெருகியது. குடி, வேறு பெண்கள் என்பது வாழ்வில் புகுந்து, தங்களுக்கென நிரந்தரமாய் இடத்தைப் பிடித்துக் கொண்டது அப்போது தான்.

'ஆறு மாச காலத்துக்காவது சித்ரா கர்ப்பம்தரிக்காமல் இருப்பது நல்லது! கருப்பை உறுதி பெற வேண்டும்' என்று டாக்டர் சொல்லியிருந்ததைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டான் பாஸ்கர்.

இலை மறைவு காய் மறைவாகவே இருந்த பாஸ்கரின் நடவடிக்கைகள், அவன் மாமனார் காதுக்கு எட்டவில்லை. பாஸ்கரின் கோர்ட் சாதனைகளை மட்டுமே அவர் பார்த்து அனுபவித்து மகிழ்ந்தார்.

அந்த சந்தோஷத்தைக்கூட ரொம்ப நாட்களுக்கு இறைவன் அவருக்குக் கொடுக்கவில்லை.

அந்தத் தடவை டெல்லி சுப்ரீம் கோர்ட்டில் கேஸுக்காகப் போனவர், ரொம்ப நாளாய் கங்கையில் ஸ்னானம் செய்ய ஆசைப்படும் மனைவியையும் 'சரி வா, ரிஷிகேசம், ஹரித்துவார் போய் வரலாம்' என்று கூட அழைத்துப் போனார்.

கணவனும் மனைவியுமாய்ச் சேர்ந்து மேலோகத்துக்குப் போக வேண்டும் என்று அவர்கள் தலையில் எழுதியிருக்கிறது.

டெல்லிக்கு ஐந்து மைல் இருக்கையில் - என்ன கோளாறோ? எது தவறாகிப் போனதோ? - விமானம் ஆகாயத்தில் வெடித்து கருகிக் கீழே விழுந்ததில் ஒட்டுமொத்தமாக நூற்றி இருபது பயணிகள் செத்துப் போனார்கள்.

கணவன் இருந்தும் சித்ரா மனசுக்குள் அனாதையானாள்.

அம்மா இருந்தாள் - இவள் துக்கத்தை ஆற்ற. இரண்டு வார்த்தைகள் இதமாய்ச் சொல்ல. இனி?

சுபாவத்தில் கூச்சமும் சாதுத்தனமும் கொண்ட காரணத்தால், உறவினர்கள், ஏற்ற தெரிந்தவர்கள் மத்தியில் நெருங்கிய நண்பர்கள் என்று யாரையுமே சித்ரா சேர்த்துக் கொள்ளவில்லை.



அவள் தனிமைக்கு இதுவும் ஒரு காரணம்.

வரிசையாய அபார்ஷன் ஆகி மனசு நொந்து கிடக்கும் மனைவிக்கு இரண்டு வார்த்தைகள் இதமாகச் சொன்னவனில்லை பாஸ்கர். மாறாக-

'என்னை எப்போது பார்த்தாலும் அழுத கண்களும், சிந்திய மூக்குமாய்? பார்க்கச் சகிக்கவில்லை. ஏற்கனவே ரொம்ப அழகு; இது வேறு தேவையா?' என்று நையாண்டி பண்ணியிருக்கிறான்.

"டோண்ட் மேக் எ ஃபஸ். ஆப்டர் ஆல் வி ஆர் யங். குழந்தை பிறக்காமலா போய்விடும்? அப்படியே பிறக்கா விட்டாலும் என்ன குடியா மூழ்கிவிடும்? மாதுவையும் சுசிலாவையும் பார். அவர்கள் சந்தோஷமாக இல்லை?" என்று இரைந்திருக்கிறான்.

'சுசிலா படித்தவள் - வேலை பார்க்கிறாள். மனசுக்கு ஒரு மாறுதல் இருக்கிறது. நான் அப்படியா?'

'மாது உங்கள் மாதிரியா? குடிப்பது, வெளியில் போவது எல்லாம் ரொம்ப அளவோடுதான் - மனைவி மேல மரியாதை கலந்த அன்பல்லவா வைத்திருக்கிறார்?'

என்றெல்லாம் நினைத்த சித்ரா, பாஸ்கரிடம் அவைகளை எடுத்துச் சொன்னதில்லை.

அவ்வளவு தைரியம் அவளுக்கு ஏது?

பாஸ்கர் பந்தாடிவிடமாட்டானா?

பணம், சௌகர்யமான வாழ்க்கை, கண்ணுக்கு அழகிய - புத்திசாலியான கணவன் என்று எல்லாம் கிடைத்தும், இப்படிப் பயந்து பயந்து அடங்கி அடங்கித் தனிமையில் வாழ்ந்ததில் சித்ராவுக்கு தனக்கு என்ன தெரியும்? தன்னிடம் என்ன இருக்கிறது? அழகா, புத்தியா? ஒன்றுமில்லை என்ற காம்ப்ளெக்ஸ் மட்டும் விஸ்வரூபம் எடுத்துக் கொண்டிருந்த சமயத்தில்தான், அதிருஷ்டவசமாய் மறுபடி அவள் கர்ப்பமாகி, நல்ல விதத்தில் ஸுமனா பிறந்தாள்.

வாழ்க்கையில் பிடிப்பு உண்டாகி விட்டதால், இப்போதெல்லாம், பாஸ்கரின் சிடுமுஞ்சித்தனத்தையோ, பணத்திமிரையோ, அகங்காரத்தையோ பொருட்படுத்தாமல் இருக்கக் கற்றவளுக்கு, நேற்று புகாரியில் நடந்த சம்பவத்தை மட்டும் ஏனோ என்ன முயன்றும் மறக்க முடியாமல் போயிற்று.

"ம்மா - காக்கா - குவி"

ஸுமனா சித்ராவின் தாடையைத் திருப்பி ஏதேதோ சொல்ல முயன்று கொண்டிருந்தாள்.

"ஆமாம் கண்ணம்மா - அது குருவிதான் - சமத்தா சொல்லத் தெரியறதே" உணவுத் தட்டை அந்தப் பக்கம் வைத்துவிட்டு, ஆயா நீட்டிய ஜலத்தினால் ஸுமனாவின் வாயை அலம்பி, டவலால் துடைத்தாள்.

"இன்னும் அரைமணி இங்கேயே விளையாடட்டும். வெயில் வந்துவிடும் உள்ளே தூக்கி வா" என்று பணித்து விட்டுச் சாப்பாட்டு ஹாலுக்குள் நுழைந்தாள்.

பாஸ்கர் மேஜைக்கு வரும் முன் எல்லாம் தயாராக இருக்க வேண்டும். இல்லாவிட்டால், "உனக்கு அதைவிட வேறு என்ன முக்கிய ஜோலி" என்று

ஆட்கள் நடுவிலேயே முறைப்பாள்.

சமையற்கட்டுக்குப் போய் சிற்றுண்டி ரெடியாகி விட்டதா என்று பார்த்தாள். டேபிளில் தட்டும் தண்ணீரும் வைத்துவிட்டு, நாற்காலியில் உட்கார்ந்தாள். ஆத்மாவின் சுண்டிப்போன முகம் கண்ணெதிரில் தோன்றியது.

'பாவம்.'

'ஓர் ஆண்பிள்ளையைப் பார்த்துக் கேட்கும் கேள்வியா இவர் கேட்டார்?'

'இரவு பூராவும் அவனைக் கண்டுபிடிக்க முடியவில்லையாமே!'

'ஏதாவது இசகுபிசகாய் செய்து கொண்டிருப்பானோ?'

'சீச்சி - ஆத்மா அப்படியொரு கோழை இல்லை, நிச்சயமாய்.'

காலையில் சுந்தர் போன் பண்ணி 'வா, நாம் போய் ஆத்மாவிடம் 'ஸாரி' சொல்லிவிட்டு வரலாம்' என்று அழைத்தபோது 'எனக்கு வேலை இருக்கிறது' என்று அவனிடம் சொல்லிவிட்டு, தன்னிடம் 'நானா? ஸாரி சொல்வதா? எதற்காக? ரப்பிஷ்-!' என்று பாஸ் சொன்னது மனசை உறுத்தியது.

செய்கிற தவறையும் செய்துவிட்டு, இது என்ன அடாவடித்தனம்?

நண்பர்கள் ஒருவர்க்கொருவர் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதால் என்ன குறைந்துவிடும்?

மாது சொல்லி, சுந்தர் சொல்லியே கேட்காதவர், தான் சொல்லியா கேட்கப் போகிறார் என்ற துக்கம், சித்ராவின் உள்ளிருந்து நெடிய பெருமூச்சாக வந்தது.

'எப்படியானாலும் போகட்டும்.'

'எனக்கென்ன?'

'ஆமாம். இனி அந்த ஆத்மா இங்கே வராமல் இருந்து விடுவானோ?'

'எந்த முகத்தை வைத்துக் கொண்டு வருவான்?'

'ரோஷம் மானம் உள்ளவனென்றால் வரத்தான் மாட்டான்.'

'ஆத்மா எத்தனை நல்லவன்! பாஸ் என்னை நாலுபேர்கள் எதிரில் மட்டம் தட்டினால், எடுத்தெறிந்து பேசினால் ஆத்மா அந்தப் பேச்சை மேலும் தொடரவிடாமல் சாமர்த்தியமாய் மாற்றின நாட்கள் உண்டே!'

'இவர் சார்பில் நான் மன்னிப்புக் கேட்டுக் கொண்டால் என்ன?'

'முதலில் அவன் எங்கிருக்கிறான் என்று தெரியட்டும், அப்புறம் இவர் கோர்ட்டுக்குப் போனதும் அவனுடன் தொடர்பு கொண்டு, 'ஸாரி ஆத்மா! எதையும் மனசில் வைத்துக் கொள்ளாதீர்கள்' என்று கேட்கணும் - ஆத்மா புரிந்துகொள்ள மாட்டானா?'

**பா**த் டப்புக்குள் ஏறி உட்கார்ந்து ஷவரைத் திருப்பி விட்டான் ஆத்மா. ஜில்லென்று ஜலம் விழுந்து சுகானுபவமாக இருந்தது.

காலை நீட்டி டப்பில் சாய்ந்து கொண்டான்.

கண்களை மூடினான்.

திரும்பிக் கண்விழித்த போது பாத்ரூம் கதவை ராமு தட்டுவது புரிந்தது.



''ஐயா - ஐயா-''

எழுந்து ஷவரை நிறுத்தி, டவலால் உடம்பைச் சுற்றிக் கொண்டு கதவைத் திறந்தான்.

''என்ன ராமு?''

''ரொம்ப நாழியாப் வெளியில வரலிங்களே..! எனக்குப் பயமாய் இருந்தது - ஐயா, உடம்புக்கு ஒன்றும் இல்லையே''

''மணி என்ன?''

''எட்டரைங்க''

'மை காட் ... ஒன்னரை மணி நேரமாகவா பாத்டப்பில் உட்கார்ந்திருக்கிறேன்? அதுதான் ராமுவுக்குப் பயம் எழுந்து விட்டது.'

''முதல்லே ஒரு தடவை கூப்பிட்டனுங்க. நீங்க ஒண்ணு கேட்கலை. திரும்ப இப்ப உங்களுக்குக் கோபம் வந்தாலும் பரவாயில்லேனு பலமாத் தட்டினேனுங்க - ரொம்ப நாழியா தட்டறேனுங்க.''

இந்த ராமுவுக்குத்தான் ஆத்மாவின்மேல் எத்தனை கரிசனம்!

''ராத்திரி சரியாத் தூங்கலை ராமு - அதான் டப்பில உட்கார்ந்தவன் என்னை அறியாமல் அசந்து விட்டேன். உடம்புக்கு ஒன்றும் இல்லை. கவலைப்படாதே.''

பெட்ரூமுக்குப் போய் தொளதொளவென்று பைஜாமா, ஜிப்பா அணிந்துகொண்டு ''ராமு-'' என்று குரல் கொடுத்தான் ஆத்மா.

''ஐயா!''

''என்ன டிபன்?''

''என்ன வேணும்னாலும் பண்றேனுங்க... டோஸ்ட் முட்டை போடவா? இல்லை பூரி கிழங்கு செய்யட்டுமா?''

''பூரி.''

அரை மணியில் மணக்க மணக்க டிபன் ரெடி.

ஒரு பிடி பிடித்தான் ஆத்மா - அகோர பசி.

காபியைக் குடித்தவன், ''நான் இன்றைக்கு ஆபீசுக்குப் போகவில்லை ராமு - தூங்கப் போகிறேன். மத்தியானத்துக்கு நல்ல சாப்பாடாய்ச் செய்து வை - என்னை எழுப்பாதே - நானே எப்போது எழுந்திருக்கிறேனோ, அப்போது சாப்பிடுகிறேன். யாராவது போன் பண்ணினால், இல்லை வந்தால், நான் வெளியில் போயிருப்பதாகச் சொல்லிவிடு'' என்று பணித்தான்.

பெட்ரூமுக்குள் போய் ஏ.ஸி.யை ஓட விட்டான் - கட்டிலில் காலை நீட்டிப் படுத்தான் - எதொன்றையும் நினைக்காமல் கட்டையாய் நிமிஷத்தில் உறங்கிப் போனான்.

ஆத்மா எழுந்தபோது மணி பிற்பகல் மூன்று. புத்தி தெளிந்திருந்தது.

முகத்தை அலம்பிக் கொண்டு, ராமு சூடாய்ப் பரிமாறிய உணவை உண்டான்.

''மாது ஐயா போன் பண்ணாரு - இரண்டாம் டிரிப் பண்ணி நீங்க ஆபீஸ்லே இல்லியேன்னாரு. அப்புறமா தான் நீங்க தூங்கிட்டு இருக்கிறதைச் சொன்னேன் - சரி, எழுப்பாதேனுட்டாரு - மத்தபடி வேற யாரோ நாலைஞ்சு போன்

பண்ணாங்க.

'ஸோ... பாஸ்கர் ஒருமுறைகூட போன் பண்ணவில்லையா?'

சிகரெட்டுடன் மறுபடி பெட்ரூமுக்குள் நுழைந்தான் ஆத்மா-

இனி யோசிக்க வேண்டும்-"

படிப்படியாய் - நிதானமாய்-

நேற்று இரவு செய்த தீர்மானம் இனி எக்காரணத்தைக் கொண்டும் மாறக்கூடாது - அதை எப்படி நிறைவேற்றுவது என்பதை மட்டுமே திட்டமிட வேண்டும். டாஸிங் டேபிள் மேல் உட்கார்ந்துகொண்டு இவனைப் பார்த்து அழகாய்ப் புன்னகைக்கும் சாருவைக் கண் கொட்டாமல் பார்த்தான் ஆத்மா.

'எதற்காக ஆத்மா இத்தனை கோபமும், தாபமும்? வஞ்சம் தீர்க்கும் சுபாவம் கொண்டவரில்லையே நீங்கள்?' என்று அவள் ஆச்சரியப்படுவதாக முதலில் தோன்றியது. மெல்ல மாறி 'பழிக்குப் பழி வாங்க இத்தனை கேவலமாக - நீங்களா...! என் ஆத்மாவா நினைக்கிறீர்கள்?' என்றும் வருந்துவதாகத் தோன்றியது-

ஆத்மாவின் மனசு லேசாய் சலனப்பட்டது.

சலனத்தை மீறிக்கொண்டு அடிபட்ட ஆண்மை சீறியது.

ஒரு கணம்தான்.

'சாருவை எண்ணிக் கொண்டே நல்ல கணவனாக வாழ்ந்ததற்கு நேற்றைக்கு கிடைத்த பரிசைப் பார்த்தாயா? போதும் சாமி போதும். இனி ஆயுசுக்கும் இந்த ரணம் ஆறாது - பாஸ் மாதிரியான ஆட்களை வைக்கிற இடத்தில வைத்தால்தான் சரிப்பட்டு வரும். இல்லையென்றால் நேற்று நீ - நாளைக்கு யாரோ? - நீ உணர்ந்த வலியை அவன் உணர்ந்தால்தான் வாலைச் சுருட்டிக் கொள்வான் - ஆத்மா! பெண்டாட்டியின் படத்தைக் கண்டு மயங்காதே-'

சிகரெட் கையில் சுட்டது-

ஆஸ்ட்ரேயில் அதை அமுக்கி அணைத்த ஆத்மா, எழுந்து, சாருவின் புகைப்படத்தைக் கையில் எடுத்தான்.

புகைப்படத்தை அழுந்த ஒருமுறை முத்தமிட்டு, பீரோவைத் திறந்து கண்காணாத இடத்தில் அதை வைத்து, மேலே துணிகளைப் போட்டு மூடினான்.

எக்காரணத்தைக் கொண்டும் மனசு நெகிழக்கூடாது என்ற வெறி எழ, சாருவின் படத்துக்கு அருகில் இருந்த பெற்றோரின் படத்தையும் எடுத்து உள்ளே வைத்தான்.

யோசித்தான்.

'என்னை மாற்றக்கூடிய வேறு ஏதாவது சாமான்கள் இந்த வீட்டில் இருக்கின்றனவா?'

'மறுபடியும் இல்லை.'

கல்கத்தாவை விட்டு வரும்போது, சாருவின் புகைப்படம் ஒன்றைத் தவிர, மற்றவைகளை எல்லாம் - அவளின் உடைகள், அணிகலன்கள், மற்ற உடைமைகள் எல்லாவற்றையும் - அனாதை விடுதிக்குக் கொடுத்து விட்டானே'

கதவைத் திறந்து ஹாலுக்கு வந்து ராமுவிடம் காப்பி கொண்டு வரச் சொல்லி



திரும்பவும் படுக்கையில் வந்து சாய்ந்து கொண்டான்.

காபி வந்தது. குடித்தான். சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டு திட்டம் தீட்டத் தொடங்கினான்.

முதல் ஸ்டெப் - மற்றவர்கள் ஒருவனுக்கும் எந்த விதத்திலும் இவனின் திட்டம் தெரியக்கூடாது - இது நிறைவேற வேண்டுமானால் பழையபடி இருப்பது, சகஜமாய்ப் பேசி சிரித்துப் பழகுவது ரொம்ப ரொம்ப முக்கியம்.

'பாஸ்கரிடம் எனக்குக் கோபம் இல்லை என்று பொய்யாக நம்பவைக்க வேண்டும். ஏதோ குடிபோதையில அவன் பேசினான்; நானும் அதே போதையில் பைத்தியக்காரத்தனமாக நடந்து கொண்டேன் என்று திறுசில் பேச வேண்டும்.'

இப்படி ஓர் எண்ணத்தைத் தெரிவிப்பதன் மூலம் அடையும் ஆதாயங்கள் இரண்டு. நண்பர்கள் நடுவில் பழைய சகஜத் தன்மை; ஆத்மாபால் அவர்களுக்குத் தோன்றும் கழிவிரக்கம். 'எத்தனை பெரிய மனசு பண்ணி மலையாக வேண்டியதை மடுவாக்கி விட்டான் என்று மகிழ்ச்சியில் உண்டாகும் ஸிம்பதி -'

இன்று மாலை இவன் பாஸ்கர் வீட்டுக்கு வலியப்போக வேண்டும். ஏதாவது பேச்சு எழுந்தால் கூட 'சின்னப் பிள்ளைகள் மாதிரி நாம் நடந்துகொள்கிறோம்' என்று பேசி மழுப்ப வேண்டும்.

இவனாகத் தணிந்து பாஸ்கரை உயரத்தில தூக்கி விடுவதில் இன்னொரு நல்லதும் இருக்கிறது.

பாஸ்கர் குற்ற உணர்ச்சிக்கு ஆளாகி, இவனிடம் இன்னும் சிநேகபாவத்துடன் இருக்க முயற்சிப்பான்.

பாஸ்கியின் குணம் ஆத்மாவுக்கு நன்றாய்த் தெரியுமே.

முயலுக்கு மூன்று கால்தான் என்று சாதிப்பான்; அதை எவனாவது ஆமோதித்துவிட்டால், அவனைத் தலையில் தூக்கி வைத்துக் கொள்வான்.

அப்படித்தானே இதுவும்?

மாதுவும், சுந்தரும் பாஸ்கர் செய்தது தவறு என்று சுட்டிக் காட்டும்போது, பாதிக்கப்பட்ட இவனே 'ஒன்றுமில்லை. பர்கெட் இட்' என்றால் என்ன நடக்கும்?

பாஸ்கருக்கு ஆத்மா உசத்தியாவான் - அதன் மூலம் இவன் அவனை இன்னும் நெருங்கலாம்.

பாஸ்கரைச் சமாளித்தால்தானே ஆத்மாவால் அவனின் இரையான சித்ராவை அடைவது சாத்தியமாகும்.?

பாஸ்கர் எமகாதகன்! கழுகுக்கு மூக்கில் வேர்ப்பது போல் எதொன்றையும் மோப்பம் பிடிக்கும் சக்தி உடையவன். இவன் அறியாமல் சித்ராவை தன் வலையில் சிக்கவைக்க எண்ணுவது பிரும்மப் பிரயத்தனமாகத்தான் இருக்கும். அதுவும் மூன்று மாசத்திற்குள்.

எடுக்கப் போகும் முதல் ஸ்டெப்பை நிச்சயித்துக் கொண்ட பிறகு அடுத்த அடியைப் பற்றி சிந்தித்தான்.

சித்ரா-

அவளை நினைத்த சமயத்தில் ஒரு நிமிஷம் இதயம் கனித்தது.

சித்ராவா-

போயும், போயும் சித்ராவா?

ஆத்மாவின் அழகுக்கும், பணத்துக்கும், புத்திக்கும், அந்தஸ்துக்கும் விரல் அசைத்தால் அவனிடம் சரணாகதி அடைய எத்தனை எத்தனை பெண்கள் தயாராய் இருக்கிறார்கள்! இவர்களில் ஒருவளைக்கூட - பெண்மையிலும், நளினத்திலும், அழகிலும், சாகஸத்திலும் தலைசிறந்து விளங்கும் இவர்களில் ஒருவளைக்கூட - அண்டவிடாமல், சாரு மறைந்த நாட்களாய் தன்னைக் காப்பாற்றி வரும் ஆத்மாவுக்குப் போயும் போயும் சித்ராதானா கிடைக்க வேண்டும்?

சித்ரா அழகோடு சேர்த்தி இல்லை.

சித்ரா புத்திசாலிகளோடு சேர்த்தியில்லை.

சித்ராவுக்கு நல்ல மனசு, குணம் இருக்கலாம்; வேறு ஒன்றும் இல்லை.

நெஞ்சைச் சுண்டி இழுக்கும் மார்பகங்கள், இடை, தொடை, படபடக்கும் கண்கள்! மஹூம், ஒன்றும் இல்லை.

இருந்தாலும், இவளுக்காகத் தான் ஏங்குவதாகப் பிரமையை ஆத்மா தனக்குள் வளர்த்துக் கொண்டால்தான் என்றாவது ஒருநாள் பலவீனமான நிமிஷத்தில் 'சீ - இந்தச் சித்ராவை அடையவா நான் இத்தனை பிரயாசிக்கிறேன்' என்ற சலிப்புத் தோன்றாமல் இருக்கும்.

தவிரவும் ஆத்மாவின் குறிக்கோள் என்ன? பழி வாங்குவதுதானே - அதற்கு சித்ரா ஒரு கருவிதானே? இதையும் சதா மனசுக்குள் ஜபம் பண்ணவேண்டும்.

ஆமாம் - சித்ராவை இவன்பால் கவருவது சுலபமாக இருக்குமா?

பாரதப் பண்பாடு, தமிழ்ப் பண்பாடு என்று நாக்கு வலிக்கப் பேசும் மக்களிடையே வாழும் ஒரு பெண்ணை மற்றவனின் மனைவியை, மூன்றே மாசத்துக்குள் ஆகர்ஷித்து, அவளோடு உடல் உறவு கொள்ளுவது எந்த மட்டுக்கு நடக்கும்?

தலையை உலுக்கிக் கொண்டான் ஆத்மா.

நடக்குமா? முடியுமா? என்ற பேச்சுக்கோ தயக்கத்துக்கோ இடமில்லை. நடக்கும், முடிந்தாக வேண்டும்.

சித்ராவுக்குப் பிடித்தவை, பிடிக்காதவை என்னென்ன என்று முதலில் தெரிந்துகொள்ள வேண்டும்.

பிடித்தவைகளை இவன் செய்யக் கற்கவும், பிடிக்காதவைகளை விட்டொழிக்கவும், அட்லீஸ்ட் - அவள் கண் எதிரிலாவது - கற்பது மிக அவசியம்.

இவைகளை அறிய பாஸ்கரின் உதவி வேண்டும்.

அதாவது பாஸ்கரின் நட்புத் தேவை.

இதுவரை வாரத்துக்கு ஒரு நாளோ, இல்லை இரண்டு நாட்களோ சந்தித்ததுபோல இனியும் இருந்தால், இவன் நினைப்பதை மூன்று மாசங்களில் நிறைவேற்றுவது கஷ்டம்...

பாஸ்கர், அவன்மூலம் சித்ராவை அடிக்கடி சந்திக்க வேண்டும்.



இன்றைக்கு ஆத்மா நடந்துகொள்வதைப் பொறுத்திருக்கிறது - அவனின் திட்டங்கள் படிப்படியாய் நிறைவேறுவது.

'ரைட்டோ - ஆத்மா, சரியாய் ஒருமாசம் - ஒரேமாசம் உனக்கு டைம் தருகிறேன். அதற்குள் நீ என்ன செய்வாயோ எது செய்வாயோ, சித்ராவின் இதயத்தில் உனக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்துக்கொள்ள வேண்டும். செய்தால், இரண்டாம் மாசம் அவள் இதுநாள் வரை கடைப் பிடித்து வந்த விதிமுறைகளை நீ மாற்றலாம். பின், மூன்றாம் மாசம் உன்னை மனசாலும், உடம்பாலும் அவளை விரும்ப வைக்கலாம் - ஆமவா' - என்று முதல் நாள் தோன்றிவிட்ட வக்ர புத்தி ஆணையிட, ஆத்மா அதற்கு முழுமையாய் அடி பணிந்தான்.

**மா**லை மணி ஐந்து.

மாதுவின் அலுவலக நம்பரைச் சுழற்றி அவனைப் போனில் அழைத்தான் ஆத்மா.

''மாது! திஸ் ஈஸ் ஆத்மா - இரண்டு முறை கூப்பிட்டாயாமே? ஸாரி... நான் தூங்கிக் கொண்டிருந்தேன்.''

''தட்ஸ் ஓ. கே. ஆத்மா - ஹவ் ஆர் யூ நௌ?''

''ஓ! எனக்கு என்ன? ஒன்றுமில்லையே.''

ஆத்மாவின் குரலில் இருந்த தெளிவும், கலகலப்பும் மாதுவுக்கு சந்தோஷமாய் இருந்தது.

''சரி. மாலையில் என்ன பண்ணலாம்? நீ என் வீட்டுக்கு வருகிறாயா? சுசி, நீ, நான் எல்லாருமாக ஒரு பிச்சர் போவோம் - ரொம்ப நாளாயிற்றே, போவ்?''

''ஏன், மற்றவர்களுக்கு என்ன வேலை?''

''யாரைச் சொல்கிறாய்?''

''பாஸு அண்ட் சுந்தர்''

பாஸு இவனிடம் வந்து மன்னிப்புக் கேட்கவில்லையே என்று வருந்திக் கொண்டிருந்த மாதுவுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை.

ஆத்மா தொடர்ந்தான் -

''மாது..! நேற்று நடந்ததை நான் மறந்துவிட்டேன். இனியும் அதைப்பற்றிப் பேச வேண்டாமே ப்ளீஸ்.''

''ஆல் ரைட் - நீ என்ன செய்யலாம் என்கிறாய்?''

''எல்லாரும் பாஸுவின் வீட்டில் சந்திக்கலாம் - நான் உன் வீட்டுக்கு வரட்டுமா? சேர்ந்து போகலாம்.''

பாஸ்கரை நினைக்கையில் மாதுவுக்கு கோபம் பொத்துக் கொண்டு எழுந்தது. 'எல்லாவற்றையும் துடைத்துப் போட்டு விட்டு, பழைய சகஜத்தன்மையை விரும்பும் இந்த ஆத்மாவைப் போய் புண்படுத்தினானே! மேலும் வீம்பாய் இவனைச் சந்திக்கக்கூட மறுக்கிறானே! பணம், புத்தி இருந்து என்ன? குணம் அல்லவா முக்கியம்?'

"என்ன மாது?"

"ஓ.கே. உன் இஷ்டம். நீ ஏழு மணிக்கு என் வீட்டுக்கு வந்துவிடு. ஓ.கே?"

"ரைட், ஸீ யூ"

அலுவலக வேலைகளை முடித்துக் கொண்டு வீட்டுக்குப் போகும் வழியில் சசிகலாவை அவள் கல்லூரியிலிருந்து மாது பிக் அப் செய்து கொண்டான்.

ஆத்மா போனில் பேசியதை அவளிடம் சொன்ன போது அவள் ஆச்சரியப்பட்டுப் போனாள்.

"நிஜமாகவா? ஆத்மாவுக்குக் கோபம் இல்லையா? பாஸு வீட்டுக்கு வருகிறேன் என்றானா?"

"சைக்காலஜி படித்ததன் மூலம் மனிதர்களின் மன இயல்பை ஆராய்வது எல்லோருக்கும் பொருந்தாது சசி. ஆத்மா நீ நினைத்த ரகம் இல்லை"

"என் மாது, உங்களை யாராவது இப்படி நாலு பேர்கள் நடுவில் இன்ஸல்ட் செய்தால், எப்படி நடந்து கொள்வீர்கள்? ஆத்திரம் வராதா? பதிலுக்கு சண்டை போடத் தோன்றாதா? அதுதானே மனுஷ குணம்?"

"நான் எப்படியோ தெரியாது. ஆத்மா நிச்சயம் அந்த மாதிரி இல்லை."

"என்னால் ஆத்மாவைப் புரிந்து கொள்ள முடியவில்லை மாது."

"அவன் பகைமையை விரும்பாதவனாக இருக்கலாம் இல்லையா? 'எதற்காகச் சின்ன விஷயத்தைப் பெரிசு பண்ண வேண்டும்' என்ற மனோபாவத்தில் இருந்திருக்கலாம்."

"பாஸு பேசின பேச்சு சின்னதா? இட் வாஸ் டோடலி இன் ஹ்யூமன்"

"சரி, இது பற்றி நாம் ஏன் விவாதிக்க வேண்டும்? சம்பந்தப்பட்டவனே 'வேண்டாம் விடு' என்கிறான்"

"பாஸு வீட்டுக்கு நானும் வரட்டுமா?"

யோசித்துப் பதில் சொன்னான் மாது.

"வேண்டாம் சசி. லெட் இட் பீ ஜஸ்ட் மென் டுடே. பாஸு எப்படி நடந்து கொள்வான் என்று தெரியவில்லை. நாங்கள் நாலவா மட்டுமே சந்திக்கிறோம். என்ன?"

சரியாக ஏழு அடிக்க ஐந்து நிமிஷம் இருக்கும்போது ஆத்மா வந்து சேர்ந்தான்.

மாது தயாராய் இருந்தான்.

"சசி வரவில்லையா?"

"அவளுக்கு நாளைக்குத் தேவையான லெக்சரை ப்ரிபேர் பண்ணுவேணுமாம்."

இருவரும் புறப்பட்டார்கள்.

பாஸ்கருக்கு இவர்கள் வருவது தெரியாது.

அவன் அலுவலக அறையில் இருந்தான். எதிரிலும், பக்கத்திலும் யார் யாரோ க்ளயண்ட்ஸ்.

"ஹலோ பாஸு" முதலில் பேசியவன் ஆத்மாதான்.

கார் வந்து நிற்கும் சப்தம் பாஸ்கருக்குக் கேட்டபோது, க்ளயண்ட்ஸ்



வருகிறார்கள் என்று எண்ணியதால், முன்னெச்சரிக்கை இன்றி இருக்க - மொட்டு போல ஆத்மாவும், மாதுவும் வந்து நின்றது சற்றும் எதிர்பாராததாய் இருந்தது.

"ஓ! ஹலோ..."

'ஆத்மாவா! சிரித்த முகமாய் நிற்கிறானே; என் மேல் கோபம் இல்லையா?'

'காலையிலிருந்து ஆத்மாவுக்குப் போன் செய்து 'ஸாரி' சொல்ல நான் விரும்பாத போது, இப்படி ஒன்றுமே நடக்காதது மாதிரி வந்து நிற்கிறானே!'

பாஸ்கருக்கு முகம் அசடு தட்டிப் போயிற்று.

ஸாரி சொல்லாவிட்டாலும், போன் பண்ணி 'ஹலோ,' என்றாவது சொல்லி இருக்க வேண்டுமோ?

அடி வாங்கினவன் கையை நீட்டி விட்டான்; இனி அடித்தவனும் நீட்டுவதுதானே நாகரீகம்?

நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளி எழுந்துகொண்டான் பாஸ்கர்.

"முக்கியமாய்ப் பேச நண்பர்கள் வந்திருக்கிறார்கள். ஜூனியரிடம் விஷயத்தை டிஸ்கஸ் பண்ணுங்கள். நான் காலையில் பார்க்கிறேன்" என்று எதிரில் இருந்தவர்களிடம் கூறிவிட்டு, அறையைவிட்டு வெளியே வந்தான்.

"மாடிக்குப் போகலாம் வாருங்கள்"-

வீட்டுக்குள் வந்து மாடிக்குப் போனார்கள்.

சித்ரா எங்கே?

வாசலில், கூடத்தில், போகும் வழியில் அவளை ஆத்மாவின் கண்கள் தேடின. காணோமே!

மாடி அறையில் ட்ரிங்க் ஊற்றும் வரை ஒருவரும் பேசவில்லை. அவரவர் டம்ளர்களை கையில் கொடுத்த பிறகு தொண்டையைக் கனைத்துக்கொண்டான் பாஸு

என்ன பேசுவது என்று அவன் தவிக்கிறான் என்பது ஆத்மாவுக்குப் புரிந்தது.

இப்போது இவன் முந்திக் கொண்டால், நண்பர்களிடம் இன்னும் நல்லபேர் கிடைக்கும்.

"மாதுவும், சசியும் சினிமா போகலாம் என்கிறார்கள். ஹவ் அபௌட் இட்? நைட் ஷோ போகலாமா? உன்னால் இன்று முடியுமா? உனக்குச் சரியென்றால் சந்துருக்குப் போன் பண்ணலாம்-"

அடப்பாவி! இவனால் எப்படி இத்தனை இயல்பாகப் பேச முடிகிறது?

பாஸ்கருக்கு ரொம்ப சங்கடமாக இருந்தது - மெல்ல ஆரம்பித்தான்.

"ஆத்மா - அபௌட் யெஸ்டர்டே...."

அவனை முழுசுமாய்ப் பேசவிடவில்லை ஆத்மா.

"நேற்றா? நேற்று என்ன நடந்தது? அதை விடு - நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல். காஸினோவில் 'தி டே ஆஃப் த ஜாக்கல்' நல்ல படம். போகலாமா?" -

ஆத்மா நடந்ததைப் பற்றிப் பேச விரும்பவில்லை என்பதைக் கோடிட்டுக்காட்டியதும் பாஸ்கருக்கு 'அப்பாடி' என்று இருந்தது - நல்லவேளை

ஸணி, அது இது என்று நண்டர்கள் மத்தியில் பிடிக்காத பேச்சைப் பேச வேண்டாம்.

பாஸ்கரின் தவிப்பும் பின் நிம்மதியும் புரிய, மாது எழுந்து வந்து ஒரு கையை ஆத்மாவின் தோளிலும், மற்றதை பாஸ்கரின் தோளிலும் போட்டு, "என் நண்பர்களை நினைத்தால் எனக்குப் பெருமையாக இருக்கிறது" என்றான்.

ஒரு நாடகத்தில் இறுதிக் காட்சி போல இருந்தது அந்த நிமிஷம்.

சித்ரா எங்கே?

"எனக்குப் பசிக்கிறது பாஸ்! சாப்பிட ஏதாவது கொண்டு வரச்சொல்."

மனசில் பாரம் நீங்கியதால் பாஸ்கர் வழக்கமான உற்சாகம் நிறைந்தவனாக மாறி, இண்டர்காமில் சித்ராவை அழைத்தான். "மேலே வா சித்ரா" என்றான்.

உள்ளே நுழைந்த சித்ராவுக்கு ஆத்மாவைப் பார்த்தும் வியப்பு எழுந்தது வெளிப்படையாகத் தெரிந்தது.

"சித்ரா, ஆத்மாவுக்கு பசிக்கிறதாம்! சாப்பிட என்ன கொடுக்கிறாய்?"

சித்ராவை நன்றாய் எதிர்ப்பட்டுப் பார்த்தான் ஆத்மா.

கூடைதான் குண்டுதான்.

மெல்லியதாய் சென்ட் வாசனை வருகிறதே! மல்லிகையின் மணமா? இல்லை சென்ட் பூசி இருக்கிறாளா?

அழுது வடியாமல், குளித்து மாற்றுடையை உடுத்தி 'பளிச்'சென்று இருக்கிறாள்.

அந்த மட்டுக்கும் தேவலை.

சித்ராவை அன்றுதான் முதன் முதலில் காண்பது போல ஊன்றிப் பார்த்தான் ஆத்மா.

இன்றைய கண்ணோட்டம் வேறு தானோ?

"என்ன செய்யச் சொல்லட்டும் ஆத்மா? பொங்கல் அல்லது வெஜிடபிள் உப்புமா?"

ஆத்மாவுக்கு எங்கே பசித்தது?

வீட்டில் வயிறாரச் சாப்பிட்டதில் பசி எங்கே?

சித்ராவை வரவழைக்கப் 'பசிக்கிறது' என்றான். அவ்வளவுதான்.

"எது உனக்கு கஷ்டமோ அது!"

"கஷ்டம் என்ன, கஷ்டம் என்ன? சித்ரா! பொங்கல் கொத்ஸு செய்யச் சொல். அது தயாராவதற்குள் நொறுக்குத் தீனி ஏதாவது இருந்தால் அனுப்பு-" பாஸ்கர் சொல்லி விட்டான்.

முறுக்கு, உருளைக்கிழங்கு வறுவல் அடுத்த நிமிஷம் மாடிக்கு வந்தது.

சந்தருக்குப் போன் செய்ததில் அவனும் வந்துவிட்டான்.

மாதுவும் சந்தரும் எட்டரை மணிக்கு வீட்டுக்குப் போய்விட்டுத் தியேட்டருக்கு நேரே வந்துவிடுவதென்றும், ஆத்மா மட்டும் பாஸு வீட்டில் சாப்பிட்டு விட்டு அவர்களுடனேயே கிளம்புவதென்றும் தீர்மானமானது.

ஆத்மாவுக்கு ஸ்பெஷலாய் அன்று பாஸு உபசாரம் செய்தான்.



குற்றமுள்ள மனசு குறுகுறுக்கிறதா?

நன்றாய் உறுத்தட்டும்.

எட்டரைக்கு அவர்கள் கிளம்பிப்போனதும், பாஸுவும் ஆத்மாவும் சாப்பிட எழுந்தார்கள்.

"நீ கீழே போய் இரு - நான் ஐந்து நிமிஷத்தில் குளித்துவிட்டு வருகிறேன்" என்றான் பாஸு.

சாப்பாட்டு அறைக்குப் போனான் ஆத்மா.

சித்ரா உடை மாற்றிக் கொண்டு தயாராய் இருந்தாள்.

ஆத்மா, பக்கக் கதவு வழியாக, லானில் இருந்த ஊஞ்சலில் உட்கார, சித்ரா வராந்தா பிரம்பு நாற்காலியில் அமர்ந்தாள்.

"இந்த இடம் ரொம்ப அமைதியாக இருக்கிறது. சித்ரா, அழகாகவும் வைத்துக் கொண்டிருக்கிறாய்."

"தாங்க்ஸ்." அவள் வெட்கப்பட்டுச் சிரித்தாள்.

"எனக்கும் ஸுமனாவுக்கும் கூட இதுதான் பிடித்தமான இடம்" என்றாள் பதிலுக்கு-

ஏதோ மேற்கொண்டு பேசவேண்டுமே என்று "ஸுமனா எங்கே?" என்றான் ஆத்மா.

"தூங்கிவிட்டாள். மத்தியானம் ஆயாவுடன் ஜூவுக்குப் போய் வந்தாள். ரொம்பக் கொட்டம் - அலுப்பில் தூங்கிவிட்டாள்."

சித்ராவின் கண்கள் மகளைப் பற்றிப் பேசும்போது பிரகாசமானதாக ஆத்மா நினைத்தான்.

'பெண் என்றால் இவளுக்கு ரொம்பப் பிரியமோ? பெருமையோ?'

'ஆத்மா! குறித்துக்கொள்ளடா.'

'இத்தனை நாட்களாய்ப் பழகுகிறோம்; ஆனாலும் இவளின் விருப்பு வெறுப்புகள் தெரியவில்லை! அத்தனை திவ்வியமாய்க் கவனித்திருக்கிறோம்.'

சற்றுப் பொறுத்து, மெல்லிய குரலில், "உங்களுக்கு நான் போன் பண்ணினேனே, ராமு சொன்னானா?" என்றாள் சித்ரா.

இவளா? போன் செய்தாளா? ஏன்?

"இவர் நேற்று உங்களிடம் நடந்து கொண்டதற்காக மன்னிப்புக் கேட்க நான் போன் செய்தேன். 'ஐ'ம் ஸாரி."

அடி சக்கை, சித்ராவுக்கு இவன் பேரில் கரிசனம் இருக்கிறதா?

"சே - ஒன்றுமில்லாததை எதற்குப் பெரிசு பண்ணுகிறாய் சித்ரா?"

"அப்படியில்லை - அத்தனை நடந்தும், நீங்களாகவே இன்று இங்கு வந்தது எனக்கு ரொம்ப சந்தோஷமாய் இருக்கிறது - தாங்க்ஸ்."

ஆத்மா பேச வாயைத் திறப்பதற்குள் பாஸுவின் குரல் கேட்டது.

"எதற்கு தாங்க்ஸ் சித்ரா?"

"ம். ஒன்றுமில்லை. இந்த இடத்தை அழகாக வைத்துக் கொண்டிருக்கிறேனா

என்றார். அதற்கு தாங்க்ஸ் என்றேன.

ஆத்மா, கவனி. முக்கியமான பாயிண்ட். இவள் உனக்குப் போன் பண்ணிய விஷயத்தைக் கணவனிடமிருந்து மறைக்கிறாள்.

"இவளுக்கு எதற்குப் பாராட்டு, ஆத்மா! ஆர்கிடெக்ட் அமைத்துக் கொடுத்தான். வேலைக்காரர்கள் நன்றாய் வைத்துக் கொள்கிறார்கள். தென் வொய் கிவ் த காம்ப்ளிமென்ட்ஸ் டு சித்ரா?"

ஜோக் அடித்து விட்ட மாதிரி பாஸ்* சிரித்தான்.

சித்ரா பலவந்தமாய் புன்னகைக்க முயல்வதாக ஆத்மா நினைத்தான்.

கவனிக்க வேண்டும் என்று முடிவு எடுத்த பிறகு, சின்னச் சின்ன விஷயங்களெல்லாம் – இதுநாள் கண்ணில் பட்டு, மனசில தங்காத சமாசாரங்களெல்லாம் – இன்றைக்கு ஆணி அடித்தாற்போலத் தென்படுகின்றனவே!

பாஸ்கரின் திமிர் பேச்சு.

சித்ராவின் அடிமைத்தனம்.

ஆத்மா! சரியாய்க் குறித்துக்கொள்.

இதெல்லாம் நன்றாய்த் தெரிந்து கொள்வது அவசியம். சாப்பிட்டார்கள். தியேட்டருக்குக் கிளம்பிப் போனார்கள்.

சுந்தர், உமா, மாது, சுசிலா காத்திருந்தார்கள்.

டே ஆஃப் த ஜாக்கல் பிரமாதமாய் இருந்தது.

ஆத்மா நாவலைப் படித்திருக்கிறான். முடிந்தவரைக்கும் அதை ஒட்டியே எடுத்திருந்தார்கள்.

ஜாக்கலின் திட்டம் எவரையும் அசர வைப்பதாக இருந்தது.

அணு அணுவாய் யோசனை செய்து, அற்புதமாய் பிரஸிடெண்ட் டிகாலைக் கொல்ல அவன் திட்டம் வடித்திருந்தான்.

அவன் பட்ட கஷ்டத்திற்காகவாவது அவனின் எண்ணம் ஈடேறியிருக்கலாம் - கடைசியில் ஒரு நொடியில் குண்டு குறி தப்பிவிடுகிறது.

படம் முடிந்ததும் அவரவர் வீட்டுக்குத் திரும்பினார்கள்.

வந்து உடைமாற்றிப் படுக்கையில் விழுந்து படத்தைப் பற்றி நினைக்கையில், தானும், ஸ்டெப் ஸ்டெப்பாய் ஒரு திட்டம் வரைவதை நினைத்துக் கொண்டான் ஆத்மா.

ஜாக்கலின் முடிவு மாதிரி இவனுடையது கண்டிப்பாய் ஆகாது.

எடுத்த எடுப்பே வெற்றிப் பாதையை நோக்கி அல்லவா கையை நீட்டுகிறது.

சித்ரா சாதுவாய் - வாயைத் திறக்காமல், கணவனுக்கு அடிமையாய் வாழ்வதும், சில விஷயங்களை அவனிடமிருந்து மறைப்பது தவறு அல்ல என்று எண்ணுவதும், இந்த ஒரே நாளில் தெரிந்து போனதே!

இந்தச் சித்ராவைத் தன் வழிக்குக் கொண்டு வருவதில் சிரமமே இருக்காது என்று புரிந்து போனதால், ஒரு புன்னகையோடு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான் ஆத்மா.



கெட்டிக்காரத்தனமாய்ப் பாஸ்கருடன் பகைமை பாராட்டாமல், உடன்படியாய் குழைந்து விட்டுக் கொடுத்ததற்கு பலன் அதிகமிருந்தது.

பாஸ்கர் இவனை உண்மையான நண்பன் என்று மனசில் வரித்து விட்டான்.

மாதுவும், சுந்தரும் இவனிடம் கண்டுபிடித்த குற்றத்தை 'ப்பூ' என்று ஊதித் தள்ளிவிட்டான் ஆத்மா.

வீட்டைத் தேடி வந்து 'பாஸ்* பாஸ்*' என்று அன்பாய்ப் பழகுகிறான்.

இவன் அல்லவா உத்தமமான சிநேகிதன்?

தன் செய்கைக்கு ஈடு செய்வதுபோல, ஆத்மாவைத் தலைமேல் வைத்துக்கொண்டு கூத்தாடவே முற்பட்டான்.

மறுநாள் கோர்ட்டிலிருந்து ஆத்மாவின் அலுவலகத்துக்கு பாஸ்கர் வந்தான் - அவனை பிக்அப் செய்து கொண்டு ஜிம்கானாவுக்குப் போனான்.

"உனக்கு க்ளையண்ட்ஸ் காத்திருப்பார்களே" என்று ஆத்மா சொன்னபோது, "ஜூனியர்கள் வேறு எதற்கு இருக்கிறார்கள்?" என்று அலட்சியமாய் கூறிவிட்டான்.

நண்பர்கள் இருவருமாய் நீச்சல் குளத்தில் ஒரு மணி நேரம் குளித்தார்கள். ஜில்லென்று ஐஸ் பியரைக் குடித்து விட்டு, "எங்கே போய்ச் சாப்பிடலாம்?" என்றான் பாஸ்*.

"வயிறு சரியாக இல்லை பாஸ்*; ஹோட்டல் சாப்பாடு வேண்டாம். என் வீட்டுக்குப் போகலாமா?"

"அப்படியானால் சித்ராவுக்கு போன் செய்து மிளகு குழம்பு, பருப்புத் துவையல் பண்ணச் சொல்கிறேன். என் வீட்டுக்கே போகலாம் வா."

ஆத்மா இதைத்தானே விரும்பினான்.

போனார்கள், சாப்பிட்டார்கள்.

பரிமாறும் சித்ராவிடம், "கூட உட்கார்ந்து சாப்பிடேன்; சமையற்காரன் பரிமாறட்டுமே" என்றான் ஆத்மா.

அவள் சொன்னபடி செய்தாள்.

"மிளகு குழம்பு எ க்ளாஸ் - என் அம்மா இப்படித்தான் சமைப்பாள்" பாஸ்கர் ஃபோன் அழைப்பு வந்து பேசப் போன நாழிகையில், தனித்திருந்த சித்ராவிடம் பேசினான் ஆத்மா.

அவள் முகம் மலர்ந்தது.

"நானே செய்தேன்."

"ரியலி? அதுதான் இத்தனை பிரமாதமாக இருக்கிறதா? இன்னும் கொஞ்சம் போடு..."

"சும்மா சொல்கிறீர்கள் ஆத்மா" சித்ரா சிரித்தாள்.

இவள் சிரிக்கும் போது கண்களும், பற்களும், பளபளவென்கிறதே! இவளை அடிக்கடி சிரிக்கச் செய்ய வேண்டும்...

மேற்கொண்டு பதினைந்து நாட்கள் ஆவதற்குள் - முன்பெல்லாம் போகாத திணுசில் அடிக்கடி பாஸ்கரின் வீட்டுக்குச் செல்ல ஆரம்பித்தான் ஆத்மா.

தனிமை கிடைத்த போதெல்லாம் சித்ராவை ஏதாவதொன்றுக்காகப் புகழ அவன் தவறியதில்லை. இந்த மாதிரி புகழாரங்களை சித்ரா விரும்புவது தெளிவானது.

முன்னைவிட அவளும் ஆத்மாவுடன் சகஜமாய்ப் பேசத் தொடங்கினாள்.

ஆத்மா வந்து விட்டால், இவளும் மாடியில் வந்து உட்கார்ந்து கொள்வாள்.

கணவனுக்கு எதிரில் அடங்கியே பேசுபவள், தனிமை கிடைத்தால் சிரித்துப் பேசுவதாக ஆத்மாவுக்குத் தோன்றியது.

அன்று பகல் மூன்று மணி இருக்கும். ஆத்மாவுக்கு அலுவலகத்தில் வேலை ஓடவில்லை.

இன்று வேறு திணுசில் சித்ராவை அணுகினால் என்ன என்று யோசித்தான்.

முயன்று பார்க்கலாம்; சரிப்பட்டால் தொடருவோம். இல்லையென்றால் இன்னும் கொஞ்ச நாள் காக்க வேண்டியதுதான்.

போன் மூலம் பாஸ்கர் இல்லத்துடன் தொடர்பு கொண்டான்.

வேலையாள் எடுத்தான்.

''ஐயா இல்லையா?''

''இல்லீங்களே. கோர்ட்டுக்குப் போயிருக்கார்.''

தெரிந்தது தானே?

''அம்மா இருக்காங்களா?''

''கூப்பிடவா?''

''ம்...''

சித்ரா வந்து பேசினாள்.

''ஹலோ''

''நான் தான் ஆத்மா.''

''என்ன ஆத்மா? அவர் இன்னும் கோர்ட்டிலிருந்து வரவில்லையே?''

தைரியமாகப் பேச வேண்டும் - தயங்கக்கூடாது.

''பாஸ்கர் இருக்க மாட்டான் என்று தெரியும் சித்ரா... உன்னோடு பேசினால் தேவலை போல இருந்தது. கூப்பிட்டேன்...''

அந்தப் பக்கம் மௌனம்.

''என்னமோ மனசு சரியில்லை சித்ரா - உன்னோடு பேசினால் இதமாக இருக்கும் என்று நினைத்தேன். வேலையாய் இருக்கிறாயா? அப்படியானால் வைத்து விடட்டுமா?''

துக்கம், சலிப்புகள் தொனிக்க ஆத்மா பேசினான்.

இவனுக்கு என்ன வருத்தம்?

''எனக்கொன்றும் வேலை இல்லை ஆத்மா - பூ கட்டிக் கொண்டிருந்தேன்.



...ல்லவளவுதான்.''

''இன்று சாருவின் பிறந்த நாள் சித்ரா...''

'ஓ' அதுதான் மனசு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறானா? அடப்பாவமே! ...ன்ன சொல்லி சமாதானப்படுத்தலாம்?

''ஐ'ம் ஸாரி ஆத்மா!''

''சாரு இருந்திருந்தால் இன்றைய பொழுதை எப்படிக் கழித்திருப்போம் என்று ...ற்பனை பண்ணிப் பார்த்தேன்... வேதனைதான் மிச்சம்.''

இறந்த மனைவியைப்பற்றி யாரிடமும் பேசாத ஆத்மா, தன்னிடம் வலிய ...ந்து விவரங்களைச் சொல்கிறானே! சித்ராவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

புகாரி சம்பவம் நடந்ததிலிருந்தே, ஆத்மாவின் நடத்தையில் ...றிப்பிடும்படியான வித்தியாசம் அவளுக்குத் தெரிந்தது.

ஸாமனாவுடன் அதிகம் பழகுகிறான்; தூக்கிவைத்துக் கொஞ்சுகிறான் தன்னுடனும் நிறையப் பேசுகிறான்.

ஏன்?

சித்ரா யோசித்ததில் அவளுக்குப் புரியவில்லை.

''மனசு இருக்கும் நிலையில் எதுவும் பிடிக்கவில்லை சித்ரா! சாரு இருந்து, ...சு குழந்தையும் பிறந்திருந்தால், அது ஸாமனாவைவிட ஆறு மாதம் பெரிசாய் ...ருந்திருக்கும்.''

இவன் இல்லாத குழந்தையை ஸாமனாவின் ரூபத்தில் பார்க்கிறானா?

''இன்று மாலை அங்கு வந்து ஸாமனாவுடன் கொஞ்ச நேரம் இருக்க ...னைக்கிறேன். வரட்டுமா?''

''கண்டிப்பாக வாருங்கள்... இது என்ன கேள்வி?''

''தாங்க்ஸ் சித்ரா.''

போனை வைத்த பிறகு ஆத்மா சிந்தனையில் ஆழ்ந்தான்.

இன்றைக்கு அவன் சித்ராவைச் சோதிக்கப் போகிறான்.

இவன் போன் மூலம் பேசியதை, அங்கு வரப்போவதை முன்னரே சொல்லி ...ருப்பதை பாஸ்கரிடம் சொல்லப் போகிறாளா இல்லையா என்பது முக்கியம். ...ல்லி விட்டால், இவளை இன்னும் ஜாக்கிரதையாகப் பின்னர் செய்து அணுக ...வேண்டும்.

சொல்லாவிட்டால்...

ஆத்மா, தன் முயற்சியில் பத்துப் படிகளைத் தாண்டியிருப்பான்...

வேண்டுமென்றே ஏழு மணி வரைக்கும் தன் வீட்டிலேயே யாருக்கும் போன் ...ணாமல் தங்கினான்.

...ழேகால் இருக்கும்.

போன் அடித்தது.

பாஸ்கர் பேசினான்.

''ஹலோ ஆத்மா? வீட்டில் உட்கார்ந்துகொண்டு என்ன பண்ணுகிறாய்? ...கே வரக்கூடாதோ?''

சித்ரா இவனிடம் தான் போன் பண்ணியதைச் சொல்லி இருக்கிறாளா, இல்லையா?

''தலையை லேசாய் வலிக்கிறது பாஸ்.''

''அப்படியானால் நீ கண்டிப்பாய் இங்கு வரத்தான் வேண்டும். ஷி - வாஸ் ரீகல் ஒரு பாட்டில் வந்திருக்கிறது. நீ வந்தால் திறக்கிறேன் - வேறு வேலை ஒன்றும் இல்லையே? அப்படியானால் வாயேன். நான் மாது, சுந்தரையும் கூப்பிடுகிறேன்.''

பாஸ் பேசின விதத்திலிருந்து தான் அங்கு வருவதாகச் சொல்லியிருந்தது அவனுக்குத் தெரியாது என்பது தெளிவானது.

சபாஷ்!

ஆத்மா புறப்பட்டுப் போனான்.

வாசலிலேயே அவனை எதிர் கொண்டாள் சித்ரா.

''வரேன் என்று சொல்லிவிட்டு, ஏன் இத்தனை நாழி? ஸுமனாவும் நானும் ஒரு மணி நேரமாய் வாசலிலேயே நிற்கிறோம்-'' என்றாள்.

''பாஸ் எங்கே?''

''மாடியில் இருக்கிறார்.''

சித்ரா கையிலிருந்த ஸுமனாவைக் கையை நீட்டி வாங்கிக் கொண்டான் ஆத்மா.

வேண்டுமென்றே அவளின் கைகளை உரசி வாங்கினான்.

சித்ரா உடம்பை சிலிர்த்த மாதிரி இருந்தது.

அவள் முகத்தில் கோபத்தின் சாயல் இருக்கிறதா?

பார்த்தான்-

ம்ஹூம். இல்லை.

ஆத்மா, அடுத்த அஸ்திரத்தைப் பயன் படுத்துடா. இதுவே நல்ல தருணம்.

பயப்பட்டால் ஆகாது.

காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.

அவள் உன்னைப் பார்த்துப் பரிதாபப்படுகிறாள்; பாஸ்கர் மாடியில் இருக்கிறான். இந்தச் சமயத்தை சாதகமாக்கிக் கொள்.

சித்ராவின் கண்களை உற்று நோக்கினான் ஆத்மா.

அவன் பார்வையின் தீவிரம் தாங்காமல் கண்களை அவள் தாழ்த்திக் கொண்டாள்.

''உனக்கு இந்த நிறப் புடவை அழகாக இருக்கிறது சித்ரா - யூ லுக் வெரி நைஸ் டுடே...''

பொய்... பச்சைப் பொய். சரளமாகத் தன்னால் பொய் பேச இயலுகிறதே.

கண்களை நிமிர்த்தி ஆத்மாவைப் பார்த்தாள் சித்ரா - அந்தக் கண்களில் கோபம் இல்லை. ஏன் என்னிடம் இப்படி பேசுகிறான் என்ற ஆத்திரம் இல்லை. ஆனால் ஆச்சரியம் இருந்தது. கொஞ்சம் சந்தோஷம்கூட இருந்தது-

அவள் அம்மா உயிருடன் இருந்த காலத்தில், அவளிடம் 'இந்தக் கலர் உனக்கு நன்றாக இருக்கிறது. இந்த டிஸைன் உனக்குப் பொருந்துகிறது' என்று



சொல்லியிருக்கிறாளே தவிர, அவள் சிநேகிதிகளோ, மற்ற உறவினர்களோ, பாஸ்கரோ இப்படியொரு பாராட்டை அவளுக்குக் கொடுத்ததில்லை-

இவளின் நகைகளையும், புடவைகளையும் பார்த்த உறவுப் பெண்மணிகள் 'உன்னுடைய அட்டிகை ஜோர், சிவப்பு புடவை ரொம்ப அழகு' என்று இவள் செலக்ஷனை குறிப்பிட்டு இருக்கிறார்களே தவிர, 'உனக்கு நன்றாக இருக்கிற'தென்றோ, 'நீ இன்று அழகாக இருக்கிறாய்' என்றோ கூறியதில்லை.

ஒரு ஆணின் புகழ்ச்சி, அதுவும் அவளைவிட அழகான, கவர்ச்சி கொண்ட ஆணின் புகழ்ச்சி அவளுக்குப் புதுசு. ரொம்பப் புதுசு.

'தாங்க்ஸ்' என்றாள் மெல்ல.

இன்றைக்கு இவ்வளவு போதும் - சலனமற்ற குட்டையில் சின்னக் கல்லை எறிந்ததும் உண்டாகும் சலனங்கள் ரொம்ப நேரத்துக்கு இருக்கும். சித்ராவின் மனதை சற்றே சிலிர்க்க வைத்துவிட்டேன். அது அவளுள் பல மணி நேரங்களுக்கு அடங்காமல் ஆர்ப்பரிக்கும்.

இது போதும்.

இனி இரண்டு நாட்கள் கழித்துப் பார்த்துக்கொள்ளலாம்.

''வா ஸுமனா, மாடிக்குப் போகலாம்''-

குழந்தையுடன் ஆத்மா மேலே போகக் கிளம்பினான்.

''வேண்டாம் ஆத்மா... அவள் இங்கேயே இருக்கட்டும். அவருக்குப் பிடிக்காது''

''ஏன் பிடிக்காது? பிடிக்க வைக்கிறேன்'' ஆத்மா பதில் சொல்லிக் கொண்டே படிகளில் ஏறினான்.

சித்ரா சொன்னதை பாஸ்கர் ஊர்ஜிதப்படுத்தி விட்டான்.

இவன் அறைக்குள் நுழைந்த உடனே ''ஹாய் தேவ்'' என்றவன், குழந்தையைக் கண்டு முகம் சுளித்தான்.

''இவள் எதற்கு இங்கு? ஆயா எங்கே?''

''நான் கூட்டி வந்தேன் பாஸ் - என்னோடு இருக்கட்டுமே.''

'இது என்ன புதுப்பழக்கம்' என்பதுபோலப் பார்த்தான் பாஸ்கர்.

இவனிடம் ஒரு பொய்யை இப்போது சொல்ல வேண்டுமே. என்ன சொல்லலாம்? மதியம் சித்ராவிடம் கூறியதையே மீண்டும் கூறினால்...?

''சாருவும் நானும் பெண் குழந்தை வேண்டும் என்று ரொம்ப ஆசைப்பட்டோம். சாரு இருந்து, எங்களுக்குப் பெண் பிறந்திருந்தால் ஸுமனா வயசு தான் இருக்கும்''-

ஆத்மாவின் குறி தப்பவில்லை-

இவனுக்கு இப்படி ஒரு ஆசையா? தொடர்ந்து பேசினால் புகார் சம்பவத்துக்குப் பேச்சு போய்விடுமோ என அஞ்சிய பாஸ்கர் ''என் பெண் உனக்கும் பெண்தானே ஆத்மா?'' என்று முணுமுணுத்துவிட்டு, நூல் எடுக்கத் திரும்பிவிட்டான்.

ஆத்மாவுக்கு இன்னொரு நொண்டிச் சாக்கு கிடைத்தது.

நாட்கள் செல்லச் செல்ல ஸுமனாமேல் அதிக அன்பு கொண்டு ஆத்மா இருப்பதாக அனைவரும் கற்பனை பண்ணிக்கொள்ளும் விதத்தில் ஆத்மாவின் நடத்தை, பேச்சு அமைந்தது-

பாஸ்கர் ஒருசமயம் போன் செய்து, ''நேற்று நீ வரவில்லையா.. அங்கிள் எங்கே? என்று ஸுமனா தவித்து விட்டாள்'' - என்று சொல்லும் அளவுக்கு விஷயம் நீண்டு விட்டது-

ஸுமனாவுக்கு பரிசுகள் வாங்கிவர ஆரம்பித்தான் ஆத்மா.

முதலில் வெளிநாட்டுச் சாக்லெட் டப்பாக்கள்; பின்பு பொம்மைகள்-

''ஸுமனாவுக்கு உடைகள் வாங்க எனக்கு இஷ்டமாக இருக்கிறது. ஆனால் அளவு தெரியவில்லை. நீ கூட வரயேன் சித்ரா'' என்று பாஸ்கருக்கு எதிரிலேயே சொல்ல ஆத்மா தைரியம் பெற்று விட்டான்-

மாது - சுசிலா, சுந்தர் - உமா எல்லாரின் கவனத்தையும் ஆத்மாவின் இந்தத் திடீர் பிணைப்பு கவரவே செய்தது-

பாஸ் - சித்ராவிடம் சொன்ன விளக்கத்தை அவர்களிடமும் சொல்லி வாயை அடைத்துவிட்டான் ஆத்மா-

மனோதத்துவம் படித்த சுசிலா அவன் வாக்கு மூலத்தை அப்படியே ஏற்றுக் கொண்டாள்.

''மனசின் அடியில் உறங்கும் ஆசையை புகாரி சம்பவம் எழுப்பி விட்டது. மீறிக்கொண்டு மேலே கிளம்பும் மனைவி, குழந்தை தாபத்தை ஆத்மாவுக்கு அடக்கத் தெரியவில்லை. பெண் குழந்தை வேண்டும் என்று இருவரும் விரும்பி இருக்கிறார்கள். அதனால் ஸுமனாவை ஒரு வடிகாலாக ஆத்மா தேர்ந்தெடுத்திருப்பதில் வியப்பு என்ன?'' என்று அவள் கணவனிடமும் சுந்தரிடமும் லெக்சர் செய்து, அவர்களையும் தன் வாதத்தை ஏற்கச் செய்தாள்.

இரண்டு மாசங்கள் முடிவதற்குள், ஆத்மா ஸுமனா மூலம் சித்ராவை ரொம்பத்தான் நெருங்கி விட்டான்-

இன்னும் ஒரே மாசம்! சித்ராவை முழுசாய்க் கவர முடியுமா?

அதிர்ஷ்டம் ஆத்மாவுக்கு உதவி செய்ய முன் வந்தது-

மாதுவும், சுசிலாவும் டிசம்பர் மாதம் கல்லூரி மூடியிருந்ததைப் பயன்படுத்திக் கொண்டு இருபது நாட்கள் டார்ஜிலிங் போனார்கள்-

சுந்தர் பொங்கல் ரிலீஸுக்குப் படங்கள் தேர்ந்தெடுப்பதில் பிஸியாக இருந்தான்.

பாஸ்கரை, டெல்லி சுப்ரீம் கோர்ட் வேலை வா, வா என்று இழுத்தது - நாலு நாட்கள் அங்கு தங்கி, பின் இங்கு வந்து, திரும்ப டெல்லி போகும்படியான வேலைகள்.

இந்த நாட்களை மிகவும் நம்பி, தன் திட்டத்தின் கடைசி கட்டத்தில் ஆத்மா இறங்கினான்.

**சி**த்ராவுக்கு தூக்கம் வரவில்லை. புரண்டு புரண்டு படுத்தாள். என்னவோ சொல்லத் தெரியாத சங்கடம்.

என்னது?



எதனால்?

எழுந்துபோய் தனியறையில் ஆயாவுடன் தூங்கும் மகளைப் பார்த்தாள். மெல்ல மாடி ஹாலுக்கு வந்தாள் - அங்கிருந்த ஃப்ரிஜ்ஜிலிருந்து தண்ணீர் எடுத்துக் குடித்தாள்.

படுக்க மனமில்லை.

அந்த வாரத்துப் பத்திரிகை ஒன்றைப் பிரித்து வைத்துக்கொண்டு சோபாவில் அமர்ந்தாள்.

பெட்ரூமில் லைட்டைப் போட்டால் பாஸ்கர் முழித்துக் கொள்வார். 'ஏன் விளக்கைப் போட்டாய்? உனக்கு படிக்க வேறு இடம், நேரம் கிடைக்கவில்லை? நான் முழுவதும் உழைக்கிறேன். கொஞ்சம் கூட அனுசரணை இல்லையே' என்று சிடுசிடுப்பார்.

என்னத்திற்கு வம்பு?

பத்திரிகையில் மனம் போகவில்லை.

போட்டிருந்த சென்டின் மணம் மேனியிலிருந்து எழுந்து நாசிக்குள் புகுந்தது. வரவர அவள் ரொம்பத்தான் சென்ட் உபயோகிக்கிறாள்.

காலையில், மாலையில், குளித்தபிறகு என்று எப்போது பார்த்தாலும்

ஏன் இப்படி?

எப்போதிலிருந்து இப்படி?

போன புதன்கிழமையிலிருந்தா?

ஏன்-

அன்று போனில் பேசும்போது ஆத்மா, ''ஒன்று கேட்டால் கோபிக்கமாட்டாயே? நீ என்ன சென்ட் உபயோகிக்கிறாய்? 'டோபாஸ்' தானே? அந்த மணம் எனக்கு ரொம்பப் பிடிக்கிறது சித்ரா - ஒரு உண்மையைச் சொல்லட்டுமா? சாருவுக்கும் இதுதான் பிடிக்கும்... பாட்டில் பாட்டிலாக வாங்குவாள்'' என்றானே, அப்போதிலிருந்தா?

இல்லை. அன்று மாலை ஸுமனாவுக்கு கை நிறைய பொம்மைகளுடன் வந்து இறங்கி, அவைகளின் நடுவில் ஒரு 'டோபாஸ்' பாட்டிலையும் அழகான பேப்பரில் சுற்றி மறைத்து இவளிடம் தந்து, 'சாருவுக்காக வாங்கினது; மூன்று வருஷமாய் உள்ளே கிடக்கிறது. நீ உபயோகித்தால் நான் ரொம்ப சந்தோஷப்படுவேன்' என்றானே, அப்போதிருந்தா?

ஒரு வாரமாய் சித்ராவுக்கு சதா மனசுக்குள் நூதனமான உணர்வு-

இது என்ன?

போன் அடித்தால் 'ஆத்மா' என்று எண்ணினாள் - 'ஆத்மாவாக இருக்கக்கூடாதா?' என்று விரும்பினாள்-

'அவனோடு பேசுவது எனக்கு ஏன் இத்தனை திருப்தியைத் தர வேண்டும்?'

'திடீரென்று எனக்கும் ஆத்மாவுக்கும் நடுவில் நட்பு வளரத் தொடங்கியதும் பாவம் ஆத்மா என்ற பரிதாபம். இரக்கம்தானே இருந்தது-'

'ஆனால் நாட்கள் போகப்போக என் கருத்துக்கள் மாறுகின்றனவா?'

'ஆத்மாவோடு வெகு சௌஜன்யமாய் எப்படி என்னால் பேச முடிகிறது?'

'கணவன் பாஸ்கரிடம், ஏன், இதுநாள் வேறு யாரிடமும் அனுபவிக்காத சௌஜன்யத்தோடு எப்படி ஆத்மாவோடு பழக முடிகிறது?'

அப்படி அவளைப் பேச, பழக வைப்பது, ஆத்மா போடும் தூண்டுகோல்தான் என்பது யோசிக்க யோசிக்க சித்ராவுக்குப் புரிந்தது.

இது சரியா? தவறா?

இப்போது சோபாவில் உறக்கம் வராமல் தவிக்கையில், மீண்டும் மீண்டும் தன் நிலைமையை ஆராய்ந்தாள் சித்ரா -

வேற்று ஆணுடன் கணவனுக்குத் தெரியாமல் பேசுவதும் சிரிப்பதும், அவனிடமிருந்து பரிசுகள் பெறுவதும் தப்புதான் என்றது புத்தி.

'என்ன பெரிய தப்பு? மனைவி, குழந்தையை இழந்து விட்டுத் தவிப்பவனுக்கு என்னோடும், ஸ்யாமளாவோடும் இருப்பது நிம்மதியைத் தருவதென்றால் அதைக் கொடுப்பதில் என்ன தப்பு? நொந்து கிடக்கும் உள்ளத்துக்கு உதவுவது தப்பா? தவிர, ஆத்மாவோடு பேசுவதும், பழகுவதும், அவனின் பாராட்டுகளைப் பெறுவதும் எனக்கும் சந்தோஷத்தைத் தருகிறதே! பாஸ்கர் ஒரு நாளாவது என்னிடம் இதமாய் ஒரு வார்த்தை பேசியதுண்டா? ஆத்மா எத்தனை அருமையாய்ப் பேசுகிறான்? சின்ன சின்ன விஷயங்களைப் புரிந்து கொண்டு உற்சாகம் அளிக்கும் திறுசில் நடந்து கொள்கிறான்? யாரிடமும் பழகாத ஸ்யாமளா அவனிடம் எப்படி ஒட்டிக் கொண்டு விட்டாள்? இது எந்த விதத்தில் தப்பாகும்?' என்று பதிலுக்குக் கத்தியது மனம்.

சித்ரா புத்தியை ஒதுக்கித் தள்ளிவிட்டு, மனம் தரும் சமாதானத்தை ஏற்றுக் கொண்டு விளக்கை அணைத்தாள்.

**அ**ன்று காலை பிளைட்டில் பாஸ்கர் டெல்லிக்குப் போய் விட்டான்.

ஏர்போர்ட்டுக்கு ஆத்மா, சித்ரா, ஸ்யாமளா மூவருமே போயிருந்தார்கள்.

''நாளைக்கு ஏர்போர்ட்டுக்கு நான் வரப் போகிறேன். கிட்டத்தட்ட ஒரு வாரம் இருக்க மாட்டேன் என்கிறாய். உனக்கு ஸெண்ட் ஆஃப் கொடுக்க நான் வராவிட்டால் எப்படி?'' முதல் நாள் இரவு ரொம்ப கரிசனத்தோடு ஆத்மா பேசினான்.

பாஸ்கருக்கு ஆடம்பரம் பிடிக்கும். வழி அனுப்பவும், வரவேற்கவும், கூட்டமாய் நண்பர்கள் வருவதும், இவன் கதாநாயகன் போல விமானத்திலிருந்து இறங்கி நாலு போகளுக்கு நடுவில் மதிப்பாய் வீடு திரும்புவதும் ரொம்பப் பிரியம் என்று அறிந்து ஆத்மா பேசினான்.

போன வருஷம் சிங்கப்பூர், மலேஷியாவுக்குப் போன போது, எத்தனை அமர்க்களப்படுத்தினான் இவன். மறக்குமா ஆத்மாவுக்கு?

''காலை நேரத்தில் நீ ஏன் சிரமப்படணும் ஆத்மா?''

''இது என்ன சிரமம் - நான் நேராய் ஏர்போர்ட் வந்து விடுகிறேன்.''

''நோ, நோ... இங்கு வந்துவிடு. என்னோடு டிபன் சாப்பிட்ட பின் நாம ஒன்றாகவே ஏர்போர்ட்டுக்குப் போகலாம்.''



ஆத்மா எதிர்பார்த்த விதத்திலேயே பாஸ்கர் பேசினான்.

காலையில் வந்தான், டிபன் சாப்பிட்டான். ''ஸ்யாமளா குட்டி வருகிறாயா? அப்பாவுக்கு டாட்டா சொல்லலாம்'' என்று கொஞ்சினான். ஸ்யாமளா கிளம்ப - அவளைப் பார்த்துக் கொள்ளச் சித்ராவும் புறப்பட்டாள்.

டிரைவர் காரை ஓட்டினான். பின்னால் பாஸ்கர் அண்ட் ஃபாமிலி - முன்னால் ஆத்மா.

விமானக் கூடத்து புக் ஷாப்பில் அன்றைய பெஸ்ட் செல்லர் புத்தகம் ஒன்றை வாங்கி, '**டு மை ப்ரண்ட், பிலாஸபர் அண்ட் கைட் - மிகுந்த அன்புடன் ஆத்மா**' என்று எழுதி, ''ஓய்வு நேரங்களில் என்னை நினைத்துக் கொண்டே படி'' என்று சொல்லிக் கொடுத்தான்.

ஸ்யாமளாவுக்கு ஒரு நான்கு கதைப் புத்தகங்கள் வாங்கினான்.

ஆத்மாவின் அன்பு பாஸ்கரை நெகிழ வைத்தது.

''எதற்காக இத்தனை செலவு செய்கிறாய்?'' செல்லமாக அதட்டினான்.

''எனக்கு என்றால் வாங்கிக் கொள்ள மாட்டேனா? நீ வேறு நான் வேறா?''

இப்போதெல்லாம் ஆத்மா இந்த மாதிரி நாடகபாணி வசனங்களை நிறைய பேசக் கற்றுக் கொண்டு விட்டான்.

முதலில் பேசும் அவனுக்கும், கேட்கும் பாஸ்கருக்கும் எப்படியோ இருந்தது உண்மைதான். ஆனால் பிணைப்பு அதிகமானால் இப்படித்தான் என்று பாஸ்கர் இந்த வார்த்தைகளை ஏற்றுக் கொள்ள முற்பட்டான்.

ஆத்மாவின் பேச்சுக்களும் படிப்படியாகத்தானே இருந்தன?

தொடக்கத்தில் பாஸ்கரைச் சந்திக்கும் போதோ, போனில் பேசும் போதோ, அன்றைய தினம் கோர்ட்டில் அவன் செய்த விவாதத்தைப் பற்றியும், அவன் ஜெயித்த கேஸ்களைப் பற்றியும் பிறர் பாராட்டுவதாகக் கூறிப் பெருமைப்பட்டதுக்கும், 'உன் திறமை யாருக்கு வரும்' என்று வெளிப்படையாகவே கூறியதற்கும் நல்ல பலன் இருந்தது.

ஆத்மா 'லா' படித்தவன். அவனுக்கு வக்கீல் நண்பர்கள் உண்டு. அவர்கள் மூலம் அன்றாடம் கோர்ட்டில் நடப்பவைகளை அறிந்து கொள்வது ஒன்றும் சிரமமாக இருக்கவில்லை.

ஆத்மா இல்லாததை - நடக்காததைச் சொல்லவில்லையே!

'இவன் என்னுடைய ஆத்மார்த்த நண்பன் மட்டுமில்லை, என் நலனில் அக்கறை கொண்டவன். என் வெற்றிகளில் மகிழ்பவன்' என்று பாஸ்கர் சத்தியமாய் நம்பத் தொடங்கி விட்டான்.

தவிர, குடிகாரர்களின் புத்திகளைப் பற்றி அவர்களுடன் பழகியவர்களுக்குத்தான் தெரியும். குடிபோதையில் அவர்கள் இன்னது பேசி மகிழ்வார்கள், சண்டை போட்டுக் கொள்வார்கள் என்பதையெல்லாம் பார்த்து அனுபவித்தால்தான் தெரியும்.

அது ஒரு தனி வட்டம் -

ட்ரிங்க்ஸை கையில் எடுத்து விட்டால், அவர்களுக்கென உலகம் ஒன்று சிருஷ்டிக்கப்பட்டு விடும்.

ஆத்மா பாஸ்கரிடம் பேசுவதெல்லாம் எப்போது? முக்கால்வாசி சமயங்கள் மாலையில் குடிக்கும் செஷனில் தானே? அப்போது ஆத்மா எற்றும் அபிப்பிராயங்கள் வெகுவாய் பாஸ்கரின் உள்ளத்தில் தங்கிப் போனதில் என்ன வியப்பு?

ஏர்போர்ட்டிலிருந்து வீடு திரும்பினார்கள்.

பின்னால் ஆத்மா, சித்ரா நடுவில் ஸுமனா.

பாஸ்கர் இல்லாத இந்த வாய்ப்பை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற தீவிரம் ஆத்மாவினுள் இருந்தது.

இவனோடு தனியாய்க் காரில் பயணம் செய்வது சித்ராவுக்கு ஒருவித குறுகுறுப்பைக் கொடுத்திருக்கிறது என்பதை அவன் புரிந்து செயல்பட்டான்.

கார் செயிண்ட் தாமஸ் மவுண்ட்டைத் தாண்டும் போது கையை நீட்டி, எட்டி அமர்ந்திருந்த சித்ராவின் கைமேல் வைத்தான்.

ஷாக் அடித்த மாதிரி இருந்தது சித்ராவுக்கு.

முன்னால் டிரைவர், நடுவில் ஸுமனா, என்னாயிற்று இவனுக்கு?

கையை விடுவித்துக் கொள்ள முயன்றாள்.

முடியவில்லை.

ஆத்மா அவள் விரல்களை அழுந்தப் பற்றியிருந்தான்.

அதிகமாய்த் திமிறினால் டிரைவர் பார்த்து விடுவானோ என்ற பயம் எழ மெல்லக் கையை உலுக்கினாள் சித்ரா.

ஆத்மா மசியவில்லை.

இரு நாழிகை தவித்து, ஆத்மாவின் கண்களை சற்றே நிமிர்ந்து நோக்கினாள் - 'விடு கையை' என்கிற தினுசில். அவளால் ஆத்திரத்துடன் பார்க்க இயலவில்லை. ஆத்மாவின் சிவந்த மேனி, அழகான முகம், நெற்றியில் விழுந்த கத்தை முடி.

ஓ இது தப்பு. ரொம்ப தப்பு.

மனசை உலுக்கிக் கொண்டாள் சித்ரா.

மீண்டும் கையை விடுவிக்கப் பார்த்தாள்.

முடியவில்லை. கை வியர்வையில் பிசுபிசுத்தது.

ஸுமனா வேடிக்கை பார்த்துக் கொண்டே 'பா பா ப்ளாக் ஷீப்'ஐ சொல்லிய வண்ணம் இருந்தாள்.

தைரியத்தை வரவழைத்துக் கொண்டு ஆத்மாவைப் பார்த்து 'ப்ளீஸ்' என்று முனகினாள் சித்ரா.

வைத்த கண் வாங்காமல் பார்த்த ஆத்மா, 'மாட்டேன்' என்பது போலத் தலையை ஆட்டினான்.

சித்ரா இக்கட்டான நிலையில் இருப்பதை உணர்ந்து தானே ஆத்மா கையைப் பிடித்திருக்கிறான்.

திமிற முடியாது, கத்த முடியாது, ஆத்திரப்பட முடியாது. டிரைவர் இருக்கிறானே!



வண்டி மாம்பலம் பிரிட்ஜைக் கடந்தது.

சித்ரா தன் முயற்சியைக் கைவிட்டு விட்டாள்.

ஆத்மா பிடியைத் தளர்த்தவில்லை.

கார் நந்தனத்தில் திரும்பியது.

ஆத்மாவை ஏறிட்டுப் பார்த்தாள் சித்ரா. 'ஏன் இப்படிச் செய்கிறாய்?' என்று கெஞ்சியது முகம்.

அந்த முகத்தில் ஆத்திரம் இல்லை. கோபம் இல்லை. பயம்தான் இருந்தது.

ஆத்மாவுக்கு இதுபோதும். தன் செய்கைக்காக சித்ராவிடம் நடிக்கத் தேவையில்லை.

வீடு வந்தது. ஆத்மா கையை எடுத்தான்.

இறங்கி உள்ளே போய் வரவேற்பு அறைக்குச் சென்று உட்கார்ந்து கொண்டான்.

குழந்தையுடன் உள்ளே போக நுழைந்தவளை 'சித்ரா' என்று அழைத்தான்.

அவள் நின்றாள்.

எழுந்து ஆத்மா கிட்டத்தில் வந்தான்.

''நான் செய்தது தப்பென்றால் மன்னித்து விடு. ஆனால் கொஞ்ச நாட்களாகவே உன்னைப் பார்த்தால் எனக்கு சாருவின் நினைப்புத்தான் நெஞ்சை அடைக்கிறது. அதே மௌனம், அதே அடக்கம், அதே எளிமை, மனசைக் கவர்கின்ற சிரிப்பு. அதுவும் இன்று நீ கட்டியிருக்கிறாயே, இந்த மஞ்சள் நிறம் என்றால் அவளுக்கு அலாதி பிரியம். காரில் வரும் போது நானும் அவளும் ஹூக்ளி நதிக்கரையில் போவது போன்ற பிரமை. ஐ ஆம் ஸாரி சித்ரா - நான் போகிறேன். உனக்கு என்மேல கோபமில்லையென்றால் வீட்டுக்குப் போன் செய். நான் ஆபீஸ் போகப் போவதில்லை. உடம்பு சரியாக இல்லை.''

அலாதியான துக்க பாவனையோடு பேசிய ஆத்மா, சித்ராவின் பதிலை எதிர்பாராமல் காரில் ஏறிக் கொண்டு வீட்டுக்கு வந்தான்.

படுக்கையில் வந்து விழுந்தவனுக்கு தன் மேலேயே கோபம் கோபமாய் வந்தது. எத்தனை பொய்? என்ன நாடகம்? சே - டிஸ்கஸ்டிங்.

சித்ராவைக் கவர வேண்டும் என்ற ஆதங்கத்தில், அதற்குக் கருவியாக சாருவின் பெயரை உபயோகிக்கிறேனே. இது என்ன பேடித்தனம்?

எதற்காக இந்த நாடகம்?

எல்லாவற்றையும் உதறி விட்டுக் கண்காணாத தேசத்துக்கு ஓடிப் போனால் என்ன?

சலிப்பை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு சிகரெட்டைப் பற்ற வைத்தான் ஆத்மா.

அன்றைக்கு பாஸ்கர் கேட்ட கேள்வியை மனசில் மீண்டும் மீண்டும் நினைத்துக் கொண்டான்.

வருத்தம் மறைந்து ஆத்திரம் அதனிடத்தைப் பிடித்துக் கொண்டது.

'வெட்கங்கெட்ட ஆத்மா! எதற்காகடா வருந்துகிறாய்? ஆண்மை

இல்லாதவன் என்று நாலு பேர்கள் நடுவில் கேட்டு, அன்று பெண் போல் அழவிட்டு துடிக்கச் செய்தானே, அதற்கு வஞ்சம் தீர்த்துக் கொள்வதை விட்டு விட்டு இது என்னடா சலிப்பு? எதுடா பேமானித்தனம்? அன்று அவன் உன்னிடம் நடந்து கொண்டதற்கு நீ பழிக்குப்பழி வாங்குவதா? இல்லை இன்று இப்படி கலங்குவதா?'

சீ -

நியாய தர்மத்தால் எழுந்த விவாதங்கள், பழி வெறியில் சுத்தமாய் அடங்கிப் போயின.

ஆத்மா தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான். இன்னும் மூன்று மாதங்கள் முடிய நாட்கள் அதிகம் இல்லை.

அதற்குள் நினைத்ததை முடிக்காவிட்டால், பிறகு இவன் என்ன ஆண் மகன்? ஒரு பெண்ணுக்குக் கணவனாக இருந்தான்?

எழுந்து போய்க் குளித்து விட்டு, சுதாரித்துக் கொண்ட மனதுடன் ஹாலில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

அவன் வைத்த புள்ளிகள் சரியாக இருந்ததென்றால் சித்ராவிடமிருந்து கண்டிப்பாய் போன் வரும் விரைவிலேயே!

அதுவும் சரிதான். புள்ளிகள் கரெக்டுதான். சித்ரா போன் பண்ணின போது மணி சரியாய்க் காலை பதினொன்று.

சித்ராவுக்குக் குழப்பமாக இருந்தது.

'கையைத் தொட்டு, பிடித்துக் கொள்ளும் அளவுக்கு ஆத்மாவுக்கு தைரியம் வளர்ந்து விட்டதே!'

'இதற்கு யார் காரணம்?'

'நான் ரொம்ப இடம் கொடுத்தது தவறுதானோ?'

'போக்கிரித்தனம் என்றால் எதற்காக "என்னை மன்னித்து விடு" என்று மன்னிப்புக் கேட்க வேண்டும்?'

'ஆத்மாவின் முகத்தில் அடாவடித்தனம் இல்லையே.'

'மனசில் விஷமம் இராமல் வெறுமனே கையை பிடித்தானா?'

'அது என்ன வெறுமனே கைபிடித்தல்?'

'ஒரு பெண்ணின் கையை ஒரு ஆண் தொடுவதென்றால் அது காலாடித்தனம் இல்லாமல் வேறு என்ன?'

'நிஜமாய் இது தப்புதான்.'

'டிரைவர் பார்த்திருந்தால்?'

சித்ராவுக்கு உடம்பு நடுங்கியது.

'இனியொரு முறை இந்த மாதிரி அசட்டுத்தனத்துக்கு இடம் கொடுக்கக் கூடாது -

கண்டிப்பாய் -



சித்ரா வீட்டு வேலைகளில் ஈடுபட்டாள்.

ஆனால், கவனத்தை வேலையில் செலுத்தி ஒன்றிப் போக முடியாதபடி நெருடல்.

"என்ன சமைக்கட்டும்?" என்று இரண்டாவது தடவை சமையற்காரன் கேட்ட பிறகே பதில் சொன்னாள்.

"அம்மா - தூக்கிக்கோ" என்று, ஷாமளா அடம்பிடித்ததைத் தாங்க அவளுக்கு பொறுமை இல்லை.

தோட்டக்காரன் கொண்டு வந்து கொடுத்த தபாலைப் பிரிக்க கை எழவில்லை. மனசு சண்டித்தனம் செய்தது.

கொஞ்சம் பேச விடு என்று இதயம் அழுதது.

ஆத்மா, கெட்ட மனசோடு நடந்து கொண்டதாகத் தெரியவில்லையே!

'சாரு ஞாபகம் வந்து விட்டது; ஸாரி' என்றுதானே சொன்னான்.

'உடம்பு சரியில்லை; ஆபீஸுக்குப் போகப் போவதில்லை' என்றானே, தலையை வலிக்கிறதோ? இல்லை முன்பு வந்த மாதிரி வயிற்று வலியா?

'உன் போனை எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன். என் மேல் கோபம் இல்லாவிட்டால் பேசு' என்றானே!

பேசாவிட்டால்?

உள்ளம் புண்பட்டுப் போவானா?

எனக்கு கோபம் என்று அர்த்தம் பண்ணிக் கொள்வானா?

அவன் என்ன நினைத்தால் எனக்கு என்ன? என்ற நினைப்பை சித்ராவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

'ஆத்மா விரலசைத்தால் அவனுக்கு 'கம்பெனி' கொடுக்க ஆயிரமாயிரம் பெண்கள் தயாராக இருப்பார்களே; அவர்களை எல்லாம் விட்டுவிட்டு என்னோடு பழக அவன் விரும்புகிறானே, இது ஏன்? அவன் சொன்னது மாதிரி, நான் சாரு போல அடக்கமாய், பெண்மை நிறைந்தவளாய் இருப்பதாலா?'

'ஆத்மாவோடு கலகலப்பாய்ப் பழக ஆரம்பித்த இரண்டு மாதங்களாய் என் மனசில் புதுவித உற்சாகம் வந்திருப்பது உண்மைதான்.'

'என்ன சமைக்கச் சொல்வது, என்ன உடுத்துக் கொள்வது, வீடு துப்புரவாய் இருக்கிறதா? என்று பார்த்து பார்த்து செயல்படுகிறேனே ஏன்? ஆத்மா இவைகளைக் கவனித்து வழங்குகிற பாராட்டுகளைத் தொடர்ந்து பெற வேண்டும் என்ற ஆசையால்தானே?'

மணி பதினொன்று.

'போன் பண்ணட்டுமா, வேண்டாமா?'

'பண்ணலாம். அவன் மறுபடி தாறுமாறாய் நடந்து கொண்டால், 'அதற்கு ஆள் நான் இல்லை, போய் வா' என்று பளிச்சென்று சொல்லி விடலாம்.'

இப்படித் தன்னைத்தானே ஒரு திருப்திச் சமாதானம் பண்ணிக் கொண்டு சித்ரா ஆத்மாவை போனில் அழைத்தாள்.

"ஹலோ?"

"சித்ரா!"

"ம்..."

"தாங்க் காட் - நீ பண்ணுவாயோ மாட்டாயோ என்று பயந்து கொண்டிருந்தேன். என் மீது கோபம் இல்லையே?"

"ம் ஹூம்."

"ஸுமனா என்ன செய்கிறாள்?"

"நர்ஸரியில் இருக்கிறாள்."

"இன்றைக்கு நீ என்ன பண்ணப் போகிறாய் சித்ரா?"

"தெரியாது..."

"நான் சொல்லட்டுமா?"

"என்ன?"

"நான்கு மணிக்கு நான் அங்கு வருகிறேன். இரண்டு பேரும் குழந்தையை அழைத்துக் கொண்டு ஸ்னேக் பார்க் போகலாம்."

"நாம் இருவர் மட்டுமா?"

"ஏன்... போனால் என்ன தப்பு?"

"..."

"உனக்கு என்மேல் நம்பிக்கை இல்லை. காரில் நடந்து கொண்டதுபோல மீண்டும் செய்வேனோ என்ற பயம் இல்லையா?"

சித்ராவின் மன ஓட்டத்தை அறிந்து ஆத்மா பேசினான்.

"அது இல்லை, வந்து..."

"சத்தியமாகச் சொல்லுகிறேன் சித்ரா. உன் விருப்பம் இல்லாமல் நான் உன்னை இனித் தொடமாட்டேன். இப்போது திருப்திதானே?"

"நான் அதற்காகச் சொல்லவில்லை ஆத்மா. வீட்டு ஆட்கள் ஏதாவது தவறாய் எண்ணலாமோ என்ற பயம் தான்."

சிரித்தான் ஆத்மா.

"சித்ரா! நான் உங்க வீட்டுக்குத் தினம் வருபவன். நான் விருந்தாளி இல்லை. உங்களில் ஒருவன் என்பது உங்கள் ஆட்கள் எல்லாருக்கும் தெரியும். அப்புறம் என்ன?"

"..."

"நான் இத்தனை சொல்லியும் உனக்கு இஷ்டம் இல்லாவிட்டால் வேண்டாம் சித்ரா. ட்ராப் தி ஐடியா."

ஆத்மாவுக்குக் கோபமா?

"வேண்டாம்... போகலாம்... எனக்கு இஷ்டம்தான்."

"ஆல்ரைட். ஒன்று செய்கிறாயா? உன் டிரைவருக்கு அரைநாள் லீவு கொடுத்து அனுப்பிவிடு. நான் அங்கு வந்து உன்னைக் கூட்டாயப்படுத்தி ஆயாவுக்கு எதிரில் கூப்பிடுகிறேன். நாம் முன்னேற்பாடாக பேசிக் கொண்டது அவளுக்குத் தெரிய வேண்டாம். என்ன?"

சித்ரா சரி என்றதும், ஆத்மா போனை வைத்தான்.



மாலை நாலு மணிக்கு பாஸ்கரின் வீட்டுக்குள் தன் பியட்டை ஓட்டி நிறுத்தினான்.

ஏற்கனவே பேசியபடி, ஆயாவுக்கு எதிரில் அப்போது தான் நினைத்துக் கொண்டு திட்டம் போட்ட மாதிரி, "எத்தனை நாழிகை வீட்டிலேயே 'போர்' அடிக்க உட்கார்ந்திருப்பாய்? ஸுமனாவை அழைத்துக் கொண்டு ட்ரைவ் போய் விட்டு வரலாம்" என்று கிளம்பினான்.

குழந்தையுடன் புறப்பட்டார்கள்.

சொன்ன வாக்கை மீறவில்லை ஆத்மா.

தப்பித் தவறிகூட சித்ராமேல் அவன் விரல்படவில்லை.

ஸ்னேக் பார்க்கில் எத்தனை ரக பாம்புகள்?

பெரிய வட்டத் தொட்டி. அதனுள் மரம், செடி கொடிகள். அவற்றில் நூற்றுக்கணக்கான பாம்புகள்.

பச்சைப் பாம்பு எத்தனை நீளம்?

ஓலைப் பாம்பு தொட்டியில் சுவரில் ஏற முயற்சிக்கிறதே? வெளியில் வந்து விடாதோ?

மரத்தில் சடை சடையாய் நல்ல பாம்புக் கூட்டங்கள். பாய்ந்து கடித்து விடாது?

அட்டெண்டர் ஒருவன் உள்ளே போய் அலட்சியமாய்ப் பாம்புகளைக் கம்பினால் இப்படியும், அப்படியும் தூக்கிப் போட்டான்.

ஸுமனாவுக்கு ஏகக் கொண்டாட்டம்.

சித்ராதான் பாம்புகளைப் பார்த்துப் பயந்து போனாள்.

இந்தியாவில் உள்ள பாம்புகளில் முக்கால்வாசி ரகங்கள் விஷமற்றவையாம். பச்சைப் பாம்பு கண்ணைக் குத்தும், கொம்பேறி மூக்கன் கடித்துவிட்டு மரத்தில் ஏறினால் சுடுகாட்டில் புகையைப் பார்த்தபின்தான் இறங்கும் என்பதெல்லாம் கட்டுக் கதையாம்!

ஆங்காங்கு உள்ள பலகைகளில் உள்ள விவரங்கள் சித்ராவுக்கு நம்ப முடியாததாக இருந்தது.

தொட்டிக்குள் ஜெயமாய் உயிர் உள்ள தவளைகள், எலிகள்.

எதற்கு?

பாம்புகளுக்குப் பசி எடுக்கும் போது விழுங்கலாம்.

பாவம்... எந்த நேரமும் உயிருக்கு ஆபத்தான நிலையில் அந்த ஜீவன்கள் நடுநடுங்கிக் கொண்டிருப்பது பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

பாம்புகளைப் பார்வையிட்டு முடித்ததும் காரில் ஏறிக் கொண்டு காந்தி மண்டபத்துக்கு வந்தார்கள்.

நிழலில் வண்டியை நிறுத்தினான் ஆத்மா.

ஐஸ்க்ரீம் வண்டிக்காரனைக் கூப்பிட்டு மூன்று சாக்கோ பார்களை வாங்கினான்.

கவரைப் பிரித்து ஸுமனா அதை லாவகமாய் பிடித்துத் தின்னக் கொடுத்து

விட்டு, ''என் சித்ரா! நீ பிறந்து வளர்ந்தது மெட்ராஸில்தானே? அப்படி இருந்தும் இந்த ஸ்னேக் பார்க்கை ஒரு தரம் கூட பார்த்ததில்லை?'' என்று கேட்டான்.

'இல்லை' என்று தலை ஆட்டினாள் சித்ரா. ''அப்பாவுக்கு பொது இடங்களுக்குப் பெண்கள் போவதில் அத்தனை விருப்பம் இருந்ததில்லை. சினிமா, டிராமா என்றுகூட ரொம்பப் போவதில்லை. அம்மாவோடு கோவிலுக்குப் போவேன். அடிக்கடி. காலேஜில் படித்துக் கொண்டிருந்ததும் கல்யாணத்தால் நின்று விட்டது'' பேசினவள், சற்றுத் தயங்கி, ''என் அப்பாவுக்குத் தப்பாத மாப்பிள்ளை பாஸ்கர்'' என்றாள் மெதுவாய்.

பேச்சை ஆத்மா எண்ணும் திசையில் திருப்புவதற்கு சித்ராவே ஒரு வழியைக் காட்டிக் கொடுத்தாள்.

முகத்தை வருத்தமாக வைத்துக் கொண்டான் ஆத்மா. பின்பு, ''நீ சொன்னது சரிதான் சித்ரா. இந்தச் சின்ன வயதில் பாஸ்கர் இப்படி இருக்க வேண்டாம். நான்கூட எத்தனை முறைகள் சொல்லி இருப்பேன் தெரியுமா, 'வேண்டாம் பாஸ்... மாலை நேரங்களில் குடிக்க எங்களைக் கூப்பிடாதே. உன் மனைவியோடு வெளியில் போகும் பழக்கத்தை வைத்துக் கொள்' என்று. கேட்டால் தானே... ம்...''

''என்னை வெளியில் கூட்டிப் போகாவிட்டாலும் பரவாயில்லை ஆத்மா. அபூர்வமாய்ப் பிறந்த பெண் - இவளைக் கொஞ்சம் கவனிக்கக் கூடாதா? அப்படி என்ன வேலை - நண்பர்கள்?'' சித்ரா அலுத்துக் கொண்டாள்.

தலையை ஆட்டி ஆமோதித்தான் ஆத்மா.

வருஷங்களாய் மனசுக்குள் பூட்டி வைத்திருந்த குறைகள், ஆத்மா காட்டும் பரிவில் வெளியே கசியத் தொடங்கின.

''ஒன்றுமில்லை ஆத்மா. சின்ன குழந்தைதானே ஸுமனா? இப்போது ஐஸ்க்ரீம் வாங்கிக் கொடுத்தீர்கள். எத்தனை ஆசையாய்ச் சாப்பிடுகிறாள். ஒரு சமயம் அவரோடு ரயில்வே ஸ்டேஷனுக்குப் போன போது, குழந்தை ஆசைப்பட்டாள் என்று ஐஸ்க்ரீம் வாங்கிக் கொடுத்ததற்கு என்னமாய் அத்தனை பேர்கள் நடுவில் கத்தினார் தெரியுமா? நல்ல கம்பெனியில்தானே இதைச் செய்கிறார்கள். ஊரில் உள்ள குழந்தைகளெல்லாம் வாங்கிச் சாப்பிடவில்லையா? தானும் வாங்கித் தரமாட்டார், நானும் வாங்கித்தரக் கூடாது. அப்படி ஒரு பிடிவாதம்.''

''வாஸ்தவம் சித்ரா. பாஸ்கருக்கு ஏனோ உன் அருமையோ, குழந்தையின் அருமையோ தெரியவில்லை என்றே நினைக்கிறேன். மனைவி, குழந்தைகளைப் பூ மாதிரி காப்பாற்றி, போற்றி வைத்துக் கொள்ள வேண்டாமோ?''

''அதற்கெல்லாம் பகவான் தலையில் எழுதியிருக்க வேண்டும் ஆத்மா'' பெருமூச்சு விட்டாள் சித்ரா. பிறகு ''இத்தனை வருஷங்களில் இவரைப் பற்றி நான் யாரிடமும் இப்படிப் பேசியது கிடையாது. உங்களிடம் என்னைப் பேச வைக்கும் சக்தி இருக்கிறது'' என்றாள் தொடர்ந்து.

சிகரெட் ஒன்றை எடுத்து பற்ற வைத்துக் கொண்டான் ஆத்மா.

ஸுமனா ஐஸ்க்ரீம் தின்று மேலெல்லாம் சிந்திக் கொண்டிருப்பதை தன்



கர்சீப்பை எடுத்துத் துடைத்தான்.

ஒருநாள் கூட பாஸ்கர் இத்தனை அன்புடன் - பெற்ற பெண்ணிடம் நடந்து கொண்டதில்லையே என்று எண்ணும் போது சித்ராவுக்கு ஆத்மாவின் மதிப்பு அதிகரித்தது.

குனிந்து அவன் குழந்தையைத் துடைத்து விடுகையில், சிகரெட் புகை அவன் முகத்தைத் தாக்கியதால் கையை வீசிப் புகையை சித்ரா ஓட்டினதை ஆத்மா பார்த்தான்.

''உனக்கு இந்தப் புகை பிடிக்காது?''

''மதுவும், சிகரெட், டிரிங், ஒன்றுமே எனக்குப் பிடிக்காது. ஆனால், என் பேச்சை யார் கேட்கிறார்கள்?''

'ஆத்மா - நல்ல சமயம். அதைப் பயன்படுத்திக் கொள்.' கொட்டு கொட்டென்று முழித்துக் கொண்டிருக்கும் ஆத்மாவின் வக்ரபுத்தி முணுமுணுத்தது.

ஒரு க்ஷணம் தான்.

வாயிலிருந்த சிகரெட்டைத் தூர வீசி எறிந்தான். பின் சித்ராவின் பக்கம் திரும்பி ''நான் கேட்கிறேன்'' என்றான்.

சித்ரா அசந்து விட்டாள்.

இவனுக்குத் தன்னிடம் இப்படியொரு ஈடுபாடா?

வெட்கமும், பெருமையும் சேர்ந்து எழ அவள் புன்னகைத்தாள்.

''கிளம்பலாமா? மணி ஏழாகப் போகிறது. உன்னை வீட்டில் விட்டுவிட்டு நான் போகிறேன்.''

வண்டியைக் கிளப்பி, அவளை இறக்கி விட்டபின், ஸுமனாவின் கன்னத்தில் லேசாய் முத்தமிட்டு விட்டு ஆத்மா கிளம்பினான்.

தன் வீட்டுக்குப் போய் ஷவரில் குளித்தான். ஸ்லாக்ஸை நீட்டாக விட்டுக் கொண்டு, சிகரெட்டைப் பற்ற வைத்தவன் ''ராமு - ஜோராய் சப்பாத்தி கூட்டு தயார் செய்'' என்று குரல் கொடுத்தான்.

ஸ்னேக் பார்க் போய் வந்த மறுநாள் ஆத்மா, சித்ராவைப் பார்க்கப் போகவில்லை.

சித்ரா அவனின் அலுவலகத்துக்கு போன் பண்ணிப் பேசினாள். வீட்டுக்கு வருகிறீர்களா என்றாள். இவன் வேலை இருக்கிறது. நாளை வருகிறேன் என்றான்.

சித்ராவுக்கு இவனைப் பார்க்க வேண்டும் என்ற தவிப்பு எழ வேண்டுமானால், நடுவில் ஒரு நாளாவது இடைவெளி இருப்பது அவசியம்.

மறுநாள் மாலை ஆறு மணி அளவில் அங்கு போனான்.

சித்ரா வழக்கத்தைவிடச் சிரத்தையுடன் அலங்கரித்துக் கொண்டிருந்த மாதிரி இருந்தது.

காபி, டிபன் சாப்பிட்டான்.

''வருகிறாயா? ஸுமனாவுடன் பீச்சுக்குப் போகலாம்'' என்றான்.

பீயட் காரில் போனார்கள்.

ஸ்வர்ணாவைத் தண்ணீருக்கு அழைத்துப் போனான் ஆத்மா.

பேண்ட்டை மடித்துக் கொண்டு, ஸ்வர்ணாவைத் தண்ணீரில் நிறுத்தி வைப்பதும், அலை வரும் போது தூக்குவதுமாய்... ஆத்மா அமர்க்களம் செய்தான்.

சித்ராவும் தண்ணீரில் இறங்கி விட்டாள். பெரிய அலை ஒன்று சீறிக் கொண்டு வந்து அவளைத் தடுமாறச் செய்த போது, விழப் போனவளைத் தாங்கிப் பிடித்த ஆத்மா, ஒரு நிமிஷம் பிடித்த பிடியை விடாமலேயே இருந்தான். குளிர்ந்த காற்று, இருள், ஆழம், நீலவானம், பன்னீராய்த் தெளித்த தண்ணீர் — அந்தச் சூழ்நிலையில் ஆத்மாவின் கனிவும், பார்வையும் மனசைத் தொட, கையை அவன் தொடர்ந்து பிடிக்க அனுமதித்தாள் சித்ரா.

மணலில் வந்து அமர்ந்தார்கள்.

ஐஸ்க்ரீம் சாப்பிட்டார்கள்.

ஸ்வர்ணா மணலில் மலைகட்டத் தொடங்குகிறாள்.

"ஏன் சித்ரா பேசாமல் இருக்கிறாய்? கொடுத்த வாக்கை மீறி விட்டேன் என்ற கோபமா?"

'இல்லை' என்று தலையை ஆட்டினாள் சித்ரா.

அதற்குப் பின் அவனும் பேசவில்லை. மணலில் கிடந்த அவளின் இரண்டு கைகளையும் எடுத்து மணலைத் தட்டி விட்டுத் தன் கைகளோடு சேர்த்துக் கொண்டான் ஆத்மா.

**நா**ளைக்கு பாஸ்கர் வருகிறான்.

சித்ரா இன்று ஒரு நாள்தான் தனிமையில் இருப்பாள்.

பாஸ்கர் வந்து விட்டால் இந்தப் பேச்சு, வெளியில் போவது எல்லாம் இருக்காது.

ஆத்மா வைத்த மூன்று மாசக் கெடு முடிய இன்னும் சரியாய் பன்னிரண்டு நாட்கள் இருக்கின்றன.

பாஸ்கர் மீண்டும் டெல்லிக்குப் போகும் அடுத்த வாரத்தை ஆத்மா வகையாய்ப் பயன்படுத்திக் கொண்டால் தான், எண்ணியது பத்து நாட்களுக்குள் நிறைவேறுவது சாத்தியம்.

பார்வை, பேச்சு, தொடுதல் என்று வளர்ந்திருக்கும் நட்பு இன்னும் தீவிரமாக வேண்டும். அந்தக் கிளர்ச்சியில் சித்ரா அமுங்கிக் குளித்தால் ஒருவாரத்தில் இவனுக்கு முழுசாய்த் தன்னைத் தர முன்வருவாள்.

என்ன செய்யலாம்?

கடந்த இரண்டரை மாசங்களாகவே உணவு, தூக்கம், அலுவலக வேலை எல்லாவற்றையும் பொதுவாக ஒதுக்கித் தள்ளி விட்டு, தன் சபதத்தை நிறைவேற்றுவதிலேயே குறியாய் இருக்கும் ஆத்மா, இப்போது திட்டம் போடுவதற்குக் கேட்க வேண்டுமா?

விடிய விடிய யோசனை செய்து ஒரு பிளானை உருவாக்கினான்.



காலை எட்டு மணிக்கு சித்ராவைப் போனில் அழைத்தான்.

"குட்மார்னிங் டியர்" என்றான்.

நாலு நாட்களாய் ஆத்மாவின் சில்லறைக் கொஞ்சல்களுக்கும், அதிகக் கவனிப்புக்கும் சித்ரா பழகி விட்டிருந்தாள்.

"குட்மார்னிங்."

"ராத்திரி தூங்கினாயா?"

"ம்..."

"உன்னால் எப்படித் தூங்க முடிகிறது சித்ரா? எனக்குத் தூக்கமே இல்லை. ரொம்ப டிஸ்டர்ப்டு ஸ்லீப்."

"ஏனாம்?"

"போனில் சொல்ல மாட்டேன். நேரில் பார்க்கும் போது சொல்கிறேன்."

"நேரில் எப்போது பார்ப்பது? சாப்பிட இங்கு வருகிறீர்களா?"

"வேண்டாம். நான் ஒன்று சொன்னால் கேட்பாயா?"

"என்ன?"

"நாமிருவரும் இன்று ஒரு சினிமாவுக்குப் போகலாம்."

"சினிமாவா? தனியாகவா? குட்னெஸ். தெரிந்தவர்கள் யாராவது பார்த்தால்?"

"யாரும் பார்க்க மாட்டார்கள். மாட்னி ஷோவுக்குப் போய் வரலாம்."

"எனக்குப் பயமாக இருக்கிறது, ஆத்மா."

"என்ன பயம்? சாந்தியில் தனி பாக்ஸ் உண்டு. நாம் தனியாக வேறு யார் கண்ணிலும் படாமல் உட்கார்ந்திருக்கலாம். ப்ளீஸ் வாயேன். ரொம்ப நல்ல படம்."

"எப்படி வருவது? டிரைவர், உங்களைப் பார்ப்பான். அவன் இவரிடம் சொல்லி விட்டால் வம்பு. வேண்டாம் ஆத்மா."

"நான் எல்லாவற்றையும் யோசனை செய்து விட்டேன் சித்ரா. உன்னை மாட்டி விடும்படி நான் பிளான் போடுவேனா? சொல்வதைக் கேளேன்."

சித்ரா சுயமாய்ச் சிந்தித்த நாட்களே கம்மி. அதுவும் இப்போது காணாததைக் கண்ட கிளுகிளுப்பில் சத்தமாய் நின்று நிதானித்துச் செயல்படுவதை அவள் விடுத்திருந்ததால், ஆத்மாவின் பேச்சைக் கேட்டாள். அதன்படி நடந்தாள்.

பகல் மூன்று மணி அளவில் ஆயாவை அழைத்து "என் சிநேகிதி போன் பண்ணினாள். ஊரிலிருந்து வந்திருக்கிறாள். அவளோடு படம் ஒன்றுக்கு கூப்பிடுகிறாள். போய் விட்டு மாலை ஆறுக்குள் வந்து விடுவேன். யாராவது போன் பண்ணினால் நான் வெளியில் போயிருப்பதாகச் சொல்" என்று கூறிவிட்டு, உடைமாற்றி ரெடியாகி, டோபாஸ் சென்ட்டைத் தாராளமாய்த் தெளித்துக் கொண்டாள்.

டிரைவரை அழைத்து வண்டியை எடுக்கச் சொன்னாள். காரில் உட்கார்ந்து சாந்தி தியேட்டருக்குப் போ என்றாள்.

இதயத்தின் துடிப்பு அவளுக்குக் காதில் கேட்டது. கையெல்லாம் வியர்வை.

'இப்படித் திருட்டுத்தனமாய் சினிமா போகிறேனே, இது சரியா?'

'தெரிந்தவர்கள் கண்ணில் பட்டுவிட்டால்?'

'டிரைவர், ஆத்மாவைத் தவறிப் போய் பார்த்து விட்டால்?'

ரொம்பப் பயமாக இருந்தது.

ஆனால் பயத்தை மீறிக் கொண்டு சின்னப் பெண்ணின் குதூகலம் உள்ளத்தைப் பிராண்டியது.

ஆத்மா தெளிவாய்ச் சொல்லி இருக்கிறானே... என்ன பயம்?

டாக்ஸியில் ஆத்மா கால்மணி முன்னதாக வந்து முதல் மாடியில் இருந்த முதல் பாக்ஸுக்குள் சென்று விடுவதாகவும், டிக்கெட்டை வாங்கக் கதவில் நிற்கும் ஆளிடம் 'என் மனைவி வருவாள். அவள் டிக்கெட்டும் என்னிடம் இருக்கிறது. உள்ளே அனுப்பிவிடு' என்று சொல்லி விடுவதாகவும் கூறியிருந்தான்.

படம் தொடங்கி ஐந்து நிமிஷங்கள் ஆன சமயத்தில் அவளை வரச் சொல்லி இருந்தான்.

"காரை விட்டு இறங்கி டிரைவரிடம் ஐம்பது ரூபாய் பணத்தைக் கொடுத்து காபி, டிபன் சாப்பிடு என்று உபசாரம் செய்தபின், லிஃப்டில் ஏறாமல், நிதானமாய் மாடிப் படிகளில் ஏறி முதல் மாடிக்கு வா. இடதுபக்கம் காபி கவுண்ட்டர் உள்ளது. வலது பக்கம் முதல் பாக்ஸில் நான் இருப்பேன். 'எங்க ஐயா உள்ளே இருக்கிறாரா?' என்று கதவில் நிற்பவனிடம் கேட்டுவிட்டு உள்ளே வா. பயப்படாதே. நாம் கணவன் - மனைவி என்று பார்ப்பவர்கள் நினைத்துக் கொள்வார்கள். புரிகிறதா?"

ஆத்மாவின் அறிவுரைப்படி சித்ரா செய்து, மாடிக்கு வந்து விட்டாள். படபடப்பு அதிகமாயிருந்தது.

நல்லவேளை, படம் ஆரம்பித்து விட்டதால், வெளியில் யாரும் இல்லை.

'இந்தக் கதவுதானே? வேறு யாராவது உட்கார்ந்திருக்கும் பாக்ஸுக்குள் போய் விட்டால்?'

'இப்படியே திரும்பிக் கீழே இறங்கி வீட்டுக்குத் திரும்பினால் என்ன?'

'டிரைவரிடம் என்ன சொலவது?'

ஏற்கனவே வண்டியை விட்டு இறங்கும் போது, 'படம் ஆரம்பித்து விட்டால் உள்ளே போய்க் காத்திருப்பதாகச் சொன்னாள். போய் விட்டாள் போலிருக்கிறது' என்று டிரைவர் இவளை நம்புவதற்காக உரக்கப் பேசிய வண்ணம் இறங்கியவள், இப்போது போல மச்சான் திரும்பி வறதான் என்று போய் நின்றால் எப்படி?

தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கதவிடம் சென்றாள்.

அந்த ஆள் இவளைக் கண்டதுமே, 'ஐயாவைத் தேடறீங்களா? உள்ளே இருக்காருங்க. வாங்க...' என்று அழைத்ததும் நிம்மதியாயிற்று.

அவன் பாக்ஸைத் திறந்து 'போங்கம்மா' என்று சொல்லிவிட்டு கதவைச் சாத்திக் கொண்டான்.

சீட்டில் அமர்ந்திருந்த ஆத்மா நின்று கொண்டான்.

திரையில் சுசித்ராவும் அவர் குடும்பமும் ஹார்லிக்ஸுக்காகச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.



வெளிச்சத்திலிருந்து இருட்டுக்கு வந்ததால் தடுமாறியவளைக் கையை நீட்டி அழைத்து, சீட்டில் உட்கார வைத்தான் ஆத்மா.

சின்ன பாக்ஸ். அதில் சோபா மாதிரி கொஞ்சம் நீளமான ஒரே சீட். நடுவில் தடுப்பு இல்லை.

ஒரு பக்கமாய்ச் சித்ரா அமர்ந்தாள்.

ரொம்ப நடுக்கமாக இருந்தது.

இரண்டு நிமிஷங்கள் சென்றதும், மடியில் இருந்த அவள் கையைப் பிடித்து மெல்ல அழுத்தி, "பயப்படாதே சித்ரா! ரிலாக்ஸ்" என்றான் ஆத்மா.

விளம்பரப் படங்கள் ஒன்றின்பின் ஒன்றாக ஓடி முடிந்தன.

நடுவில் ஒருமுறை தலையைத் திருப்பி ஆத்மாவைப் பார்த்தாள் சித்ரா.

அவன் திரையைப் பார்க்காமல் இவளையே வைத்த கண்களை எடுக்காமல் நோக்குவது புரிந்தது.

அடங்கியிருந்த படபடப்பு, வியர்வை எல்லாம் மீண்டும் தலைதூக்கின.

"சரியாக உட்கார்ந்து கொள் - ரிலாக்ஸ்."

சித்ரா பின்னால் சாய்ந்த போது, அவள் கையை விட்டு விட்டு சீட் விளிம்புமேல் தன் கையை நீட்டிக் கொண்டான் ஆத்மா.

அடுத்த நிமிஷம் அவன் கை சித்ராவின் தோள்பட்டையில் இறங்கி, அவளின் வலது புஜத்தை அழுந்தப் பிடித்தது.

"வேண்டாம் ஆத்மா... ப்ளீஸ்."

மெலிந்த குரலில் சித்ரா கெஞ்சினாள்.

ஆத்மா பதில் பேசவில்லை. அவளை நெருங்கி உட்கார்ந்து, இடக்கையால் அவளின் ஒரு கையைப் பிடித்துக் கொண்டான்.

"ப்ளீஸ்... ப்ளீஸ்... வேண்டாமே..."

புஜத்தைவிட்டு ஆத்மாவின் கை இப்போது சித்ராவின் கன்னத்தை மெல்ல வருடியது.

"பயமாக இருக்கிறது ஆத்மா... வேண்டாமே... ப்ளீஸ்."

"என்ன பயம் சித்ரா...? நான் என்ன புலியா, சிங்கமா? உன்னைக் கடித்து விடுவேனா? என்ன பயம்... என்னைப் பாரேன்."

இத்தனை நெருக்கமாக அமர்ந்து, ஆத்மாவை ஏறிட்டுப் பார்க்கும் தைரியம் தனக்கு இல்லை என்று புரிய - தலையைத் தாழ்த்திக் கொண்டாள் சித்ரா.

கன்னத்தை வருடிய கையால் அவளின் தலையைத் தன் பக்கம் திருப்பி, இடது கையால் அணைத்து, சித்ராவின் வாயில் முத்தமிட்டான் ஆத்மா.

"ப்ளீஸ்... ப்ளீஸ்..."

சித்ராவின் வார்த்தைகள் பாதியிலேயே அமுங்கிப் போயின. வாய், கண்ணங்கள், கண்கள் என்று முதலில் மென்மையாகவும், பின்பு அழுத்தமாகவும் முத்தமிட்டான் ஆத்மா. அவளை நன்றாய் திருப்பித் தோளோடு தோள் வைத்துப் பிணைத்துக் கொண்டான்.

படம் முடிவதற்குச் சில நிமிஷங்கள் இருக்கையில், தன் தோளில் தலைவைத்து கண்மூடிக் கிடந்த அவளை ஆத்மா எழுப்பி, 'நீ புறப்பட்டுப் போய் விடு; நான் படம் முடிந்த பிறகு போகிறேன்' என்று கிளப்பினான்.

சித்ரா தலைமுடியைக் கோதி, புடவைத் தலைப்பைச் சீராக்கியபின் வெளியில் வந்தாள்.

காரில் ஏறிக் கொண்டு ஆத்மா சொல்லிக் கொடுத்த விதத்திலேயே 'நல்ல பெண் இவள், முதலில் வீட்டுக்கு வருகிறேன் என்று சொல்ல வேண்டியது; பின்பு வேறு அர்ஜண்ட் வேலை இருக்கிறது. நாளைக்கு வருகிறேன் என்று தட்டிக் கழிக்க வேண்டியது' என்று முணுமுணுத்து ''சரி - நீ வீட்டுக்குப் போப்பா'' என்று டிரைவரிடம் பணித்தாள்.

வீட்டுக்கு வந்தவள் நேராக பாத்ரூமுக்குள் போய்க் கதவைச் சாத்திக் கொண்டாள்.

கண்ணாடியில் தன் முகத்தைப் பார்க்க முடியாதபடி தயக்கம்.

'செய்தது தப்பில்லையா?'

'நான் ஏன் புத்தி இழந்தேன்?'

'ஐயோ! ஆத்மாவைப் பார்த்தால் மனசு நெகிழ்ந்து போய், உடம்பு பரவசப்படுகிறதே!'

'நான் என்ன செய்வேன்?' முகத்தை அலம்பிக் கொண்டு வெளியே வந்தவள், ஸுமனாவின் அறைக்குப் போனாள்.

குழந்தையைப் பார்க்கும் போது கணவனின் நினைப்பு எழுந்தது.

'தப்புப் பண்ணிவிட்டோமோ?'

'அம்மா' என்று ஓடி வந்த குழந்தையை அள்ளி அணைத்தாள். இனிமேல் என்னவானாலும் ஆத்மாவைச் சந்திக்கக் கூடாது என்று திடமான முடிவுக்கு வந்தாள்.

பூஜை அறைக்குள் சென்று, ஸ்வாமிக்கு விளக்கேற்றி ''எனக்கு நல்ல உறுதியான புத்தியைக் கொடு'' என்று வேண்டினாள்.

என்ன பிரார்த்தித்து என்ன? நேரம் செல்லச் செல்ல சித்ராவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. 'வேண்டாம் போ' என்று எத்தனை தள்ளினாலும் ஆத்மா தொட்டதும், முத்தமிட்டதும், தான் உருகி நைந்ததும் ஞாபகத்துக்கு வந்தன.

'முத்தமிடும் போது இத்தனை இன்பம் எழுமா என்ன?'

'நானும் ஒரு கணவருடன் பத்து வருஷமாய் வாழ்கிறேன். ஆனாலும் ஒருமுறைகூட... ஒரே ஒருமுறைகூட, இந்தச் சிலிர்ப்பும் இன்பமும் உண்டானதில்லையே ஏன்?'

'மனசே வேறு எதாவது பற்றி நினை. இந்த நினைப்பு வேண்டாம்.'

ஸுமனாவுக்கு சாப்பாடு ஊட்டினாள்.

அவளுக்குப் பசியில்லை. ஒரு டம்ளர் மோர் அருந்தி விட்டுப் படுக்கை அறைக்கு வந்தாள்.



ரேடியோ கேட்கப் பிடிக்கவில்லை.

டி.வி. பார்க்க இஷ்டம் இல்லை.

புத்தகம் படிக்க விருப்பமில்லை.

'ஆத்மா... ஆத்மா... ஆத்மா...'

'ஆத்மா! அவன் ஏன் என்னைப் புது தினுசாய் 'சித்ரு, சித்ரு' என்று கூப்பிட்டான்? திட்டம் போட்டு இப்படி நடந்தானா, இல்லை எதேச்சையாய் நடந்ததா?'

அவளுக்கு மூளை குழம்பியது.

படுத்தாள்.

கண்முன் ஆத்மா தோன்றி, சிரித்தான்.

மயக்குகிற தினுசில் அது என்ன சிரிப்பு?

நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு போன் அடித்தது.

எடுத்தாள் -

''ஹலோ'' என்றாள் மெதுவாய்.

''ஹலோ மை டார்லிங்.''

ஆத்மா தான் - அந்த மாயக்காரன்தான்.

''....''

''பேச மாட்டாயா?''

''என்ன பேச வேண்டும்?''

''சித்ரு - ஐ வாண்ட் டு தாங்க் யூ ஃபார் தி ஆஃப்டர் நூன். சொர்க்கத்தில் நான் மிதந்தேன். மிதந்து கொண்டிருக்கிறேன். நீ எப்படி இருக்கிறாய்?''

என்னவென்று சொல்லுவாள் சித்ரா. ஆத்மா மாதிரி அவளால் பச்சையாக எப்படிப் பேச இயலும்?

''உனக்குக் கோபமா சித்ரு?''

''....''

''உனக்குக் கோபம் இல்லை. எனக்குத் தெரியும்...'' - ஆத்மா நகைத்தான்.

மனசில் தோன்றியதை வெளியில் கேட்டாள் சித்ரா.

''உங்களுக்கு விளையாட்டாக இருக்கிறதா ஆத்மா? என் வேதனை உங்களுக்கு எப்படிப் புரியும்? என்னிடம் என்ன பார்க்கிறீர்கள்? அழகா, புத்தியா, கவர்ச்சியா? என்னிடம் ஒன்றுமே இல்லையே! ப்ளீஸ்... என்னோடு விளையாடாதீர்கள். என் உணர்ச்சிகளைக் கேவலப்படுத்தாதீர்கள்...'' சித்ராவின் குரல் கரகரத்தது.

''விளையாட்டா? நானா? உன்னோடா?'' சற்றே கோபக் குரலில் ஆத்மா பேசினான். ''உன்னை நான் அறிந்த அளவுக்கு, உனக்கு என்னைப் புரியவில்லையே சித்ரு. சாரு மறைந்த இரண்டு வருஷ காலத்தில் நான் தொட்ட முதல் பெண் நீதான் என்றால் நம்புவாயா? உன்னை 'சித்ரு' என்று புதுசாகக் கூப்பிடுகிறேன். ஏன் தெரியுமா? என் சாருவை சித்ருவில் நான் பார்க்கிறேன். இதெல்லாம் உனக்கு எப்போது புரியும்....? உன்னோடு நான் விளையாடுகிறேன்

என்று எத்தனை சுலபமாய் சொல்லி விட்டாய்? ஓ.கே... அது என் துரதிருஷ்டம். உன்னோடு மேலும் பேசி உன்னைத் தொந்தரவு செய்ய எனக்கு விருப்பமில்லை. குட் நைட்.''

சற்றும் எதிர்பாராமல் தொடர்பைத் துண்டித்து விட்டான்.

'கடவுளே! ஆத்மா என்மேல் இத்தனை அன்பா வைத்திருக்கிறான்?' குரல் தழுதழுத்தது. அழுது விடுவான் போல இருந்ததே! என்ன மடத்தனமாய்ப் பேசி விட்டேன்.'

ஐந்து நிமிஷத்துக்குள் சித்ரா அவனைக் கூப்பிட்டாள்.

''ஹலோ...''

''....''

''...கோபமா?''

''நான் யார் உன்னிடம் கோபித்துக் கொள்ள? அதற்கெல்லாம் எனக்கு ஏது உரிமை?''

''ப்ளீஸ்... இந்த மாதிரிப் பேசாதீர்கள். நான் பேசினது தப்புதான். ஐ'ம் ஸாரி.''

''....''

''ஆத்மா...''

''ம்...''

''ஒன்று சொல்லட்டுமா? உங்களுக்கு சந்தோஷமாய் இருக்குமா?''

''என்ன?''

''இப்போது நான் ரொம்ப சந்தோஷமாக இருக்கிறேன்.''

''ஏனாம்?''

''உங்களுக்குத் தெரியாதா?''

''தெரியாது சித்ரு.''

''தெரியாவிட்டால் போகட்டும்.''

''ஓ.கே. நான் சொல்கிறேன்... யூ ஆர் இன் லவ்.''

சமயம் பார்த்து ஆத்மா குண்டைப் போட்டான். 'காதலா? எனக்கா? ஆத்மா பேரிலா? நிஜம்தானோ?'

''நான் சொல்வது தப்பா?''

''...''

''ஏய்... பதில் சொல்லேன்...''

''நான் ஏற்கெனவே கல்யாணமாகி, ஒரு குழந்தைக்குத் தாய் ஆத்மா. எனக்கு நீங்கள் சொல்வது உண்டாவது சாத்தியமா?''

''ஏன் சாத்தியமாகாமல்? நீ நம் புராணக் கதைகள் படித்திருக்கிறாய் அல்லவா? திரௌபதி கதை தெரியாது? அவளால் ஐந்து புருஷன்களை ஒரே சமயத்தில் மணந்து காதலித்து வாழ முடியுமானால் உன்னால் இருவரைக் காதலிக்க முடியாதா? டார்லிங் சித்ரு... யோசி.''

''திரௌபதி தெய்வீகத்தன்மை கொண்டவள். நான் சாதாரண மனுஷி. நீங்கள் ஒப்பிடுவது தப்பு ஆத்மா!''



''மண்ணாங்கட்டி... அவளும் பெண், நீயும் பெண். அவளால் முடிந்தால், உன்னால் என் முடியாது? சரி அதை விடு. ஒரு தாய்க்கு நாலு குழந்தைகள் இருந்தால் அவள் நாலையும் ஒரே மாதிரிதானே நேசிக்கிறாள்? அதனால், ஒரு குழந்தை மேல் வைத்த அன்பைக் குறைக்காமல் இன்னொரு குழந்தையை நேசிக்க முடிகிறது அல்லவா? இதுபோலத்தான் கணவனிடம் செலுத்தும் அன்பும். ஒருவனின் மேல் செலுத்தும் காதலைக் கடுகத்தனையும் குறைக்காமல், இன்னொருவனையும் காதலிக்க முடியும். பெண் மனம் இயற்கையின் அற்புதங்களில் ஒன்று சித்ரு.''

ஆத்மா திறமையாய் சித்ராவை 'ப்ரெய்ன் வாஷ்' செய்தான்.

''தாய் அன்பு வேறு, கணவன் அன்பு வேறு இல்லையா?''

''அடிப்படைக் காதல் ஒன்றுதான். அதைப் பார்க்கும் கோணம்தான் வித்தியாசம்.''

ஒரு நிமிஷம் மௌனமாய் இருந்தாள் சித்ரா. பின்பு ''நாளைக்கு இவரை எப்படிப் பார்ப்பேன்? சங்கடமாய் இருக்கிறது ஆத்மா'' என்றாள்.

''என்ன சங்கடம்? இங்கும் திரௌபதியை வழிகாட்டியாக எடுத்துக் கொள். ஒரு கணவனிடம் இருக்கும் போது மற்றவர்களை மனசிலிருந்து அகற்றி தன் பதிவிரதாத் தனத்தை அவள் நிரூபித்தாள் என்கிறது புராணம். அவனோடு இருக்கும் போது என்னை நினைக்காதே. என்னோடு இருக்கும் போது அவனை நினைக்காதே. ரொம்ப சிம்பிள்.''

''திரௌபதிக்குப் பாண்டவர்கள் அக்னி சாட்சியாய்த் தாலி கட்டியவர்கள். அவர்களுக்கு என்று தனி நீதி இருந்தது. ஆனால்... ஆனால்... நான்.''

''தாலி கட்டினால்தான் மனைவியா சித்ரு? என் மனசில் நான் உன்னை சாருவின் இடத்தில் ஏற்றுக் கொண்டு விட்டேன். நீ என்ன நினைத்தாலும் எனக்கு அக்கறை இல்லை.''

''ஆத்மா...''

''எஸ்... ஐ லவ் யூ. புரிகிறதா? இப்போது நிம்மதியாய்த் தூங்கு. நாளைப் பொழுதை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். ஓ.கே. டார்லிங்; குட் நைட்...!''

சித்ரா பிரமித்து உட்கார்ந்திருக்கையிலேயே போனை வைத்து விட்டான் ஆத்மா.

'திரௌபதி உதாரணம், ஐ லவ் யூ என்ற வார்த்தைகள் சித்ராவை ஏகமாய்க் குழப்பி மூளை சலவை செய்யும்.'

'டேய் - பாஸ்..! உன் பெண்டாட்டியின் கற்பில் பாதியைச் சூறையாடி விட்டேனடா? இன்னும் கொஞ்சம் தான் - நீ அவமானத்தால் குன்றிப் போகும் நாள் தொலைவில் இல்லையடா!''

டெல்லியிலிருந்து திரும்பிய பாஸ்கருக்குத் தலைக்கு மேல் வேலை. அதில் ஆழ்ந்து போனதால்தான், சித்ராவினிடத்தில் வெளிப்படையாகத் தெரிந்த மாறுதல்களை கவனிக்கத் தவறி விட்டானா?

இல்லை... டெல்லியிலிருந்து புதுசாய் ஏற்பட்ட ஏர் ஹோஸ்டஸின்

சிநேகிதத்தில், அது தந்த கிளுகிளுப்பில், மீண்டும் டெல்லிக்குப் போகும் போது அதை அனுபவிக்கப் போகும் எதிர்பார்ப்பில், தன் மனைவியைக் கூர்ந்து பார்க்க மறந்து விட்டானா?

யாரைச் சொல்லி என்ன?

விதி ஆத்மாவின் ரூபத்தில் சித்ராவோடு விளையாட ஆசைப்படுவதை யார் தடுக்க முடியும்? இல்லை, மாற்றத்தான் இயலும்?

நாலு நாட்கள் சென்னை வேலையைக் கவனித்து விட்டு, பாஸ்கர் டெல்லிக்கு மறுபடியும் புறப்பட்டுப் போனான். போன முறை மாதிரி இரண்டு அல்லது மூன்று நாட்களிலேயே திரும்பி வந்துவிட வேண்டிய வேலை நிர்ப்பந்தம் இருக்கிறது.

இந்த இரண்டு நாட்களுள் கல்லை எறிந்து, மாங்காயைக் கீழே தள்ளினால்தான் ஆத்மா கெட்டிக்காரன்.

அப்புறம் அவகாசமும் இருக்காது. கெடுவும் முடிந்து விடும்.

பாஸ்கர் ஊரில் இருந்த நாலு நாட்களும், ஆத்மா வெகு சாமர்த்தியமாய் அவன் வீட்டுக்கு வராமல் டபாய்த்து விட்டான். இதற்குக் காரணங்கள் பல.

நண்பனைப் பார்த்தால், கடைசி நிமிஷத்தில் உள்ளே அடக்கி வைத்திருக்கும் நியாய தர்மங்கள் தலைதூக்கித் தன்னை ஒன்றுக்கும் இயலாதவனாக ஆக்கி விடலாம்.

பாஸ்கரைச் சந்திக்காமல் இருந்தால், தான் இருக்கும் போதே இங்கு வராதவன், இல்லாத போது இந்தப் பக்கமே தலைவைத்துப் படுக்க மாட்டான் என்ற எண்ணம் அவனுக்கு வரலாம்.

சுந்தர் போன வாரம் போன் செய்து, 'உன்னைப் பார்க்கவே முடிவதில்லை' என்று புகார் செய்தவன், 'பாஸ்கர் ஊரில் இல்லை. சித்ரா தனியாக இருப்பாளே, உமாவோடு அங்கு போகலாமா?' என்று கேட்ட போது, ''நான் முடிந்தால் வருகிறேன் - நீங்கள் வேணுமானாலும் போய் வாருங்கள். எனக்குக் கம்பெனி விஷயமாய் ரொம்ப அலைய வேண்டி இருக்கிறது. பத்து நாட்களாய் வேலை அதிகம். உடம்பு ஓய்ந்து போகிறது. ஸுமனாக் குட்டியைப் பார்த்தே எத்தனை நாட்களாகின்றன தெரியுமா?'' என்று ரொம்ப நல்ல பிள்ளையாகப் பேசி விட்டான்.

அவன் அதிருஷ்டம், வீட்டு ஆட்களும் ஆத்மாவோடு ஒருநாள் சித்ரா வெளியில் போனது மனசுக்குள் தப்பாகப் படாததால், அதுபற்றி யாரிடமும் பேசவில்லை.

ஆக, இவன் சித்ராவோடு அதிகம் பழகுவது நெருங்கிய நண்பர்களுக்குத் தெரியாமல் சாமர்த்தியமாக நடந்து கொண்டான்.

யாருக்குத் தெரிந்தாலும் பரவாயில்லை. விஷயம் முடியும் வரை பாஸ்கர் மனசில் சந்தேகம் தோன்றக் கூடாது.

பாஸ்கர் டெல்லிக்குப் போனது வியாழன் காலை. அன்று மாலை, கை கொள்ளாத பரிசுப் பெட்டிகளுடன் சித்ராவைக் காண வந்தான் ஆத்மா.

ஸுமனாவுக்கு இரண்டு பொம்மைகள். சித்ராவுக்கு நாலு லேடி ஹாமல்டன் புடவைகள்.



''எதற்காக ஆத்மா?'' - நாலு நாட்களாய் ஆத்மாவைப் பார்க்காத தாபம் சித்ராவுக்கு இருந்தது.

''எனக்கும் யார் இருக்கிறார்கள் - உன்னைத்தவிர'' என்றான்.

''ஏன் இவர் இருந்த போது வரவில்லை? ஆட்கள் ஏதாவது தப்பாக நினைக்கப் போகிறார்களோ!''

''கவலைப்படாதே! அதற்கு வழி வைத்திருக்கிறேன்,'' என்றவன், வீட்டு ஆட்கள் காதில் விழும் தினுசில், ''நாலு நாட்களாய் ஸுமனாவைப் பார்க்காததில் கண் பூத்துப் போய் விட்டது சித்ரா. அம்மாவுக்கு உடம்பு சரியில்லை என்று பார்க்கப் போனேன். அங்கு எதிர்பாராமல் நாலு நாட்கள் தங்கி விட்டேன். ஆமாம்... பாஸ்கர் எங்கே இன்னுமா கோர்ட்டிலிருந்து வரவில்லை?'' என்று ஒரு குட்டி நாடகமே ஆடினான்.

பின்பு வரவேற்பு அறையில் கிடைத்த தனிமையில் சித்ராவை ஆரத் தழுவி முத்தமிட்டான்.

''ஐ மிஸ்ட் யூ ஸோ மச்'' என்று காதுக்குள் முணுமுணுத்தான்.

பெனஸ் காரை, டிரைவரை விட்டு எடுக்கச் சொல்லி ஆயா, ஸுமனா, சித்ரா சகிதமாய் பீச்சில் சுற்றிவிட்டு வந்தான்.

திரும்பத் திரும்ப - காரில் போகும் போது, ''இந்த பாஸ்கருக்கு டில்லியில் அப்படி என்ன தலை போகிற வேலை? நான் ஊரிலிருந்து வந்த பிறகு என்னைப் பார்த்து விட்டுப் போகக் கூடாதா? சே... அவனைப் பார்த்து பத்து நாட்களாகின்றன சித்ரா'' என்று உரக்க அங்கலாய்த்துக் கொண்டான்.

வீட்டுக்கு வந்தார்கள். சமையல்காரனையும், டிரைவரையும் அழைத்து, ஆளுக்கு ஒரு பார்க்கர் பால்பாயிண்ட் பேனாவைக் கொடுத்து, ''ஊருக்குப் போயிருந்த போது என் அத்தை பிள்ளையைப் பார்த்தேன். ஜப்பானில் வேலை பார்க்கிறான். ஆறு பால்பாயிண்ட் பேனாக்களைத் தூக்கிக் கொடுத்து விட்டான். நான் என்ன பண்ணப் போகிறேன்?'' என்றான்.

பார்க்கர் பேனா! சுலபத்தில் கிடைக்குமா?

அவர்களுக்கு வாயெல்லாம் பல்.

''ஆத்மா ஐயா மாதிரி உண்டா? நம்ப ஐயாவுக்குக் கூடப்பிறந்த பொறப்பு இல்லேங்கிற குறை இல்லை'' என்று ஒருத்தருக்கொருத்தர் பேசிக் கொண்டார்கள்.

சாப்பிட்டபின் ஹாலில் அமர்ந்த போது, சித்ராவிடம் மறுநாள் அவன் செய்ய விரும்புவதைச் சொன்னான்.

''நாளைக்கு வெள்ளிக்கிழமை. உன்னோடு அஷ்டலட்சுமி கோவிலுக்குப் போய்விட்டு அப்படியே தனியாய் பீச்சில் கொஞ்ச நேரம் இருக்க வேண்டும் போல இருக்கிறது. வருவாயா?'' என்றான்.

சித்ரா சம்மதித்தாள்.

ஆட்கள் அறியாமல் எப்படிப் போவது என்பதைப் பற்றி வெகுநேரம் யோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

சித்ராவின் சிநேகிதி ஒருத்தி மாண்டியத் கோர்ட்டில் இருப்பதாகச் சொல்லி, அவளை லாவண்யா, ஆயாவுடன் காரில் கிளப்ப வேண்டும். மாண்டியத் கோர்ட் பல மாடிகளைக் கொண்ட கட்டிடம். ஒவ்வொரு மாடியிலும் பல பிளாட்கள் உண்டு. அதனால், அவள் எங்கு போகிறாள், என்ன செய்கிறாள் என்பதை டிரைவரால் அறிய முடியாது. காரிலிருந்து இறங்கிய பின் நினைத்துக் கொண்டு, "சிநேகிதி ஆபரேஷன் செய்து படுத்திருக்கிறாள். கத்தல இரைச்சல் இல்லாமல் கொஞ்ச நாழிகையாவது அவளுடன் இருக்க வேண்டும்; குழந்தை அங்கு வர வேண்டாம். ஆயாவையும், குழந்தையையும் மெரினாவுக்கு அழைத்துப் போய், ஒரு மணி நேரம் கழித்து வீட்டில் விட்டுவிட்டு, உன் வீட்டுக்குப் போய் விடு. நான் சிநேகிதியின் காரில் வந்து விடுகிறேன்" என்று சொல்லி அனுப்பிவிட வேண்டும்.

அந்தக் கார் அப்படிப் போனால், இந்தப் பக்கமாய் ஆத்மா வந்து அவளை அழைத்துக் கொள்வான்.

யார் கண்ணிலும் படாமல் இருக்க முடியுமா?

தான் சிநேகிதி வீடு, அது, இது என்று ஒருநாளும் போனவளில்லையே! அன்று சாந்திக்கு வந்ததே அதிசயம்.

ஆட்கள் நம்புவார்களா? ஒன்று கிடக்க ஒன்றாய் பாஸ்கரிடம் சொல்லிவிட்டால்?

ஆத்மா ஒரேயடியாய் 'எல்லாம் சரியாக நடக்கும்', என்று அடித்துப் பேசியதால் சித்ரா சம்மதித்தாள்.

மறுநாள் திட்டப்படி எல்லாம் கச்சிதமாய் நடந்தது—

மாண்டியத் கோர்ட்டுக்கு வந்தது, வண்டியைத் திருப்பி அனுப்பியது, ஆத்மாவோடு புறப்பட்டது, தெரிந்தவர்கள் யாரும் எதிரில் வராதது எல்லாம்.

அஷ்டலட்சுமி கோவிலை இவர்கள் அடையும் போது கூட்டம் அதிகம் இல்லை.

கடற்கரைக் காற்று மனதை அள்ளியது.

படிகளில் ஏறி ஒவ்வொரு லட்சுமியாய்த் தரிசனம் செய்து கொண்டார்கள்.

மகாலட்சுமியின் சன்னிதானத்தில் நின்றதும், சுற்றிலும் ஒருமுறை பார்த்து தெரிந்தவர்கள் யாரும் நிச்சயமாய் இல்லை என்று ஊர்ஜிதம் செய்து கொண்டு, கையில் இருந்த குங்குமத்தை எடுத்து சித்ராவின் வகிட்டில் இட்டான் ஆத்மா.

பின்பு காரில் ஏறி முட்டுக்காடு வீட்டை நோக்கி ஓட்டினான்.

சித்ரா ரொம்ப சந்தோஷமாய் இருந்தாள். சில நாட்களாக இதுகாலம் அவள் உணர்ந்த உணர்வுகளெல்லாம் உடலில் புகுந்து கொண்டு சதா தாண்டவமாட, அவள் ஒரு புது உலகில் நடமாடினாள்.

கண்ணாடி முன் அடிக்கடி நின்றாள்; முகத்தை பல முறைகள் கழுவிச் சிங்காரித்து எப்போதும் பூத்த மலரின் மலர்ச்சியுடன் இருக்க விரும்பினாள். நடையில் ஒரு துள்ளல், வயசில் சில வருஷங்கள் குறைந்துவிட்ட பிரமை.

அவ்வப்போது லேசாய் முணுமுணுத்த குற்ற உணர்வுகளை, ஆத்மா சொன்ன திரௌபதி உதாரணத்தைக் காட்டி அடக்க அவள் ஏற்றுக் கொண்டு விட்டாள்.



உடம்பும், அதன் ஆசாபாசங்களும் தலையெடுத்த பிறகு, புத்திக்கோ, நிதானத்துக்கோ அங்கு இடம் ஏது?

கார் புதுப்பாதை ஒன்றில் போவதைக் கண்டு, "எங்கு போகிறோம், ஆத்மா?" என்றாள்.

குறும்பாகச் சிரித்தான் ஆத்மா.

அவள் கையை எட்டி எடுத்து, விரல்கள் ஒவ்வொன்றாக முத்தமிட்டான்.

"கிட்டத்தில் வாயேன்; ஏன் அத்தனை தொலைவில் உட்கார்ந்திருக்கிறாய்" என்று, இடது கையால் அவளை இழுத்து அணைத்தான்.

பயம் விலகி, அனுபவிக்கும் பக்குவம் வந்து விட்டதால் சித்ரா மயங்கிச் சிரித்தாள்.

முதல் நாள் ஆத்மா வாங்கித் தந்த புடவைகளில் ஒன்றை உடுத்தியிருந்தாள். நெற்றியில் சற்றுமுன் கோவிலில் அவன் இட்ட குங்குமம் மிளிர்ந்தது.

வஞ்சம் தீர்க்கும் திட்டத்தின், மூன்று மாச கால கடுமையான உழைப்பின் இறுதிக்கட்டத்தை நெருங்கி விட்டதால், பொழுது விடிந்ததிலிருந்தே ஆத்மாவினுள் ஒருவித வெறி நிமிஷத்துக்கு நிமிஷம் வளர்ந்து கொண்டிருந்தது.

இன்னும் இருபது மணி நேரங்கள் - இன்னும் பத்தொன்பது மணி நேரங்கள் என ஒவ்வொரு மணியாய்க் கழிந்து வந்து, இப்போது 'இதோ இன்னும் ஒரு மணியில்' என்ற வேகம் பிறந்து அவனை அலைக்கழித்தது.

எல்லாம் நினைத்தபடி நடக்க வேண்டும். நான் ஆண்மை நிறைந்தவன் என்பதை நிரூபிக்கும் நிமிஷம் வந்து விட்டது. நாளை சாயங்காலம் பாஸ்கரிடம் சென்று 'யூ ஸ்கௌண்ட்ரல்... அன்று என்ன பேச்சுப் பேசினாயடா? இன்று உன் நிலைமையைப் பார்த்தாயா?' என்று கொக்கரிக்க வைக்கப் போவது நிறைவேற இன்னும் ஒரு மணியோ, இல்லை அரை மணியோ!

முட்டுக்காட்டுக்கு முதல்நாள் வந்து ஏற்பாடுகளைச் செய்து விட்டிருந்தான். யாரும் அங்கு வரமாட்டார்கள்.

வடிவேலு, 'ஷாம்பெயி'னை ஐஸ் பக்கெட்டில் வைத்து உட்லண்ட்ஸ் சாப்பாட்டுடன் தயாராய் இருப்பான்.

வீடு வந்து விட்டது.

தூரத்தில் வீட்டைப் பார்த்ததுமே சித்ரா பயந்தாள்.

"இது யார் வீடு?"

"எங்க கம்பெனி வீடு; இதில் யாரும் இல்லை. பயப்படாதே."

பீச்சுக்குப் போய்க் கையைப் பிடித்து, முத்தமிட்டுக் கொஞ்சம் பழகுவான். பிறகு திரும்பி விடுவோம் என்று நினைத்திருந்த சித்ராவுக்கு அத்துவான காட்டில் ஒரு வீட்டைப் பார்த்ததும், ஆத்மா என்ன செய்ய முயற்சிக்கிறான் என்பது புரியத் தொடங்கியது.

"வேண்டாம் ஆத்மா... இது தப்பு!"

"எது தப்பு?"

"ப்ளீஸ்... திரும்பிப் போயிடலாம்... ப்ளீஸ்..."

கார் காம்பௌண்டுக்குள் நுழைந்து போர்டிகோவில் நின்றது.

காரிலிருந்து இறங்கிய ஆத்மாவையும், பெண்ணையும் பார்த்த வடிவேலுவுக்கு சுருக்கென்றது. 'கடைசியில் இவரும் இப்படிப்பட்டவர்தானா?' உள்ளே போனார்கள்.

வடிவேலுவை அழைத்தான் ''நீ வெளியில் போய்விட்டு ஒன்பது மணி போல வா'' என்று சொல்லி, நூறு ரூபாய் பணத்தை எடுத்துக் கொடுத்தான் ஆத்மா.

அவன் போய்ச் சேர்ந்தான்.

சித்ராவின் முகம் வெளிறிக் கிடந்தது.

''பயப்படாதே சித்ரா. உன்னை ஒன்றும் பண்ண மாட்டேன். ஒரே ஒரு நாளாவது உன்னை என் மனைவி ஸ்தானத்தில் பார்க்க எனக்கு ஆசையாய் இருக்கது. எனக்கு உணவு பரிமாறி, என்னோடு பக்கத்தில் உட்கார்ந்து நீ பேசினால் போதும். வேறு ஒன்றும் வேண்டாம். செய்வாயா?'' என்று மெல்லப் பேசி, அவளை நெருங்கி ஆரத் தழுவி மென்மையாய் முத்தமிட்டான்.

மனசு வேண்டாம் என்றாலும், உடல் இதெல்லாம் வேண்டும் என்றதால், சித்ரா அவன் பிடிக்குள் அடங்கிப் போனாள்.

ஆத்மாவின் விருப்பம் போல, அவன் சாப்பிட சித்ரா உணவு படைத்தாள்.

''இந்தப் புடவையில் நீ தேவதை மாதிரி இருக்கிறாய் சித்ரு'' என்றான்.

''அக்னி சாட்சியாய் பாஸ்கர் உனக்குத் தாலி கட்டினான். நான் அம்மன் சன்னதியில் குங்குமம் இட்டுவிட்டேன். போதும் அல்லவா?'' என்றான்.

''இந்த ஒருநாள் போதும் எனக்கு'' என்றான்.

சாப்பாடு பரிமாற விடாமல் சில விஷமங்கள் செய்தான்.

என்னென்னவோ செய்து, பேசி, சித்ராவை உணர்ச்சிக் கடலாக்கினான்.

சாப்பாடு ஆனதும், ஷாம்பெயினை ஊற்றி, 'எனக்காகக் குடி. இது திராட்சை ரசம். குடி அல்ல' என்று கெஞ்சி அவளைச் சம்மதிக்க வைத்தான்.

''இதெல்லாம் தப்பு... ரொம்ப தப்பு... வேண்டாம் ப்ளீஸ்... ப்ளீஸ்...'' என்று நடுநடுவில் சித்ரா கெஞ்சினாலும் நிமிஷங்கள் கரைய ''நீ என் மனைவி, நான் உன் கணவன். இதில் தப்பு என்ன? இந்த இன்பத்தை ரசிக்கக் கற்றுக் கொள். பயத்தை உதறு. உன்னை முழுசுமாய்க் கொடு. அந்த சுகானுபவத்தை உணரப் பார் சித்ரு...'' என்று கிசுகிசுத்ததில் நெகிழ்ந்து, உருகி, அவனோடு இரண்டறக் கலக்கத் தயாரானாள்.

இன்னும் பத்து நிமிஷம், ஒன்பது நிமிஷம் - ஆத்மா சபதத்தை நிறைவேற்றி விடுவான்.

'பாஸ்கர். யூ பாஸ்டர்ட். என்னைப் பார்த்தா அப்படி ஒரு கேள்வி கேட்டாய்?'

'அதன் பலனைப் பார்.'

'இதோ உன் மனைவியை நான் அனுபவிக்கிறேனே. இதைவிட அவமானம் உனக்கு வேறென்ன வேண்டும்?'

'எத்தனை சம்பாதித்து என்ன பயன்?'

'நான் பெரிய வக்கீல் என்று மார்தட்டி என்ன பயன்?'



'உன் பெண்டாட்டியை உன்னால் உன்னிடம் தக்க வைக்க முடியவில்லையே.'

'இதோ... என்னிடம் கரைவது, என்னோடு சங்கமிப்பது உன் மனைவியடா.'

'உன் மாதிரி அயோக்கியனுக்கு இந்தப் பாடம்தான் சரி.'

'நாளைக்கு... நீ டெல்லியிலிருந்து வந்ததும், உன்னிடம் சொல்லப் போகிறேன். 'நானாவது சாரு செத்ததனால் மனைவியை இழந்தேன். ஆனால் நீ உன் மனைவியை என்னிடம் உயிரோடு பறிகொடுத்து விட்டு நிற்கிறாயே. நீ ஒரு ஆண் பிள்ளையா? உனக்கு வெட்கமாயில்லை, சே. தூ!' என்று உன் முகத்தில் காறி துப்பப் போகிறேன்.'

'நானே புத்திசாலி.'

'நானே மஹா ஆண்மை பொருந்தியவன். நானே... நானே...'

ஆக்ரோஷமும், துடிப்பும் மெல்ல மெல்ல அடங்குகின்றன.

சோர்வு - அமைதி - நிம்மதி.

ஒரு பக்கமாய் உருண்டு ஆயாசத்துடன் கண்களை மூடிக் கொள்ளும் ஆத்மா சின்னதாய் எழும் சப்தம் கேட்டு திடுக்கிடுகிறான்.

என்ன ஓசை அது?

விசும்பல்களா? அழுகையா?

யார்? சித்ராவா? அழுகிறாளா?

ஏன்?

இருள் சூழ்ந்த அறையில் ஜன்னல் வழியாக நிலவொளி வீசியதில் ஆத்மா திரும்பிப் பார்க்கிறான்.

ஒருக்களித்துப் படுத்திருக்கும் சித்ரா, குலுங்குவது தெரிகிறது.

முதலில் சின்னதாய் ஆரம்பித்த விசும்பல்கள், மெல்ல மெல்லக் கேவல்களாய் மாறுகின்றன.

''ஆ... ஆ... அம்மா...''

குமுறிக் குமுறி அழும் சித்ரா துக்கம் தாளாமல் புடவைத் தலைப்பை வாயில் திணித்துக் கொண்டு ஓசையைக் கட்டுப்படுத்த முயற்சிக்கிறாள்.

முடியவில்லை.

கண்கள் கடலாகின்றன. கன்னத்தில் ஓடும் கண்ணீர் நதிகளாகின்றன.

சித்ரா ஏன் அழ வேண்டும்?

சற்றுமுன் வரையில் சிரித்து மலர்ந்தவளுக்கு ஏனிந்த விசனம்?

மங்கிய நிலவொளியில் வாய்வார்த்தைகளால் ஏதுமே பேசாமல் புலம்பி புலம்பி அழும் சித்ராவின் சோகம், ஆத்மாவின் நெஞ்சை அதிர வைக்கிறது.

சித்ரா என்று அழைக்க எண்ணம்... நா அசையவில்லை.

கரைபுரண்டு ஓடிய அந்தக் கண்ணீர் 'என்னைப்பார், நன்றாகப் பார், என்னை அடையாளம் தெரியவில்லை?' என்று கேட்பது போன்ற பிரமை.

இந்தக் கண்ணீரை ஆத்மா பார்த்திருக்கிறான். ஆமாம், சத்தியமாய்.

எங்கே, எப்போது?

இதே திருச துக்கத்தை முதன் முதலில் ஆதமா கண்ட போது அவனுக்கு வயசு என்ன? ஏழு எட்டு?

அரவங்காட்டு அமைதியான இரவு.

பாதி தூக்கத்தில் எழுந்து கொண்ட ஆதமா, இனம்புரியாத அழுகைக் குரல் கேட்டு அதை நோக்கிப் போகிறான்.

பெற்றோரின் அறையிலிருந்து வந்தது அந்த அழுகை.

கதவில் தாள் இல்லை.

எட்டிப் பார்த்தான்.

கட்டிலில் அப்பா, அவர் மடியில் தலை வைத்துக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழும் அம்மா.

"இனிமேல் எனக்குக் குழந்தையே பிறக்காது என்று டாக்டர் சொன்னாரே... நீங்கள் ஆசைப்பட்ட பெண் குழந்தையை என்னால் உங்களுக்குக் கொடுக்க முடியவில்லையே. உங்களை ஏமாற்றி விட்டேனே" என்று பீறிட்டு எழும் அழுகையூடே அம்மா பேசினாளே.

எட்டு மாச கர்ப்பமாய் இருந்த அம்மா, முந்தின வாரம் தடுக்கி விழுந்ததில் வயிற்றில் பெண் குழந்தை இறந்து பிறந்ததுமில்லாமல் இனி அம்மா உண்டாகவே முடியாது என்று வைத்தியர் சொல்லிவிட்டதனால், அப்பா ரொம்ப ஆசைப்பட்ட பெண் குழந்தையைத் தராமல் ஏமாற்றி விட்டோமே என்று அன்று - அம்மா அழுத கண்ணீர் ஆதமாவினுள் உறைந்துபோன கண்ணீர்.

பின்பு - இவனுடைய சாரு - அந்த மென்மையான மலர், ரத்த வாந்தி எடுத்துவிட்டுக் காரில் போகும் நாழிகையில் சில நிமிஷங்கள் பிரக்ஞை திரும்பின போது இப்படித்தானே குமுறிக் குமுறி அழுதாள்!

ஓடும் காரில், இவன் முகத்தை கிட்டத்தில் இழுத்துக் கொண்டு, 'உங்களை ஏமாற்றி விட்டுப் போகிறேனே' என்று நெஞ்சமே உருகிக் கண்களில் நீராகக் கொட்ட அழுத அழுகையும் இப்போது சித்ரா அழுவதும் ஒன்று தானே!

'பெண் குழந்தை கொடுக்காமல் கணவனை ஏமாற்றி விட்டோமே' என்று அம்மா அன்று சிந்திய கண்ணீர்.

'எத்தனையோ ஆசைக் கோட்டைகளைக் கட்டி வாழ்க்கையைத் தொடங்கும் கணவனை ஏமாற்றிவிட்டுத் தனியனாய் தவிக்கவிட்டு நாம் மரிக்கிறோமே' என்று அன்று சாரு வெளியிட்ட கண்ணீர்.

'அக்னி சாட்சியாய்த் தாலி கட்டின புருஷனுக்குத் துரோகம் செய்து, இன்னோர் ஆணோடு கலந்து, கணவனை ஏமாற்றி விட்டோமே' என்று இன்று சித்ரா பெருக்கும் கண்ணீர்.

எல்லாம் ஒன்றுதானா? கணவனை ஏமாற்றிவிட்ட உணர்வில் பெருகும் கண்ணீரா?

அடிபட்ட வேங்கையாய், நாகமாய், பழிவாங்கும் வேட்டை நாயாய், புத்தி



மழுங்கி, நியாய அநியாயங்களை எட்டி உதைத்து, எடுத்த சபதம் ஒன்றை நிறைவேற்றும் குறி மட்டுமே சதா சர்வகாலம் நினைப்பாய் ஆகாமிக்க - மூன்று மாசங்களைக் கழித்துவிட்ட ஆதமா, அந்த வெறி அடங்கிய அமைதியில், தான் செய்த காரியத்தின் விளைவின் ஸ்வரூபத்தை முதன் முறையாகப் புரிந்து கொண்டான்.

"அ... ஆ... அம்மா..."

சித்ராவின் கேவல்கள் இதயத்தைப் பிளந்தன.

'என்ன காரியம் செய்து விட்டேன்?'

'அவளை நினைத்து, உரலை இடித்து, அதற்கல்லவா காயத்தை உண்டு பண்ணி விட்டேன்?'

'பாஸ்கரைப் பழி தீர்ப்பதாக எண்ணி எதும் அறியாத சித்ராவை அல்லவா நிலை குலையச் செய்து விட்டேன்?'

'பாஸ்கர் கேட்ட கேள்விக்கு அவன் மேல் பாய்ந்து புரட்டித் தள்ளி இருந்தால் நியாயம்.'

'பதுங்கிப் பதுங்கி அவன் மேல் பாயாமல் சித்ராவைக் குதறி விட்டேனே இது என்ன தர்மம்?'

'இனி என்ன நடக்கும்?'

'பாஸ்கரிடம் நான் கேட்க நினைப்பதைக் கேட்பேனானாலும் அதனால் அதிகமாய்ப் பாதிக்கப்படப் போவது யார்?'

'சித்ராதானே?'

'உணர்ச்சிகளுக்கு அடிமையாகி, என் செய்கைக்கு உடன்பட்டு, இப்போது தன் தவறை உணர்ந்து கணவனை ஏமாற்றி விட்டோம், துரோகம் செய்து விட்டோம் என்று பதறி அழுகிறாளே, இனி இவள் நிலை என்ன?'

'பாஸ்கரை தாக்குவதாக கணக்குப் போட்டு ஒன்றுமே அறியாத அப்பாவி சித்ராவை எனக்குப் பலி ஆக்கியதன் விளைவு தப்பாகி விட்டதே.'

'நான் போட்டது தப்புக் கணக்கா?'

'இரண்டும், இரண்டும் நாலு, நாலும் நாலும் எட்டு என்கிற வரை சரியாகக் கணக்குப் போட்ட நான், எட்டும் எட்டும் பதினைந்து என்று தப்புக்கணக்கல்லவா போட்டு விட்டேன்.'

'இதோ என் தப்புக் கணக்கின் முடிவாக இங்கு படுத்து உடல் குலுங்க, உள்ளம் ஓய அழுகிறாளே! இனி இவள் என்ன செய்வாள்?'

'கற்பை இழந்ததற்காகத் தற்கொலை செய்து கொள்வாளா?'

'அதற்கு ஓர் அசட்டுத் தைரியம் வேண்டுமே. அது சித்ராவிடம் இருக்கிறதா?'

'தற்கொலை செய்து கொள்ளவில்லை என்றால் என்ன செய்வாள்?'

'கண்ணாடியில் தன்னைப் பார்க்க நேரும் போது, குளிக்க உடைகளை உருவி தன் வெற்று உடம்பைக் காணும் போது, கணவனை எதிரும் போது, அவனோடு

பேசும் போது, படுக்கும் போது, குழந்தையைக் கொஞ்ச கையில் எடுக்கும் போது, அதற்கு உலகத்தின் தர்ம அதர்மங்களை விவரித்துச் சொல்லும் போதெல்லாம் தான் செய்த பாவம், மனசை உறுத்திக் கிழிக்க, அறுக்க, ஆயுசு பர்யந்தம் அல்லல்படுவாளா?'

'ஐயோ, சித்ரா!'

'இப்போது உதித்த ஞானோதயம் எனக்கு சற்று முன் தோன்றியிருந்தாலும் நீ காப்பாற்றப்பட்டிருப்பாயே!'

'என் தப்புக் கணக்குக்குப் பலியான ஒரே காரணத்திற்காக நீ ஏன் நிம்மதியை இழந்து, அணு அணுவாய்ச் சாக வேண்டும்?'

வாசல் கேட் சப்தமிடுகிறது.

வடிவேலு நடந்து வந்து போர்டிகோவில் ஏறுகிறான்.

ஆள் அரவம் கேட்டு வாய்க்குள் புடவையைத் திணித்துக் கொண்டு, இரண்டாக மடிந்து கொண்டு சித்ரா பாத்ரூமுக்குள் ஒடுகிறாள்.

பதினைந்து நிமிடத்தில், அவர்கள் கிளம்புகிறார்கள்.

ஒரு வார்த்தை? ஒரு பார்வை? ஒன்றுமில்லை.

காரின் சப்தங்களோடு அவ்வப்போது சித்ராவிடமிருந்து எழும் கேவல்கள் கலக்கின்றன.

பாஸ்கரின் வீட்டுக்குள் போகாமல் - கேட்டிலேயே வண்டியை நிறுத்துகின்றான் ஆத்மா.

இறங்கி, படீரென்று கதவை அறைந்து சாத்திவிட்டு, இவனை நிமிர்ந்து பார்க்காமல், திரும்பிப் பார்க்காமல் வீட்டுக்குள் ஓட்டமாய் ஒடுகிறாள் சித்ரா.

வண்டியைக் கிளப்பி, கமாண்டர்-இன் சீஃப் சாலையை நோக்கி ஓட்டும் போது, சித்ராவின் அழுகை ஆத்மாவுக்குக் கேட்டுக் கொண்டே இருக்கிறது.

'நீ என் மனைவி, நான் உன் புருஷன். புராண காலத்து திரௌபதி பஞ்ச பாண்டவருடன் வாழ்ந்த நிஜுசில், நீயும் உன் பதிவிரதாத் தன்மையுடன் எங்கள் இருவரிடமுமே வாழலாம்' என்றெல்லாம் பேசி விவாதித்து அவளை ஆட்கொண்டேனே... இனி அவளோடு எந்த வகையான தொடர்பை வைத்துக் கொள்வதாக உத்தேசித்தேன்?'

'சித்ராவை அபகரிக்கத் திட்டம் போட்ட நான், ஏன், அதற்கு அப்புறம் என்ன என்பதைப் பற்றி யோசிக்கவில்லை?'

'சித்ராவிடம் நான் பேசிய பேச்சுகளெல்லாம் பொய். 'ஐ லவ் யூ' என்று உருகியதெல்லாம் வெறும் வேஷம் என்ற உண்மையும் தெரிந்து போனால், இவள் இன்னும் நிலைகுலைந்தல்லவா போவாள்?'

'ஆக, எந்தவிதத்திலும் மன அமைதி இழந்து அல்லல்படப் போவது இந்த சித்ராதான்.'

'இதற்கெல்லாம் காரணம் நான்தானே?'

'கண்களைக் கட்டிவிட்ட குதிரையாய் - என் வெறி ஒன்றே காரணமாய், விளைவுகளைப் பற்றிச் சற்றும் சிந்திக்காமல் தப்புக் கணக்கைப் போட்ட நான், சித்ராவுக்கு இனி எப்படியாவது உதவுவது சாத்தியமா?'

தன் பிளாட்டை அடைந்து, சாவியினால் கதவைத் திறந்து உள்ளே வந்து நேராய் பெட்ரூமுக்குள் நுழைந்து கதவைத் தாளிட்டுக் கொள்கிறான் ஆத்மா.

'தற்கொலை பண்ணிக் கொள்ள சித்ரா பயந்து உயிர் வாழ்ந்தாலும், இனி ஆயுசுக்கும் என்னைப் பார்க்கும் போதெல்லாம் அவளின் மனசு ரம்பமாக அவளை அறுக்கும் அல்லவா?'

'நான் இல்லாவிட்டால்?'

'அவளின் பாவச் செயலை, அறிந்து, அனுபவித்த நான் மறைந்து போனால்?'

'உண்மை தெரிந்த ஒருவனும் போய் விட்டான்; வேறு யாருக்கும் இது தெரியாது' என்ற தைரியத்தில் கொஞ்ச நாட்களுக்குப் பிறகாவது சித்ரா குற்ற உணர்ச்சி இல்லாதவளாக வாழமாட்டாளா?'

பீரோவைத் திறந்து அதன் துணிகளுக்கடியில் புதைத்து வைத்த சாருவின் புகைப்படத்தை எடுக்கிறான்.

'தப்பு செய்து விட்டேன் சாரு. என்னை மன்னித்து விடு'.

டிரெஸ்ஸிங் டேபிள் டிராயரைத் திறக்கிறான். தூக்கம் வராத நாட்களில் போட்டுக் கொள்வதற்காக வாங்கின மாத்திரை பட்டி இருக்கிறது.

எடுக்கிறான்! எத்தனை என்று எண்ணாமல் அத்தனையையும் கையில் கொட்டி தண்ணீருடன் விழுங்குகிறான்.

சாருவின் புகைப்படத்தை அழுத்தமாய் மார்போடு அணைத்துக் கொண்டு படுக்கிறான். கண்களிலிருந்து கண்ணீர் கோடு கிழித்துக் கொண்டு இறங்குகிறது.

போட்ட தப்புக் கணக்குக்குப் பிராயசித்தம் செய்ய முன் வந்திருக்கிறான் ஆத்மா.

இதுவும் தப்புக் கணக்காக இல்லாமல், முடிவு அவன் விரும்பும் நிஜுசில் சரியான கணக்காக - சித்ராவுக்கு நிம்மதியைத் தரும் கணக்காக இருக்க வேண்டும் என்ற உண்மையான பிரார்த்தனையுடன், ஆத்மா நினைவு இழக்கத் தொடங்குகிறான்.

முற்றும்.